Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 21 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 மார்ச் 2022







## “இலங்கைத் தமிழருக்கென இத்தீவில் தாயகம் உண்டு, அதில் தமக்கென அரசை உருவாக்க உரிமையுடையவர்கள்”

எஸ். டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா

# இலங்கை வரலாற்றில் ரூபாவின் பாரிய வீழ்ச்சியின் எதிரொலி!!! இலங்கை இராணுவத்தின் கொடுப்பனவுகள் நிறுத்தப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன???




04.04.2009 அன்று ஆனந்தபுரம் பகுதியில் சிறீலங்கா படையினரின் நச்சுக்குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள்.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**


MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3


NISHANTHAN LAW OFFICE
SERVICES
Purchasing a Residential Property
Selling a Residential Property
Residential Mortgage Refinancing
Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)


Ideal Auto Tech
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3


LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1


A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு
தேடி வந்து
செய்து கொடுக்கப்படும்
வீடுகள், கொண்டோக்கள், வாடகை வசிபபிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam


Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment),
Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1647-278-3100


அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609


Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar ( C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com


GRAND OFFER
this Offer Only December 31st to January 31st, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
Large Format Digital Printing
Design Only
c $ 9.99 / Sq. Ft (c$ 34.99 / ft.)
1000
Business Cards
We print all kind of products
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side,10pt Card Stock
Call Me : Silver Print House - 647 712 1266


Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8


JRS AUTO TECH
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
OPEN FROM 9 AM - 9PM
AC $99.99 +
OIL CHANGE $39.99 +
USED TIRE $49.99 +
BRAKES JOB $249.99 +
Subas: 416-206-9489 Office: 416-628-4399
2655 Lawrence Ave., E, Unit 05, Scarborough ON M1P 2S2
JRSAUTOTECH@HOTMAIL.CA


வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan
Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488


Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயுட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086


MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM


ULAGA VANIKAM உலக வணிகம்
2023 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விருப்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரிமையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.**






**சங்கத்தமிழ்**

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**
437 345 4203

**மின்னஞ்சல்** (Email)
sangathamilcanada@gmail.com

**முகநூல்** (Facebook)
Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




### அமைதி, மென்மை, கடின உழைப்பு, போராளிகள் – மக்கள் மீது அக்கறை அஞ்சாமை இவற்றிற்கு இலக்கணமாக வாழ்ந்தவர்

# லெப். கேணல் ஜொனி




அமைதி, மென்மை, கடின உழைப்பு, போராளிகள் - மக்கள் மீது அக்கறை, அஞ்சாமை இவற்றிற்கு இலக்கணமாக வாழ்ந்தவர் லெப். கேணல் ஜொனி.

கேணல் கிட்டுவையும் லெப். கேணல் ஜொனியையும் அக்கால நிகழ்ச்சிகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. கேணல் கிட்டு பல்துறை ஆற்றலாளராக திகழ்ந்ததில் பக்கத்துறையாக விளங்கியவர்களில் ஜொனி குறிப்பிடத்தக்கவர்.

பருத்தித்துறை புலோலியில் சாரையடி என்ற ஊரில் 21.5.1962 இல் பிறந்தார். அவரது இயற்பெயர் விக்கினேஸ்வரன் விஜயகுமார். பல்கலைக்கழகத்தின் விவசாயப்பீட மாணவராக இருந்தபோது 1983 ஆம் ஆண்டு போராட்டத்தில் இணைந்து கொண்டார்.

சிறுவனாக இருந்தபோதே போராட்டத்திலே இணைய முற்பட்டபோது அவரது பெற்றோர் விரும்பாததால் கொழும்பில் படிக்க வைக்கப்பட்டார்.

ஆனால் 1983 ஆம் ஆண்டில் சிங்களவர்களால் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்ந்து போராட்டத்தில் இணைந்து கொண்டார். அக்கால கட்டத்தில் இந்தியா அதன் நலன்சார்ந்து தமிழீழ விடுதலைக்காகப் போராடிய அமைப்புகளுக்கு பயிற்சியைத் தர முன்வந்தது.

விடுதலைப் புலிகளின் 200 பேருக்கு 2 பிரிவுகளாகப் பயிற்சி அளித்தது. இந்தப் பயிற்சிக்காக ஜொனி இந்தியா சென்ற போது அவர் பயிற்சியில் பங்கேற்கவில்லை. தொலைத் தொடர்புத்துறையில் பயிற்சி பெற்று நாடு திரும்பினார்.

மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் பணியாற்றினார். அப்போது யாழ். குடாநாடு கட்டுப்பாட்டில் இல்லை. படையினர் எந்தநேரமும் எங்கும் செல்லலாம் என்ற நிலை இருந்தது.

ஒருமுறை வல்வெட்டித்துறை கெருடாவிலில் ஜொனியை படையினர் சுற்றிவளைத்து அடையாள அட்டையைக் கேட்டுள்ளனர். அப்போது தனது கைத்துப்பாக்கியை எடுத்துச் சுட்டுவிட்டு அவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

மேஜர் வாசுவும் ஜொனியும் படையினரை எங்கேயாவது தாக்க வேண்டும் என்ற முனைப்போடு இருந்தனர். கைக்குண்டுகளோடு படையினரைத் தேடித் திரிந்தனர். இவர்களை வளர்த்து விடுவதில் கேணல் கிட்டு பெரிய பங்காற்றினார். மேலும் ஜொனியை தனக்கு அடுத்த நிலை தளபதியாகவும் உருவாக்கி வைத்திருந்தார்.

படைநிலைகளைப் போய்ப் பார்ப்பது, போராளிகளைச் சந்திப்பது, களநிலைகளை அறிவது, போராளிகளின் நலன் பேணுவது, பயிற்சி வழங்குவது, புதிய புதிய படைக்கட்டமைப்பை உருவாக்க ஊக்கப்படுத்துதல், எமது கட்டமைப்புகளாக அப்போது இருந்த தும்பு தொழிற்சாலை, வெடிபொருள் உற்பத்தி சாலை ஆகியவற்றை நேரில் பார்வையிடுவது என்று ஜொனி பல பணிகளைச் செய்து வந்தார்.



ஜொனியைப் பொறுத்தவரை யாழ். குடாநாட்டில் அவருக்கு ஒவ்வொரு இடமும் தெளிவாகத் தெரியும். எல்லா இடம் பற்றியும் அவர் தரவுகளை வைத்திருந்தார். பொதுவாக கேணல் கிட்டு இல்லாத போது யாழ்ப்பாணத்தில் நடந்த தாக்குதல்களை ஜொனி வழிநடத்தினார். அந்தத் தாக்குதல்களில் கலந்து கொண்டார்.

10.4.1985 அன்று யாழ்ப்பாணம் காவல்துறை நிலையம் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கைப்பற்றப்பட்டது. அதற்கான வேவை ஜொனியும் லெப். வாசனும் செய்தனர்.

19.12.1984 அன்று தெல்லிப்பழை கட்டுவன் வீதியில் கண்ணிவெடித் தாக்குதலை நடத்தியவர் லெப். வாசன். இதில் கேணல் ஆரியப்பெருமா, 8 சிங்களப் படையினர் கொல்லப்பட்டனர்.

ஒருபுறம் சதுப்புநிலத்தையும் யாழ்ப்பாணடச்சுக் கோட்டையையும் மற்றொரு புறம் துரையப்பா விளையாட்டரங்க முன்புற பரந்தவெளி வியாட்டுத்திடலையும் கொண்டிருந்தது சிறீலங்கா காவல்துறை. கோட்டையிலிருந்தும் அதற்கு இலகுவாக உதவி கிடைக்கக்கூடியதாக இருந்தது.

அதைத் தவிர்த்து நூறு அடி தொலைவில் குருநகர் முகாம் இருந்தது. கோட்டை, குருநகர், யாழ். காவல்துறை மூன்றும் ஒன்றுக்கொன்று தேவையான போது உதவிகளைப் பெறுகின்ற வகையில்தான் இருந்தது. அத்துடன் இந்த யாழ்ப்பாண காவல்துறை நிலையம் பலப்படுத்தப்பட்டிருந்தது. அகழிகள் வெட்டப்பட்டு முட்கம்பி வேலிகள் போடப்பட்டிருந்தன. அதைச் சுற்றி கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தன. நடுவிலே 60 அடி உயர பாதுகாப்புக் கோபுரம் அமைக்கப்பட்டு இரவும் பகலும் காவல் காக்கப்பட்டது.

ஆனால் காவல்துறை நிலையம் மீது வெற்றிகரமாகத் தாக்குதல் நடத்தி அதை கைப்பற்றினர். இதற்கு ஜொனி மற்றும் வாசனின் பங்களிப்பு அளப்பரியது.

காவல்துறை நிலையம் கைப்பற்றப்பட்ட பின்னர் குருநகர் முகாம் மூடப்பட்டது. காவல்துறை நிலையம் கைப்பற்றப்பட்ட பின்னர்தான் யாழ்ப்பாணம் படிப்படியாக எங்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஒருமுறை கைக்குண்டு வெடித்தபோதும் கட்டுவன் சமரிலும் இந்தியப் படையுடன் சுதுமலையில் நடந்த தாக்குதலின் போது பாரூக் என்ற பெயரிலுமாக 3 முறை விழுப்புண் பெற்றவர் ஜொனி.

கட்டுவன் தாக்குதலின் போது நெற்றியின் உள் சென்ற ரவை காதின் வழியே வெளிவந்தது. அதனால் நெற்றியில் அவருக்கு மென்மையான தோலாக இருந்தது.

இந்தியாவுடனான சண்டையில் காயம்பட்ட பின்னர் அவர் இந்தியாவுக்குச் சென்றுவிட்டார். ஆனால் 1987 இல் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழம் திரும்பிய போது ஜொனியின் ஆற்றலைக் கண்டு அவருக்கு 90 பேர் கொண்ட அணியைத் தந்து ஒரு தாக்குதல் அணியாகப் பயிற்சி தந்து தாக்குதலில் ஈடுபடும்படி பணித்திருந்தார். முதன் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தாக்குதல் அணியாகக்கூட அது இருக்கலாம்.

இந்த அணியிலே சிலரை அச்சுவேலிக்கு அழைத்துச் சென்று அங்கு ஒரு தாக்குதலை மேற்கொண்டு 6 படையினரைக் கொன்று அங்கிருந்த படைக்கலன்களை ஜொனி கைப்பற்றி வந்தார்.

அதன் பின்பு அவர் இந்தியா சென்றுவிட்டார். இந்தியாவுடனான எங்கள் போர் வெடித்த போது ஜொனி இந்தியாவிலே இருந்தார்.

ஜொனி அங்கே இருந்தபோது மிகப்பெரிய அச்சுறுத்தலை இந்திய அரசு கொடுத்துவந்தது. மிக விரைவிலே நாங்கள் புலிகளை

அழித்துவிடுவோம் – தேசியத் தலைவரைக் கைது செய்வோம் அல்லது கொல்வோம் – அருகாமையில் சென்றுவிட்டோம் – நாளை பிடித்துவிடுவோம் என்றெல்லாம் பொய் களைக் கூறிக் கொண்டு இருந்தனர். ஆனா லும் அவர்கள் எட்டிய தொலைவில் இல்லை தான். மிக அருகாமையில்தான் இருந்தனர்.

தேசியத் தலைவரைப் பொறுத்தவரை இந்தப் போராட்டத்தை எந்த வகையிலும் விட்டுக் கொடுப்பதில்லை உறுதியோடுதான் இருந்தார்.

தான் இந்தப் போராட்டத்திலே கொல்லப் பட்டால் தன்னை தீருவிலிலே கொண்டு போய் எரிக்கும்படியும் போராளிகளுக்குக் கூறியிருந் தார். நானிருக்கும் வரை இந்தப் போராட் டத்தை நடத்துவேன். எனக்குப் பின்னால் வரு கிற தலைவர்கள் அடுத்த கட்ட முடிவுகளை எடுக்கட்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பார்.

குமரப்பா, புலேந்திரன் ஆகியோரை இந்தியா கொலை செய்தபோது தேசியத் தலைவர்கள் மிகவும் சினமடைந்து இருந்தார். அவர்கள் உயிரைத் தற்கொடையாக அளித்து வீரச் சாவைத் தழுவியபோது திட்டமிட்டு ஏமாற்றி கொலை செய்ததாக மிகவும் சினத்தோடு இருந்தார் தலைவர்.

அவர் உறுதியாக இருந்ததை அவருடன் இருந்தவர்கள் அறிவார்கள். ஆனாலும் அவர் கள் ஒருவித அச்சத்தோடு இருந்தார்கள். தேசியத் தலைவர் உயிருக்கு ஆபத்து வந்து விடும். எனவே இந்தியா சொல்கிறபடி ஒரு சில படைக்கலங்களைத் தந்தாவது அமைதியை நாங்கள் பேசலாம் என்று அவர்கள் எண்ணி னார். இந்த வகையில் கேணல் கிட்டு ஜொனி யை ஒரு சமாதானத் தூதுவனாக இந்தியா அனுப்பி வைத்தார்.

நெடுங்கேணியில் இந்திய வானுார்தியில் வந்திறங்கி அங்கிருந்து மறைமுகமாக விசு வமடு கரைக்கு அழைத்து வரப்பட்டார்.

மணலாற்றுக் காட்டிலிருந்து என்னை ஜொனி யை அழைத்துவர தலைவர் அனுப்பினார். மேஜர் தங்கேசுடன் நான் அவரை விசுவமடு வில் சந்தித்தேன்.

இரண்டு நாட்கள் நான் ஜொனியுடன் விசுவ மடுவில் இருந்தேன். அப்போது ஜொனி, தலைவரின் உயிருக்கு எந்தநேரமும் ஆபத்து வரப்போகிறது. எனவே நீங்கள் ஏதோ ஒரு வகையில் அமைதியைப் பேசி அதன்பிறகு ஒரு நிலை எடுக்கலாம் என்று சொல்லிக் கொண்டி ருந்தார்.

அவருக்கு இங்குள்ள நிலைமைகளைச் சொன்ன போது, அமைதி ஏற்பட சாகுவரை உண்ணாநிலைப் போராட்டத்தை இந்தியா வில் நடத்துவேன் என்றும் ஜொனி கூறினார். பிறகு நான் ஒரு இழுபறியுடன்தான் மேஜர் தங்கேசுடன் புறப்பட்டோம். போகின்ற வழி யில் இந்த இந்த இடங்களைச் சுட்டிக்காட்டி அங்கு இந்திய பாசறைகள் அமைக்கும், அங்கு உங்கு சுற்றி வளைக்கும் உணவுப் பிரச்சனை வரும் – தண்ணீர் பிரச்சனை வரும் என்றெல்லாம் கூறினார். அவர் கூறியது போல் பின்னர் இந்தியப் படை அந்த அந்த இடங்களில் எல்லாம் பாசறைகள் அமைத்தது உண்மைதான்.

நான் அவரைக் கூட்டிச் செல்லும்போது, “தலை வரைச் சந்தித்து பெரும்பாலும் உங்கள் கருத் துகளைச் சொல்லுங்கள் – சொல்வீர்களா என்று தெரியவில்லை – இருந்தாலும் சொல் லுங்கள்” என்று சொன்னேன்.

நாங்கள் பாசறையை அடைந்த போது இரவு 11.30 மணி இருக்கும். அவர் உறங்கிக் கொண்டிருந்தார். வாசலில் ஜொனியைப் பற்றி சொன்னேன். காலையிலே சந்திக்கிறேன் என்று மெதுவாகத்தான் சொன்னேன். அப் போது தலைவர் உள்ளிருந்து கேட்டார், ஜொனி வந்தாச்சா? யோகி வந்துள்ளாரா? என்று.

அந்தக் காலகட்டத்தில் மெல்லிய ஒலிக்குக் கூட விழித்து விழிப்பாக இருப்பார். அதேபோல் யாராவது காட்டைவிட்டு வெளியே போய்விட் டால் எப்போதும் விழிப்பாக இருக்கிற பழக்கம் உண்டு. அந்த வகையில் உறங்கிக் கொண் டிருந்தபோதும் தலைவர் விழிப்பாகத்தான் இருந்தார்.

தலைவருடன் 2, 3 நாட்கள் ஜொனி இருந்தார். நாற்காலி, மிசையம்(மேசை) எல்லாம் அப் போது இல்லை. பாயைப் போட்டுக் கொண்டு தரையில்தான் இருப்போம். சப்பாணி கட்டிக் கொண்டு தலைவருக்கு முன்னாள் ஜொனி பேசிக் கொண்டிருந்தார். நாங்களும் பலரு மாக அந்த இடத்துக்குச் சென்று வருவதுண்டு.

பின்னர் ஜொனி அங்கிருந்து இந்தியா செல்லத் தயாராக இருந்தபோது சூட்டி என்பவர் அழைத் துச் செல்வதாக இருந்தது. அப்போது ஜொனி யை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று கேட் டேன், “என்ன நடந்தது? எல்லா விசயத் தையும் சொல்லிவிட்டீர்களா?” என்று கேட் டேன். அவர் வாயைப் பொத்திக் கொண்டு சொன் னார்...”எதுவுமே கதைக்காதீங்க.. நான் ஒன்றுமே கதைக்கலை. அவர் சொன் னதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன்” என்றார். “என்ன முடிவு?” என்று கேட்டேன்.

தலைவர் கூறினார், இந்திய படை அழைத்து தான் இங்கு வந்ததாக சொல்லி இருக்கிறீர்கள். நீங்கள் திரும்பிப் போய்விட்டு தலைமறை வாகி இங்கே வாருங்கள். பெரிய பயிற்சி முகா முக்கு பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கிறது. யாழ். குடாவை கைப்பற்ற வேண்டியுள்ளது. அதைச் செய்வதற்கான ஆயத்தத்துடன் வாருங்கள்” என்றார். “நான் போகிறேன். திரும்பி அந்த ஆயத்தங்களோடுதான் வரு வேன்” என்றார் ஜொனி.

இடையிலேயே ஒரு தளம்பல் நிலையில் ஜொனி இருந்தபோதும் இங்கே தலைவரைச் சந்தித்த போது மிக உறுதியோடு மீண்டும் சென்று இங்கே திரும்பி பெரிய அளவில் பயிற் சிகளை தந்து போராளிகளை வளர்த்து யாழ்ப் பாண குடாநாட்டை கைப்பற்றுவதற்கான நம்பிக்கையோடுதான் சென்றார்.

ஆனால் அவர் செல்லும்போது தேராவிலுக்கு அண்மையில் இந்தியப் படையின் சுற்றி வளைப்பில் அவர் கொல்லப்பட்டார். மிகப் பெரிய சிறந்த பண்பான உயர்ந்த ஒரு போராளியை நாங்கள் இழந்தோம்.

அவரைப் பொறுத்தவரை யாழ். குடாநாடு என் பது அவருக்கு வீடு போல். எல்லா இடமும் அவ ருக்குத் தெரியும். 1983 ஆம் ஆண்டிலிருந்து அவர் வீரச்சாவடைகின்ற வரை அவரது பங் களிப்பு இருந்தது.

போராளிகளால் மட்டுமல்ல– பொதுமக் களாலும் மதிக்கப்படுகிற ஒரு மனிதனாக ஜொனி வாழ்ந்தார்.

இத்தனை திறமைகொண்ட சிறந்த வீரனை நாங்கள் இழந்து நின்றோம். இருந்தபோதும் எங்கள் போராட்டம் தொடருகின்றது. அவர்களை நினைவு கூருவது எல்லாமே அவர்கள் விட்டுச் சென்ற பணியை தொடர வேண்டும் என்பதை நினைவூட்டவே.

யோகரத்தினம் யோகி
வரலாற்றுத்துறைப் பொறுப்பாளர்
தமிழீழ விடுதலைப் புலிகள்.

(16.03.2006 அன்று லெப்.கேணல் ஜொனி அவர்களின் 18 ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி ”புலிகளின் குரல்” வானொ லியில் ஆற்றிய நினைவுரை)






# சிறீலங்கா காவல்துறையினதும் அரச கட்சியினதும் அராஜகத்தை அனுமதிக்க முடியாது! - த.தே.ம. முன்னணி

மார்ச் 06, 2022

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வலி தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஜோன் ஜிப்ரிக்கோ மற்றும் அவரது சகோதரிகளை அரச ஆதரவுக் கட்சியினரும் பொலீசாரும் இணைந்து தாக்குதல் நடத்தியமையை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

இது அரச அராஜகத்தையும் பொலீசாரின் வக்கிரத்தையும் அரச ஆதரவுக்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் கொடூர முகத்தையும் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

இத் தாக்குதலை ஜனநாயகத்தையும் சட்ட திட்டங் களையும் மதிக்கின்ற அரசியல் இயக்கமாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒருபோதும் ஏற்கமாட்டாது.

தனியாள் பிரச்சனைகள் நாட்டின் சட்ட திட்டங்களுக்கு அமைவாகத் தீர்க்கப்பட வேண்டுமே தவிர காடைத்தன மாகவல்ல என்பதைச் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு ஆணித்தரமாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

சட்டத்தைக் கையிலெடுத்தவர்களுக்கு எதிராகச் சட்டம் தன் கடமையைச் செய்யவேண்டும் என்று கோருகின்றோம்.

அரச அராஜகத்தை நாங்கள் ஒருபோதும் மௌனமாகக் கடந்துசெல்லத் தயாரில்லை-என்றார்



# அனைத்து இன மக்களும் வலியுறுத்தும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும்!

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்

மார்ச் 06, 2022



“பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். ஆதரவு தெரிவித்து கையொப்பம் இடுகின் றனர். எனவே, இந்தச் சட்டத்தை அரசு முற்றாக நீக்க வேண்டும்.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி நுவரெலியா நகரில் இன்று கையெழுத்து வேட்டை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் கலந் துகொண்டு உரையாற்றுகையிலேயே கூட்டமைப்பின் பேச்சாளரான சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
“பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது 40 ஆண்டுகால மாகத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இடையிடையே சிங்கள இளைஞர்கள் தண்டிக்கப்பட்டனர். தற்போது முஸ்லிம் மக்களுக்கு எதி ராக மிக மோசமாக இந்தச் சட்டம் பயன்படுத்தப் படுகின்றது.

நாட்டில் கடும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலை யில், அதற்கு எதிராகப் போராடுபவர்களை ஒடுக்குவதற் கும் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்துவதற்கு அரசு தயாராகி வருகின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே சர்வதேச சமூகத்தின் நிலைப் பாடாகும். இலங்கையில் வாழும் அனைத்து இன மக் களும் இதனையே வலியுறுத்துகின்றனர்.

# அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்படவேண்டும்

பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன்

மார்ச் 05, 2022

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினைக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று ஜெனிவா மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியுள்ளது. இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை - கருத்தை நாம் வர வேற்கின்றோம். நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின் றோம்.” - இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கையில் அமுலில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை இன்று மாத்தளை நகரிலும் முன்னெடுக்கப் பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே ஜனாதிபதி சட்டத்தரணியான எம்.ஏ. சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-
“பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என இந்த நாட்டில் உள்ள அனைத்து இன மக்களும் வலியுறுத்தி வருகின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலும் இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திருத்தச் சட்டமூலம் எந்த விதத்திலும் போதாது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




பொறுப்புக்கூறல் தொடர்பில் முன்னேற்றகரமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என ஐ.நா. மனித உரி மைகள் பேரவையில் நடைபெற்ற இலங்கை தொடர்பான கலந்துரையாடலில் பல நாடுகள் கருத்துக்களை முன் வைத்துள்ளன. இதனை நாம் வரவேற்கின்றோம்.

அதேபோல் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் இலங்கை யில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என இம்மாநாட்டில் இந்தியா வலியுறுத் தியுள்ளது.

13ஆவது திருத்தச் சட்டம் போதும் என இந்தியா ஏற்க வில்லை. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை அந்நாடு வலி யுறுத்தியுள்ளது. இந்தியாவின் நிலைப்பாட்டை - கருத்தை நாம் வரவேற்கின்றோம். நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண் டும். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணுவம் வகை யில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும்” - என்றார்.



# ஐ.நாவால் மாத்திரமே இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்க முடியும்

## தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

மார்ச் 06, 2022

உலக நாடுகளில் ஐ.நா ஒன்றால் தான் எங்களது இனப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறது என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

உலக நாடுகளில் ஐ.நா ஒன்றால் தான் எங்களது இனப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கிறது.

புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது எல்லா இனங்களையும் சமமாக கருத்தப்பட வேண்டும் என்ற ஐ.நாவின் தீர்மானத்தை இலங்கை அரசாங்கம்



நடைமுறைப்படுத்த வேண்டும். தட்டிக் கழிக்க முடியாது.

இலங்கை அரசு தட்டிக் கழித்து வருவதால் தான் ஐ.நா முக்கியமான தீர்மானத்தை சொல்லியிருக்கிறது. இலங்கை அரசாங்கம் ஐ.நா தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவில்லை என்றால் நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஐ.நா முன் இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வலியுறுத்த வேண்டி வரும்.

மேலும், யாழ்ப்பாணத்தில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு சார்பாக பிரதமர் கண்காணிப்பை மேற்கொள்ள ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல் எல்லா மாவட்டகளிலும் ஒருவரை நியமிக்கப்பட வேண்டும். அப்போது தான் செய்யப்படுகின்ற வேலைகள் ஒழுங்காக நடைபெறும். ஆகையால் பிரதமரது நடவடிக்கை எல்லா மாவட்டங்களிலும் நடைபெற வேண்டும் என்ற கோரிக்கையை நான் முன் வைக்கின்றேன் எனத் தெரிவித்தார்.

# ஜெனிவா மனித உரிமைப்பேரவை இம்முறையாவது தீர்வு வழங்குமா? காணாமல் போனவர்களின் உறவுகள!

மார்ச் 03, 2022, 2022

இம்முறை இடம்பெறும் ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விலாவது எமக்கான நீதி கிடைப்பதற்கு வழிபிறக்க வேண்டும் என்று வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தால் இன்றையநாள் (03) வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள்,
எமது உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டு பத்துவருடங்கள் கடக்கின்ற நிலையில் எமக்கான நீதி தொடர்ச்சியாக மறுக்கப்பட்டு வருகின்றது.தொலைத்த எமது பிள்ளைகளை காணாமல் சாட்சிகளான பல தாய்மார்கள் மரணித்து விட்டனர். வயது முதிர்ந்த நிலையில் அடுத்த போராட்டத்திற்கு வருவோமா என்ற நம்பிக்கை அற்ற நிலையில் இந்த போராடங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இலங்கையில் இனப்படுகொலை தொடர்ச்சியாக இடம் பெறாமல் தடுக்கப்பட வேண்டுமானால் ராஜபக்ச குடும்பமும் இனப்படு கொலைகளுக்கு பொறுப்பாக இருந்த படைத்தளபதிகளும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட வேண்டும்.

யுத்த காலத்தில் மரணித்த இராணுவ உடல்களை பொறுப்பெடுக்க மறுத்த சிங்கள அரசு அவர்களை காணாமல் ஆக்கப்பட்டோர் என தெரிவித்து அவர்களின் குடும்பங்களை ஏமாற்றுகின்றது.

எனவே சர்வதேச சமூகம் எமக்கான நீதியை விரைவில் வழங்க வேண்டும். இம்முறை இடம்பெற்றுவரும் ஜெனிவா மனித உரிமை பேரவை அமர்விலாவது உறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு எமக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். அதற்கு உறுப்புநாடுகள் அனைத்தும் ஒத்துழைக்க வேண்டும்.

எமக்கான நீதி கிடைக்கும் வரையில் நாம் எமது போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவோம் என்றனர்.

















# பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்கக்கோரி புதுக்குடியிருப்பிலும் கையெழுத்து போராட்டம்

மார்ச் 02, 2022

இலங்கை தமிழரசுக்கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை முற்றாக நீக்கக்கோரிய மாபெரும் கையெழுத்துப் போராட்டம் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் 02.03.2022 இன்று இடம்பெற்றது.

இந்த கையெழுத்துப் போராட்டத்தில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும் இந்த கையெழுத்துப்போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சந்திரலிங்கம் சுகிர்தன், மேரிகமலா குணசீலன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை தவிசாளர் அருளானந்தம் தவக்குமாரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் சிவபாதம் குகநேசன், சமூகஆர்வலர் தம்பையா யோகேஸ்வரன் ஆகியோருடன், தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள், பெருந்திரளான பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.









# கால்பந்தாட்ட வீரர் பியூஸ்லஸ் மரணம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஜீ.எல். பீரீஸிடம் அடைக்கலநாதன் எம்.பி கோரிக்கை!

மார்ச் 02, 2022




தேசிய கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ் மரணம் அதன் உண்மை தன்மை தொடர்பான விசாரணை உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் பேராசிரியர் .ஜீ.எல். பீரிஸ் அவர்களுக்கு இன்றைய தினம் புதன்கிழமை (2) அவசர கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,
மன்னார் மாவட்டத்தின் பனங்கட்டு கொட்டு கிழக்கு கிராமத்தை தனது பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டவர் தேசிய கால்பந்தாட்ட வீரர் யோகேந்திரன் டக்சன் பியூஸ்லஸ்.

இவர் 2018 முதல் இன்று வரை இலங்கையின் தேசிய கால்பந்து அணி வீரராக இருந்து வருகிறார்.

தனது விளையாட்டு திறமையால் பல சாதனைகளை படைத்த ஓர் சிறந்த வீரன். இந்த விளையாட்டு துறையில் தன்னை முற்றும் முழுவதுமாக ஈடுபடுத்தி தன்னை வளர்த்துக் கொண்டு தனது மாவட்டத்திற்கும், தாய் நாட்டிற்கு புகழை தேடித் தந்தவர். தன்னை முழுவதுமாக கால் பந்திற்காக அர்ப்பணித்த வீரன்.

அவருடைய விளையாட்டு திறமையின் நிமித்தம் மாலைதீவுக்கு வலன்சியா விளையாட்டு கழகத்தினரால் அழைக்கப்பட்டு அந்த கழகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி அங்கும் பல சாதனைகள் படைத்து பல வெற்றிக்கு வழி வகுத்தவர்.

இவ்வாறானதோர் சிறந்த விளையாட்டு வீரனின் (26.02. 2022) அகால மரணம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

அவருடைய மரணம் கொலையா? என்ற சந்தேகத்தையும் எல்லோர் மட்டிலும் எழுப்பியுள்ளது.

எனவே இவ்வாறான ஓர் அகால மரணத்திற்கான காரணத்தை ஆராய்ந்து விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை ஆவணப் படுத்துமாறு குடும்பத்தினர் மற்றும்

# முல்லை – வட்டுவாகலில் சிங்கள கடற்படை தளத்திற்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கை!

மார்ச் 01, 2022

முல்லைத்தீவு - வட்டுவாகல் கடற்படை தளத்திற்கான காணி சுவீகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் சிலர் காணிகளை அரசிற்கு வழங்குவதற்கு முன்வந்துள்ள நிலையிலும் பலர் காணிகளை வழங்க விரும்பமின்மையினையும் எதிர்ப்பினையும் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

வட்டுவாகல் கடற்படைத்தளத்திற்காக 671 ஏக்கர் காணி கையகப்படுத்தக் கோரப்பட்டுள்ளது. இதில் 292 ஏக்கர் அரச காணிகளாகக் காணப்பட்டுள்ள போதும் ஏனைய 379 ஏக்கர் தனியார் நிலமாக காணப்படுகின்றது.

இவ்வாறு 35 பேருக்குச் சொந்தமான 379 ஏக்கர் காணியில் சிலர் காணி சுவீகரிப்பிற்கு மாற்றுக்காணி அல்லது இழப்பீட்டினை பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளார்கள், பலர் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

2014 ஆம் ஆண்டு வட்டுவாகல் கடற்படை தளத்தின் காணி சுவீ கரிப்பு வர்த் தமானி அறி வித்தலின் படி தொடங்கப்பட்ட சுவீகரிப்பு நடவடிக்கை பிரிவு 5 சட்டத்தின் கீழ் நில அளவீடு முன்னெடுக்கப்பட்ட போதும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்கள்.

காணி உரிமையாளர்கள் 23 பேர் இவ்வாறு காணியினை வழங்க விருப்பம் இல்லாத நிலையில் கடந்த காலங்களில் எதிர்ப்பினை வெளிப்படுத்தியுள்ளார்கள். இருந்தும் காணியினை சுவீகரிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.



# பயங்கரவாத தடைச்சட்ட திருத்தத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நீக்க வேண்டும்

## இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சோனாதிராஜா

மார்ச் 01, 2022

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றிணைந்து இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வலியுறுத்துகிறார்கள். இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு பயங்கரவாத தடைச்சட்ட திருத்தத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நீக்க வேண்டும் என கோருகின்றோம் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக நீண்ட காலமாக போராட்டங்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன. பல ஆயிரக்கணக்கானவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்கள். சிலர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.
400 இற்கு மேற்பட்டவர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இன்னும் சிறைகளில் இருப்பதாக தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சி தேசிய அடித்தளத்தில் இருந்து வேலை செய்கின்ற ஏனைய கட்சிகள், தொண்டர்கள், முன்னாள் ஜனாதிபதி, மதத்தலைவர்கள் என பலர் பல மாவட்டங்களில் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என குரல் கொடுத்து அதற்கு எதிரான கடிதத்திலும் கையொப்பமிட்டுள்ளார்கள்.

அதற்கான வேலைகள் எமது கட்சியினர், கட்சியின் வாலிபர் முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் தற்போதைய ஆட்சியாளர்கள் இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தை தங்களுடைய பௌத்த சிங்கள ஆட்சி ஒன்றை உருவாக்குவதற்கு பயன்படுத்துவார்கள்.

இந்த அரசாங்கத்தின் ஜனநாயக விரோத, இனப் பிரச்சனை தீர்க்கப்படாத விடயங்களுக்கு எதிராக நாங்கள குரல் கொடுகின்ற போது பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தி இந்த போராட்டங்களை ஜனநாயக விரோத அடைப்படையில் அடக்கி ஒடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.



பயங்கரவாத தடைச்சட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற எமது போராட்டம் மார்ச் மாதம் முழுமையாக நடைபெறும். தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒண்றிணைந்து இந்த சட்டத்தை நீக்க வலியுறுத்துகிறார்கள்.

இதனை அரசாங்கம் புரிந்து கொண்டு பயங்கரவாத தடைச்சட்டத் திருத்தத்தை உடனடியாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதனை நீக்க வேண்டும் என கோருகின்றோம் எனத் தெரிவித்தார்.

# வெடுக்குநாறி மலையில் இம்முறையும் சிவராத்திரி நிகழ்வு இல்லை!

மார்ச் 01, 2022

இம்முறையும் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவன்ராத்திரி நிகழ்வினை நடாத்த முடியாமை கவலை அழிப்பதாக ஆலயத்தின் பூசகர் தம்பிராசா மதிமுகராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,
வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் தொல்பொருட் திணைக்களத்திற்கு கீழ் உள்ளதாக தெரிவித்து, அந்த திணைக்களம் மற்றும் பொலிசாரால் வவுனியா நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இடம்பெற்று வருகின்றது.

அதனை தொடர்ந்து ஆலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் பல்வேறு தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த தடைகளால் கடந்த வருடத்தை



போலவே இம்முறையும் சிவராத்தி நிகழ்வை நடாத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இன்று காலை முதல் குறித்த ஆலயவளாக பகுதியில் இராணுவத்தினர், பொலிசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டது. பாதுகாப்பு கெடுபிடிகளுக்கு மத்தியிலும் பொதுமக்கள் சிலர் ஆலயத்திற்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

ஒவ்வொரு வருடமும் சிறப்பான முறையில் மகாசிவராத்திரி நிகழ்வை நாம் அனுஸ்டித்து வந்தோம். எனினும் கடந்த இருவருடங்களாக அந்த பாக்கியம் எமக்கு கிடைக்கவில்லை.

இந்து சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவனின் முக்கிய விரதத்தை கூட அனுஸ்டிக்க முடியாத அவலநிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. எமது வழிபடுவதற்கான சுதந்திரம் தடுக்கப்பட்டுள்ளது.

எனவே எமது ஆலயத்திற்கு சென்று பூசை வழிபாடுகளில் ஈடுபடுவதுடன் எமது மத சுதந்திரத்தினை உறுதிப்படுத்துவதற்கு உரிய தரப்புக்கள் அனுமதியினை வழங்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார்

# இலங்கையின் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்பு குறித்து பிரிட்டன் கவலை

மார்ச் 7, 2022

இலங்கையின் வடக்குகிழக்கில் இடம்பெறும் நில அபகரிப்பு குறித்து பிரிட்டன் கவலை வெளியிட்டுள்ளது.




ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் உரையாற்றுகையில் பிரிட்டனின் மனித உரிமைகளிற்கான சர்வதேச தூதுவர் ரிட்டா பிரென்ஞ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
பொறுப்புக்கூறல் விடயத்தில் தொடர்ந்தும் முன்னேற்றம் ஏற்படாதது குறித்த ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் கரிசனையை நாங்கள் பகிர்ந்து கொள்கின்றோம், உலகின் கவனத்தை ஈர்த்த பல மனித உரிமை விவகாரங்கள் தொடர்பில் பின்னடைவுகள் காணப்படுகின்றன என்பது குறித்து நாங்கள்



ஏமாற்றமடைகின்றோம்.

கவிஞர் அஹ்னாவ் ஜசீம் மற்றும் சட்டத்தரணி ஹெஜாஸ் ஹிஸ்புல்லா விடுதலை செய்யப்பட்டதை சாதகமான முதற்கட்ட நடவடிக்கை என நாங்கள் வரவேற்கின் றோம். அதேவேளை பயங்கரவாத தடைச்சட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஆரம்ப சீர்திருத்தங்களை நாங்கள் அங்கீகரிக்கும் அதேவேளை இவை போதுமான அளவிற்கு செல்லவில்லை என்பதை தெரிவிக்கின்றோம்.

சிவில் சமூகத்தினர் துன்புறுத்தப்படுவது அச்சுறுத்தப்படுவது சிவில் நிர்வாக செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்தப்படுவது, நன்கறியப்பட்ட மனித உரிமை சம்பவங்களில் குறிப்பிடப்பட்ட நபர் மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டமை, போன்றவை குறித்து நாங்கள் கரிசனைகளை கொண்டுள்ளோம்.

குறிப்பாக இந்த நியமனம் கடும்கவலையளிக்கின்றது. இழப்பீடு மற்றும் காணாமல்போனவர்கள் குறித்து அரசஸ்தாபனங்களில் இடம்பெறும் செயற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளும் அதேவேளை இவை முழுமையான நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் செயற்பாடுகளுடன் இணைந்ததாக காணப்படுவது அவசியம்.

இலங்கையில் சிறுபான்மை சமூகத்தினர் அதிகளவு புறக்கணிப்பை எதிர்கொள்வது மற்றும் நாட்டின் வடகிழக்கு பகுதிகளில் இடம்பெறும் நில அபகரிப்பு குறித்து நாங்கள் கரிசனையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

46-1 தீர்மானம் குறித்து இலங்கை ஆக்கபூர்வமான விதத்தில் ஈடுபாட்டை காண்பிக்க வேண்டும், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்திற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்.

# மட்டக்களப்பில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஆர்ப்பாட்டம் – 07.03.2022











# தென் தமிழீழம் அம்பாறையில் அத்துமீறி பௌத்த விகாரையை அமைக்கும் நடவடிக்கைகளை பொதுமக்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்







மார்ச் 10, 2022

தென் தமிழீழம் அம்பாறையில் அத்துமீறிய பௌத்த விகாரையை அமைக்கும் நடவடிக்கைகளை பொது மக்கள் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,
அம்பாறை மாவட்டத்தின் மிக முக்கியமான தமிழர் பாரம் பரிய வரலாற்றுத் தொல்லியல் பூமியான முள்ளிக்குளம் மலை அடிவாரப் பகுதியில் இரவோடு இரவாக அத்திவாரம் வெட்டப்பட்டு விகாரை அமைக்கும் பணிக்கான ஒழுங் குகள் நடைபெற்ற வேளை இன்று காலை பிரதேச பொது மக்கள் உள்ளூர் அரசியல்வாதிகள் சமூக செயற்பாட் டாளர்கள் இளைஞர்கள் தலையீட்டில் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளது.





# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு நீதிகிடைக்க அனைத்து தரப்புகளும் ஒத்துழைப்புத் தரவேண்டும்

**முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி – மரியசுரேஸ் ஈஸ்வரி**

மார்ச் 09 2022

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், உறவுகளைத் தேடிப் போராடிய நூறிற்கும் மேற்பட்ட தாய், தந்தையர்கள் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டத்திற்கான ஆதரவுகளும் குறைந்து வரும் நிலையில் அனைத்துத் தரப்புக்களும் தங்களாலான ஒத்துழைப்புக்களை வழங்கி காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கான நீதியை பெற்றுத் தரவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் சங்கத் தலைவி மரியசுரேஸ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

மகளிர் தினத்தினை துக்கநாளாகக் கடைப்பிடித்து முல்லைத்தீவில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
மகளிர்களின் சுதந்திரத்தினை உறுதிப்படுத்துகின்ற சர்வதேச மகளிர் தினத்திலே, ஒவ்வொரு வருடமும் கறுப்பு ஆடைகளை அணிந்து மகளிர் தினத்தினை துக்கதினமாக கடைப்பிடிக்கின்றோம். இந் நிலையில் சர்வதேசம் இன்னும் எங்களை ஏன் திரும்பிப் பார்க்கவில்லை.

பாதிக்கப்பட்ட உறவுகளின் சார்பில் சர்வதேசத்திடம் நீதியைக் கேட்கும்போது ஏன் அவர்கள் எமக்கான நீதியைத் தர மறுக்கின்றார்கள்.

நாம் உண்மையைத்தானே தெரிவிக்கின்றோம். இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட, வெள்ளை வானில் கடத்திச்செல்லப்பட்ட, வீடுவீடாக புகுந்து கடத்தப்பட்ட உறவுகளையே நாங்கள் கேட்கின்றோம்.

ஐக்கியநாடுகள் சபையின் 49ஆவது கூட்டத்தொடரிலே, இலங்கை எவ்வித குற்றச்செயல்களையும் புரியவில்லை என இலங்கை சார்பில் கூட்டத் தொடரில் கலந்துகொள்பவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் குற்றச்செயல்கள் இடம்பெற்றது என்பதற்குச் சாட்சியாக நாங்கள் இங்கு இருக்கின்றோம். நாங்கள் எமது உறவுகளை இராணுவத்திடம் கொடுத்துவிட்டுத் தேடிக்கொண்டிருக்கின்றோம் என்பதைச் சொல்லிவைக்க விரும்புகின்றோம்.

அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் என்பதுபோல் நாம் விடாமுயற்சியுடன் தொடர்ந்தும் எமது உறவுகளைத் தேடிய போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளாகிய நாம் பலமிழந்து வருகின்றோம். குறிப்பாக கடந்த ஐந்துவருட தொடர்போராட்டத்தில் எம்மோடு இணைந்து போராடிய நூறிற்கும் மேற்பட்ட தார்மார்கள் இறந்துள்ளார்கள். அவர்களுக்கான நீதி என்ன? இவ்வாறான பல துயரங்களைக் கடந்தும் எமது உறவுகள் எமக்கு வேண்டுமெனக் கேட்டு தொடர்ந்தும் போராடிவருகின்றோம்.

சர்வதேசம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய எமக்குரிய நீதியை நிச்சயம் பெற்றுத்தர வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரையில் மிகவும் வேதனையான விடயம் என்னவெனில், தனியே எமது உறவுகளே இந்தப்



போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். வேறு எந்த சமூக மட்ட அமைப்புக்களின் பங்களிப்புக்களும் எமக்கு இல்லாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

எம்மை வழிநடாத்திய எத்தனையோ பங்குத் தந்தையர்கள் தற்போது ஒதுங்கி நிற்கின்றனர். நாம் இராணுவத்திடம் கையளித்த உறவுகளைக் கேட்டுத்தானே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகின்றோம்.

எனவே யாரும் இந்த அரசுக்குப் பயப்படவேண்டாம். எமக்கு அனைத்து தரப்புக்களும் முழுமையான பங்களிப்புக்களைத் தாருங்கள்.

புலம்பெயர் தேசங்களிலுள்ள எமது உறவுகளே, நீங்களும் எங்களுக்காக உங்களுடை ஆதரவுகளின் ஊடகாக எமக்கான நீதியினைப் பெற்றுத்தாருங்கள் – என்றார்

# இறுதி உயிர் இருக்கும் வரையிலும் எமது உறவுகளைத் தேடும் பயணம் தொடரும்

**முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் செயலாளர் – ரஞ்சனா**

மார்ச் 09 2022

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளால் மேற்கொள்ளப்படும் போராட்டத்தை வலுப்படுத்துவதற்கு எவரும் முன்வருவதில்லை எனவும் மாறாக, போராட்டத்தினை மலினப்படுத்தும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கச் செயலாளர் ரஞ்சனா தெரிவித்துள்ளார்.

எனினும் இறுதி உயிர் இருக்கும்வரையிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளின் போராட்டமானது தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மகளிர் தினத்தினை துக்கநாளாகக் கடைப்பிடித்து, முல்லைத்தீவு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மேற்கெண்ட போராட்டத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கதும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,
கடந்த 2009ஆம் ஆண்டுபோர் மௌனிக்கப்பட்ட பின்னர் இலங்கை இராணுவத்திடம் கையளித்த உறவுகளைக் கேட்டு ஐந்துவருடங்களாக தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். தற்போது நாம் எமது தொடர்போராட்டத்தின் ஆறாவது வருடத் தொடக்கத்தில் இருக்கின்றோம்.

மக்கள் அனைவரும் சர்வதேச மகளிர் தினத்தினை மகிழ்ச்சியுடன் கொண்டாடிக்கொண்டிருக்கும் நிலையிலே, நாம் மகளிர் தினத்தினைத் துக்கதினமாக கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறோம்.

யுத்தகாலத்திலே உறவுகளைத் தொலைத்துவிட்ட தாய்களாய், சகோதரிகளாய், துணைவிகளாய், ஏனைய உறவுகளாகவும் நாம் தற்போது வீதிவீதியாக கண்ணீரும் கம்பலையுமாக எமது உறவுகளைத் தேடிவருகின்றோம். இராணுவத்தினரிடம் கையளித்த உறவுகளையும், வெள்ளைவானில் கடத்தப்பட்ட உறவுகளையும், வீடு வீடாக இராணுவம் கைதுசெய்த உறவுகளையும் நாம் இதுவரை இலங்கை அரசிடம் கேட்டு பயனளிக்காதநிலையில், தற்போது சர்வதேசத்திடம் நீதிகேட்டு போராடிவருகின்றோம்.

இந்தப் போராட்டந் தொடங்கி ஐந்துவருடங்கள் பூத்தியாகியுள்ள சூழலில் எங்களுக்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை. எனவே நாம் தொடர்ந்தும் போராட்டத்தை முன்னெடுத்துச்செல்கின்றோம்.

இவ்வாறு நாம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும்போது, எமது தொடர் போராட்டத்தை வீழ்ச்சியடையச்



செய்வதற்கான முயற்சிகளே இங்கு இடம்பெறுகின்றன. எமது போராட்டத்தை வலுப்படுத்துவதற்கு எவரும் முன்வருவதில்லை என்பதுடன், எமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதி கிடைக்கவேண்டுமென யாரும் எண்ணுவதாகவுமில்லை.

எமது இறுதி உயிர் இருக்கும் வரையிலும் எமது உறவுகளைத்தேடும் எமது போராட்டம் தொடரும் – என்றார்.

# திருகோணமலையில் கால் பதிக்கும் இந்தியா தமிழ் மக்களது அபிலாசைகளுக்கு எதிராக செயற்படக்கூடாது!

மார்ச் 12, 2022




அபிவிருத்தி என்னும் போர்வையில் திருகோணமலை மாவட்டத்தில் கால் பதிக்கும் இந்தியா, எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ் மக்களது அபிலாசைகளுக்கு எதிராக தன்னுடைய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இருப்பை பயன்படுத்தக்கூடாது என தமிழ் தேசிய மக்கள் முன்ன ணியின் பிரதிப் பொதுச் செயலாளர் ஸ்ரீ ஞானேஸ்வரன் வேண்டுகோள் விடுத்தார்.

திருகோணமலையில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலையின் எண்ணெய் குதங்களை நீண்ட கால குத்தகை அடிப்படையில் கையகப் படுத்தியுள்ள இந்தியா, தற்போது சம்பூர் பகுதியில் சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையத்தினை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு இருக்கின்றது.

இதன்மூலமாக திருகோணமலையின் இரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இந்தியாவின் கட்டுப்பாட்டில் செல்ல இருக்கிறது என தெரிவித்தார்.

இது ஒரு போதும் தமிழ் மக்களது இருப்பிற்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கக்கூடாது என அவர் குறிப்பிட்டார்.

# முல்லைத்தீவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் தொடர்போரட்டத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவில் போராட்டம்

மார்ச் 08 2022



முல்லைத்தீவு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களின் தொடர்போராட்டம் ஐந்துவருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், மகளிர் தினத்தினை துக்கநாளாக கடைப்பிடித்து 08.03.2022 இன்றைய தினம் முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் மாபெரும் கவனயீர்ப்பு போராடடத்தில் ஈடுபட்டிருந்தனர்.

முல்லைத்தீவு - புனித இராஜப்பர் ஆலய முன்றலில் ஆரம்பமான குறித்தபோராட்டம், முல்லைத்தீவு பிரதான சுற்றுவட்டப் பாதைவரை ஊர்வலமாக வருகைதந்து நிறைவடைந்தது.

ஐக்கியநாடுகள்சபையின் 49ஆவது மனித உரிமைகள் கூட்டத்தொடர் தற்போது ஜெனீவாவில் இடம்பெற்றுவரும் நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கான நீதியினைச் சர்வதேச சமூகம் விரைந்து வழங்கவேண்டுமெனவும், இலங்கை அரசினை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பாரப்படுத்துமாறு கோரியும், சர்வதேச மகளிர் தினத்தினை துக்கதினமாக கடைப்பிடித்து இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளுக்கான நிதியைக் கோருகின்ற வகையில் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளிலான பாதாதைகளைத் தாங்கியவாறும், கோசங்களை எழுப்பயும், கறுப்புக்கொடியினை ஏந்தியும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும் இப்போராட்டத்தில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள், சமூகமட்ட பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.



















# வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் கண்ணீருக்கு நீதி இல்லையேல் அழிந்துபோவீர்கள்

**முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்**

மார்ச் 08 2022



வட, கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சிந்தும் கண்ணீருக்கு உரிய நீதி கிடைக்கவேண்டும். இல்லையேல் அந்த கண்ணீருக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்த அரசு அழிந்துபோகுமென முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் எச்சரித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்கள் தமது தொடர்போராட்டத்தின் ஐந்தாவது வருட நிறைவுநாளில், மகளிர் தினத்தினை துக்கநாளாகக் கடைப்பிடித்து மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்திருந்தனர்.

இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டுகருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படவேண்டிய மகளிர் தினத்தினை எமது மகளிர்கள், துக்க தினமாகக் கடைப்பிடித்து வருகின்றனர்.

வட, கிழக்கிலே சுமார் 90ஆயிரம் அளவில் விதவைகளாக எமது மகளிர்கள் இருக்கின்றனர்.

இதனைவிட காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவும் இருக்கின்றனர். இப்படியிருக்கும்போது இந்த மகளிர் தினத்தினை எமது மகளிர்கள் எப்படி மகிழ்ச்சியாகக் கொண்டாட முடியும்.

ஐந்து வருடங்களாக இவ்வாறு வீதியிலே இறங்கி போராடிக்கொண்டிருக்கின்றார்கள். ஆறாவது வருடத்தின் தொடக்கத்தில் தற்போது போராட ஆரம்பித்திருக்கின்றார்கள்.

குறிப்பாக இதுவரையில் ஐக்கிய நாடுகள் சபையோ, இலங்கை அரசோ, அல்லது வேறு சர்வதேச நாடுகள்கூட இவர்களுடைய போராட்டத்திற்கு உரிய தீர்வுகளை வழங்க முன்வரவில்லை.

இவர்களுடைய கண்ணீருக்கான பதில் என்ன? எமது உறவுகள் சிந்துகின்ற இந்த கண்ணீருக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்த அரசு அழிந்துபோகும் நிலைதான் ஏற்படும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

எமது உறவுகளுக்குரிய நீதியை வழங்குங்கள். சர்வதேசரீதியாக ஐக்கியநாடுகள் சபை நிச்சயமாக இந்த மகளிர்களுக்கு நீதியை வழங்க முன்வரவேண்டும்.

இந்த மகளிர்களின் கண்ணீருக்கு விடை கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த அரசு அழிந்துபோகும் - என்றார்.

# சர்வதேச மகளிர் தினத்தை புறக்கணித்து வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்!

மார்ச் 08 2022

சர்வதேச மகளிர் தினத்தை புறக்கணித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம் ஒன்றை இன்று முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டம் இன்று காலை 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்திற்கு முன்பாக இடம் பெற்றது.

இதன்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் காணமல் போன தமது உறவுகளின் புகைப்படங்கள் மற்றும் பதாதைகளை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.

தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலான கருத்துக்களை ஊடகங்களிற்கு இதன் போது வெளிப்படுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.






# கிழக்குப் (தென் தமிழீழப்) பல்கலைக்கழகத்தின் 25 வது பொதுப்பட்டமளிப்பு விழா

மார்ச் 12, 2022

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் 25வது பொதுப்பட்டமளிப்பு விழா இன்றும் (12) திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.



கிழக்குப்பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் அவர்களது ஒருங்கிணைப்பில் கிழக்குப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா அவர்களது தலைமையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நல்லையா கேட்போர் மண்டபத்தில் இன்று காலை மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

இன்றும் நாளையுமாக இரண்டு நாட்களில் இரண்டு அமர்வுகளாக. இடம்பெறவுள்ள பொதுப்பட்டமளிப்பு விழாவின் போது இம்முறை 1958 உள்வாரி மற்றும் வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கும், பட்டப்பின் தகைமை பெறுபவர்களுக்கும், கௌரவப் பட்டம் பெறுபவர்களும் தமக்கான பட்டத்தினை பெறவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தவிசாளர் சிரேஷ்ட பேராசிரியர் சந்தன பீ. உடவத்த அவர்கள் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

இம்முறை கிழக்குப் பல்கலைக்கழகத்தால் இப்பல்கலைக்கழகத்தின் காலஞ்சென்ற முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரவீந்திரநாத் அவர்களின் சேவையினை நினைவு கூர்ந்து கௌரவ விஞ்ஞான கலாநிதிப் பட்டமும் மட்டக்களப்பின் மூத்த எழுத்தாளரும் சமூக



வியலாளருமான வெல்லவூர்க்கோபால் என்றழைக்கப்படும் தேசிய கலைஞர் சீனித்தம்பி கோபாலசிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டி கௌரவ முது இலக்கிய மாணிப் பட்டமும் வழங்கிவைக்கப்பட்டிருந்தமை மிகவும் முக்கியமான விடயமாக கருதப்படுகின்றது.

கிழக்குப்பல்கலைக்கழக வரலாற்றில் முதல்முறையாக 1958 மாணவர்களுக்கான பொதுப்பட்டமளிப்பு நிகழ்வு நடாத்தப்படுவது இதுவே முதல் தடவையாகும்.



பாரம்பரிய இசை வாத்தியங்கள் முழங்க அதிதிகள் மற்றும் பட்டம் பெறவுள்ள மாணவர்களுக்கும் வரவேற்பளிக்கப்பட்தனைத் தொடர்ந்து, மங்கள விளக்கேற்றலுடன் முதல் நாள் பட்டமளிப்பு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், கிழக்குப்பல்கலைக்கழகத்தின் வேந்தர் வைத்திய கலாநிதி வேல்முருகு விவேகானந்தராஜா அவர்களினால் பட்டதாரி மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இம்முறை இடம்பெறும் குறித்த பட்டமளிப்பு விழாவில் வணிக நிர்வாகத்தில் முதுமாணி (MBA), முதுகலைமாணி (MA), முதுகல்விமாணி (MEd), அபிவிருத்திப் பொருளியலில் முதுமாணி (MDE) ஆகிய 133 பட்டப்பின் தகைமைகளுக்கான பட்டங்களும், 2 கௌரவப் பட்டங்களும், முதலாம் நாள் முதலாவது அமர்வில் வழங்கப்பட்டிருந்தது.

ஏனைய இளமாணிப் பட்டங்களுக்காக 2வது அமர்வில் 408 பட்டதாரி மாணவர்களும், 3வது அமர்வில் 340 பட்டதாரி மாணவர்களும், இரண்டாம் நாள் நிகழ்வில் முதலாவது அமர்வில் 330 பட்டதாரி மாணவர்களும்,



2வது அமர்வில் 360 பட்டதாரி மாணவர்களும், 3வது அமர்வில் 385 பட்டதாரி மாணவர்களும் பட்டமளித்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

இப் பொதுப்பட்டமளிப்பு விழாவின் முதல் நாள் நிகழ்வில் பட்டமளிப்பு விழா குழு தலைவர் பேராசிரியம் எம்.சிதம்பரேசன், பீடாதிபதிகள், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன், சிரேஸ்ட உதவிப் பதிவாளர் (கல்விப் பிரிவு) திருமதி.நிசாந்தினி நிருமிதன், செனட் உறுப்பினர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள், பட்டதாரி மாணவர்கள் மற்றும் பட்டதாரி மாணவர்களின் பெற்றோர்கள் என பெருமளவிலானோர் இதன்போது கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புத்தர் சிலையை அகற்றி, சூலத்தை வைக்க நீங்கள் விடுவீர்களா?

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர். இ. சாணக்கியன்**

மார்ச் 11, 2022

வடக்கு - கிழக்கில், மிகவும் நூதனமாக காணிகளை அபகரிக்கும் செயலில் அரசு ஈடுபட்டு வருகிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ. சாணக்கியன் சபையில் இன்று தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கில் உள்ள காணிகளில் சிங்கள மக்களை குடியேற்ற அனைத்து நவடிக்கைகளையும் அரசு எடுத்துள்ளது. மகாவலி, வன இலாகா, தொல்லியல் திணைக்களம் என அனைத்து வழிகளிலாலும், காணிகள் துண்டாடப்படுகின்றன.

நான் இங்கு பொய் பேச வரவில்லை. 29 வயதிலே உண்மை பேச இங்கு வந்தேன். மணல் பேமிற்றை பெற இங்கு வரவில்லை. என்னை பேச விடாமல் யாரும் தடுக்க முடியாது. இது என்னுடைய நேரம் நான் கதைப்பேன் நீங்கள் கேளுங்கள்.

கிழக்கு மாகாணத்தில் மரமுந்திரி செய்கை என்ற பெயரில் 500 பேர் வரை, வெளிமாவட்ட நபர்கள் கொண்டு வரப்பட்டுள்ளனர். இதே போல நீங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 500 பேரை அனுராதபுரத்தில் அனுமதிப்பீர்களாக?

அரசு சம்மதம் தெரிவித்தாலும், மக்கள் விட மாட்டார்கள்.

ஏன் என்றால் எமது நிலம் எமக்கு வேண்டும் என்பதில் அனைவரும் தெளிவாக இருக்கிறார்கள். இதற்காகத் தான் காணி அதிகாரங்களை மாகாணசபைக்கு தருமாறு கோருகின்றோம். கிழக்கில் 30 ஆண்டுகளுக்கு மேலாக சேனைப் பயிர் செய்தவர்களை விரட்டுகிறீர்கள்.

முல்லைத்தீவில் குறுந்தூர் மலையில் சூலத்தை இழுத்து எறிந்து, புத்தர் சிலையை வைக்கிறீர்கள். உங்கள் பிரதேசத்தில் நாம் ஏதும் இப்படி செய்கிறோமா? - என்றார்.



# 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு எதிராக வவுனியாவில் எழுச்சிப் போராட்டம்!

மார்ச் 13 2022



13ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் இன்று வவுனியாவில் மாபெரும் எழுச்சி ப்பேரணி ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த பேரணியானது வவுனியா பண்டாரவன்னியன் சிலைக்கு முன்பாக மாவீரர் ஒருவரின் சகோதரன் ஈகைச் சுடர் ஏற்றியதை தொடர்ந்து பிற்பகல் 2. 30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது.

ஏ9 வீதி வழியாக சென்று தாண்டிக்குளம் ஐயனார் விளையாட்டு கழக மைதானத்தில் பேரணி நிறைவுற்றது. கிட்டு பூங்கா பிரகடனம் கட்சியின் வவுனியா மாவட்ட செயலாளர் எஸ். தவபாலன் வாசிக்கப்பட்டதுடன் சிறப்புரைகள் இடம் பெற்றிருந்தது.

13ஆவது திருத்த சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த தினங்களில் வவுனியாவில் வாகனப்பேரணியினையும் மக்கள் சந்திப்புக் களையும் முன்னெடுத்திருந்த நிலையிலேயே இன்று பேரணி இடம்பெற்றது.

தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை 13ஆம் திருத் தத்திற்குள் முடக்கும் சதி முயற்சியை முறியடிக்க அனைத்து தமிழ் மக்களும் பூரணமான ஆதரவை வழங்க வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்தி வருகின்றது.

குறித்த பேரணியில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன் மற்றும் கட்சியினது சட்ட ஆலோசகர் காண்டீபன், ஊடக பேச்சாளர் சுகாஸ் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.













# இலங்கை கடல் பரப்புக்குள் இந்திய மீனவர்களின் இழுவைமடி தொழிலுக்கு அனுமதி வழங்க முடியாது

மார்ச் 14, 2022

இலங்கை கடல் பரப்புக்குள் இந்திய கடற்தொழிலாளர்களின் இழுவைமடித் தொழிலை ஒரு நிமிடம் கூட அனுமதி வழங்க முடியாதென இந்திய மீனவர்களிடம் தெரிவித்துள்ளதாக, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னரசா தெரிவித்துள்ளார்.

யாழில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்திய - இலங்கை கடற்தொழிலாளர்கள் பிரச்சினை தொடர்பில் சிநேகபூர்வமான கலந்துரையாடலொன்று கடந்த 11ஆம் திகதி கச்சதீவில் நடைபெற்றது.

இதில் நாம் இந்திய கடற்தொழிலாளர்களின் அத்து மீறலுக்கு எதிராக மட்டுமே போராடி வருகின்றோம்.



ஆனால் அதை, இந்தியத் தொப்புள் கொடி உறவுகளுக்கு எதிரான போராட்டமாகச் சிலர் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் கதைத்து வருகின்றனர்.

நாம் அங்கே தெளிவாகக் கூறினோம், 2004ஆம் ஆண்டு தொடக்கம் 2016ஆம் ஆண்டு வரை வடக்கு மக்களுக்கு, இந்திய உறவுகள் செய்த உதவிகளை நாம் மறக்க மாட்டோம்.

ஆனால் ஒரு நிமிடம் கூட இலங்கை கடல் பரப்புக்குள் இழுவை மடித்தொழிலை செய்ய அனுமதிக்க மாட்டோம். நாட்டுப்படகோ இழுவைமடி படகோ ஏதுவாக இருந்தாலும் எமது நாட்டுக் கடற்பகுதிக்குள் அத்துமீறி வரும் பொழுது சட்டம் தன் கடமையைச் செய்யும்.

இந்திய கடற்தொழிலாளர்கள் இழுவை மடி தொழிலை நிறுத்தினால் உங்கள் தரப்பிலுள்ள நியாயமான கோரிக்கைகளை நாம் வெளியுறவு அமைச்சின் ஊடாக ஆராய்வோம் என கூறியிருந்தோம்.

அதேவேளை இந்திய நாட்டுப் படகு தொழிலாளர்கள், இழுவை மடித் தொழிலால் தாமும் பாதிக்கப்படுவதாக, அதற்கு எதிராகத் தாமும் செயற்படுவோம் என்றும் தமது பிரச்சினை தொடர்பில் முதலமைச்சர் மட்டம் வரை கொண்டு சென்றும் எந்தப் பிரயோசனமும் இல்லையென்றும் கூறியிருந்தார்கள்.

அத்துடன் எமது பிரச்சினையை அவர்கள் 90 வீதம் ஏற்றுக்கொண்டார்கள். இலங்கை மற்றும் இந்தியப் பாரம்பரிய கடற்றொழிலாளர்கள் கூட்டாக இணைந்து இலங்கை இந்தியக்கடல் வளத்தைப் பாதுகாக்கவும் தீர்மானித்துள்ளோம் என குறிப்பிட்டுள்ளார்.

# கனடிய செய்திகள்

## தமிழினப் படுகொலைகளை நினைவூட்டும் உக்ரேன் பேரழிவுகள்

### கனடிய தமிழர் தேசிய அவை

மார்ச் 02, 2022

2009 ஆம் ஆண்டு தமிழ் இனப்படுகொலையின் உச்சக் கட்டத்தில் தமிழர்கள் அனுபவித்த துயரங்களை உக்ரேன் பேரழிவுகள் நினைவூட்டுவதாக கனடிய தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது.

நெருக்கடியான இந்த நிலையில் தமிழ் கனடியர்கள் உக்ரேனிய மக்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்து வதாக கனடிய தமிழர் தேசிய அவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தாலும் அதன் இரக்கமற்ற ஆயுதப் படைகளாலும் படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகள் மற்றும் நண்பர்கள் பற்றிய மிகவும் வேதனையான நினைவுகளை உக்ரேனில் வெளிவரும் இந்த பேரழிவு சூழ்நிலைகள் தமிழ் மக்களுக்கு மீண்டும் நினைவூட்டுகின்றன.

உக்ரேனில் கடந்த சில நாட்களாக நடந்து வரும் சம்பவங்கள் நெஞ்சை பதற வைக்கின்றன. உக்ரேனிய மக்களின் துன்பங்களும் மரணமும் கற்பனை செய்ய முடியாதவை. இது மிகவும் கவலையளிக்கிறது. இந்த நேரத்தில் உக்ரேனிய மக்களுடன் எங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்துகிறோம்.

உக்ரைனில் இனப்படுகொலைக்கு திட்டமிடுவதாக குற்றம் சாட்டி ரஷ்யா மீது உக்ரேன் சர்வதேச நீதிமன்றத்தில் (ICJ) வழக்குப் பதிவு செய்துள்ளது.

இந்நிலையில் உக்ரேன் மக்களுக்கு எந்தவொரு தீங்கும் ஏற்படாமல் தடுக்கவும், இனப்படுகொலையை தடுக்கவும், தங்கள் எதிர்காலத்தை தீர்மானிக்கும் அவர்களின் உரிமையை பாதுகாக்கவும் சர்வதேச சமூகம் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும் என தமிழ் மக்கள் கேட்டுக்



கொள்கிறார்கள்.

உக்ரேன் ஜனநாயக அரசு மற்றும் அதன் மக்கள் மீதான ரஷ்ய அரசாங்கத்தின் வலிந்த தாக்குதல் கடுமையாகக் கண்டிக்கப்பட்டு நிறுத்தப்பட வேண்டும் எனவும் கனடிய தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது.

## கனடிய மத்திய வங்கி தனது வட்டிவீதத்தை 0.25 விகிதத்திலிருந்து 0.50 சதவீதமாக உயர்த்தியுள்ளது

மார்ச் 02, 2022

கனடா மத்திய வங்கி தனது வட்டி வீதத்தை 0.25 விகிதத்திலிருந்து 0.5 சதவீதமாக உயர்த்தியுள்ளது. இது கோவிட்-19 தொற்று நோயிலிருந்து பொருளாதார மீட்சிக்கு மத்தியில் சமிக்ஞை செய்யப்பட்ட அதிகரிப்பின் முதல் படியாகும்.

ஒரே இரவில் விகித இலக்கு 0.25 அடிப்படை புள்ளிகள் உயரும் என்று மத்திய வங்கி புதன் கிழமை அறிவித்தது இது தொற்றுநோய்களின் பெரும் பகுதிக்கு 0.25 சதவீதமாக இருந்தது. இது தற்போது 0.5 சதவீதமாக உயர்ந்துள்ளது.

இந்த முடிவோடு ஒரு அறிக்கையில், கனடாவின் வங்கி உக்ரைனில் நடக்கும் போர "நிச்சயமற்ற ஒரு முக்கிய புதிய ஆதாரம்" என்று கூறியது. இது எண்ணெய் மற்றும் பிற பொருட்களின் விலைகளை உயர்த்துகிறது.

இது உலகம் முழுவதும் பண வீக்கத்தை அதிகரிக்கும், மேலும் நம்பிக்கையின் மீதான எதிர் மறை தாக்கங்கள் மற்றும் புதிய விநியோக இடையூறுகள் உலகளாவிய வளர்ச்சியைப்பாதிக்கலாம். நிதிச்சந்தை ஏற்ற இறக்கம் அதிகரித்துள்ளது. நிலைமை சீராக உள்ளது, நாங்கள் நிகழ்வுகளை உன்னிப்பாகப் பின்பற்றுகிறோம்," என்று வங்கி தெரிவித்துள்ளது.

2021 இன் கடை சிகாலாண்டில் கனடாவின் பொருளாதாரம் 6.7 சதவீத வருடாந்திர வேகத்தில் வளர்ந்ததாக இந்த வாரம் செய்தியை வங்கி மேற் கோள் காட்டியுள்ளது இது வங்கி "மிகவும் வலுவானது" என்று விவரித்தது.

"இது வங்கியின் கணிப்பைக்காட்டிலும் வலுவானது மற்றும் பொருளாதார மந்தநிலை உறிஞ்சப்பட்டது என்ற அதன் கருத்தை உறுதிப்படுத்துகிறது."

கனடாவின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட காரணிகளையும் வங்கி தனது நடவடிக் டெஸ்ஜார்டின்ஸின் (Desjardins) சமீபத்திய ஆராய்ச்சியின் படி, இந்த ஆண்டின் நடுப் பகுதியில், கியூபெக் மற்றும் ஒன்ராறியோவில் நாம் அனுபவித்துவரும் விரைவான விலைவளர்ச்சி குறையக் கூடும்.




கனடாவின் எல்லைகளுக்கு அப்பாற்பட்ட காரணிகளை யும் வங்கி தனது நடவடிக்கைக் கான காரணங்களாகக் குறிப்பிட்டுள்ளது.

"கொரோனா வைரஸின்ஸ ஓமிக்ரான் மாறு பாட்டின் தாக்கத்திலிருந்து பொருளாதாரங்கள் எதிர்பார்த்ததைவிட விரைவாக வெளிவருகின்றன" என்று வங்கி கூறியுள்ளது.

மேலும் வங்கி உக்ரைனின் தற்போதைய படையெடுப்பை பண வீக்கத்தை பாதிக்கும் மற்றொரு காரணியாக அல்லது கனடாவின் பொருளாதாரத்தின் பிற பகுதிகளை மேற்கோளிட்டுள்ளது.

மற்றவற்றுடன்ரஷ்யாதனதுஅண்டைநாடுமீதானதூண்டுதலற்றதாக்குதலால்உரம்,இயற்கைஎரிவாயுமற்றும்எண்ணெய்போன்றபொருட்களின்விலைவிண்ணைமுட்டும்அளவிற்குஉயர்ந்துள்ளது.

இரஷ்யாவிலிருந்து இனி எண்ணெய் இறக்குமதி செய்வதில்லை என்று உறுதியளித்த பல நாடுகளில் கனடாவும் ஒன்றாகும், ஆனால் அந்த நடவடிக்கையின் தாக்கங்களில் ஒன்று விலையை அதிகரிக்கச்செய்வதாகும். மேற்கு டெக்சாஸ் இன்டர் மீடியட் என்று அழைக்கப்படும் வடஅமெரிக்கக்கா எண்ணெய் அளவு கோலின் விலை புதன் கிழமை ஒருபீப்பாய்க்கு 111ஆக உயர்ந்தது. இது எட்டு ஆண்டுகளில் இல்லாத அதிகபட்ச விலையாகும்.

இது அனைத்து கனேடிய நுகர்வோர் மற்றும் வணிகங்களுக்கு தேவைப்படும் எரிசக்திக்கான விலையை உயர்த்துகிறது. இது பணவீக்கத்திற்கு மேலும் பங்களிக்கும்.

"உக்ரைனின் படையெடுப்பு எரிசக்தி மற்றும் உணவு தொடர்பான பொருட்களின் விலைகள் மீது மேலும் அழுத்தம் கொடுக்கிறது" என்று வங்கி கூறியது. "எல்லாவற்றையும் கூறினால், பண வீக்கம் ஜனவரியில் திட்டமிடப்பட்டதை விட சமீபகாலத்தில் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வருமான வரி சேவை Income Tax preparation
100% FREE For Health Care Workers
50% OFF For Frontline Workers & First Time Filers
SCAN ME
File Your TAXES Remotely www.etaxcan.ca
etaxcan
ETAXCAN FINANCIAL CORP.
10 MILNER BUSINESS COURT, 3RD FLOOR
SCARBOROUGH ON M1B 3C6
Walk-In & Online Services Are Available - 7 Days 9am to 9pm
416-869-8265

# தமிழக செய்திகள்



## பேரறிவாளன் நிரந்தரமாக விடுதலை ஆவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது

### -தாயார் அற்புதம்மாள்-

மார்ச் 10. 2021

பேரறிவாளன் விரைவிலேயே நிரந்தரமாக விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்று அவரது தாயார் அற்புதம்மாள் கூறினார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருக்கும் பேரறிவாளன் உள்பட 7 தமிழர்களையும் விடுதலை செய்யக்கோரி கவர்னருக்கு அனுப்பப்பட்ட தீர்மானத்தின் மீது கவர்னர் இன்னும் முடிவெடுக்கவில்லை.

இந்த நிலையில் பரோலில் வெளியே வந்த பேரறிவாளன் தனக்கு ஜாமீன் வழங்க கோரி சுப்ரீம் கோர்ட்டில் மனு செய்தார். மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு அவருக்கு ஜாமீன் வழங்கி உத்தரவிட்டது.

மகனின் விடுதலைக்காக தொடர்ந்து போராடி வரும் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் கூறியதாவது:-
மிக நீண்ட சட்ட போராட்டத்தை தொடர்ந்து சுப்ரீம் கோர்ட்டு ஜாமீன் வழங்கி இருப்பது மகிழ்ச்சியை தருகிறது. 32 வருடமாக ஜெயிலில் இருக்கும் அவனது பாதி வாழ்க்கை ஜெயிலிலேயே முடிந்துவிட்டது. ஜெயில் வாசத்திலும் நல்ல ஒழுக்கத்தையும், படிப்பையும் வழங்கி இருப்பது மகிழ்ச்சியை தருகிறது.

எனக்கு வாழ்க்கையில் எதுவும் தேவையில்லை. எனது மகன் விடுதலையாக வேண்டும். பேரறிவாளனுக்கு ஏற்கனவே பரோல் வழங்கப்பட்டிருந்தாலும் சுதந்திரமாக வெளியே செல்ல முடியாது. இந்த பிரச்சினையையும் அவனது உடல் நிலையையும் கருத்தில் கொண்டு ஜாமீன் கிடைத்து இருக்கிறது.

நியாயம் என்றாவது ஜெயித்தே தீரும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. விரைவிலேயே நிரந்தரமாக விடுதலை செய்யப்படுவார் என்ற நம்பிக்கையும் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.



## பேரறிவாளனிற்கு பிணை வழங்கியது நீதிமன்றம்

மார்ச் 09, 2022



ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் 32 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனுக்கு உச்சநீதி மன்றம் ஜாமீன் வழங்கி உத்தரவிட்டுள்ளது. முன்னதால் பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்க மத்திய அரசு கடும் எதிர்ப்பு தெரிவித்தது. மேலும் ராஜீவ் கொலை வழக்கு தொடர்பாக சிபிஜ விசாரித்துவருகிறது என மத்திய அரசு தரப்பில் வாதிடப்பட்டது. ஆனால் இதனை ஏற்க மறுத்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், சிபிஜ விசாரித்து வருவது எங்களுக்கு தெரியும். அது பற்றி பின்னர் முடிவெடுக்கலாம். இப்போது பேரறிவாளனுக்கு ஜாமீன் வழங்குவது என நாங்கள் தீர்மானமாக உள்ளோம் என மீண்டும் மீண்டும் நீதிபதிகள் கூறினர்.

### பரோல் கொடுத்த தமிழக அரசு

இந்நிலையில் பேரறிவாளன், நளினி, ரவிச்சந்திரன் உள்ளிட்டோருக்கு தமிழக அரசு அடுத்தடுத்து பரோல் விடுப்பு வழங்கி உள்ளது. பேரறிவாளனுக்கு ஒவ்வொரு மாதமும் பரோல் நீட்டிப்பு வழங்கப்பட்டும் வருகிறது. கடந்த 10 மாதங்களாக பேரறிவாளன் பரோல் விடுப்பில் உள்ளார்.

### உச்சநீதிமன்றத்தில் வழக்கு

இந்நிலையில் பேரறிவாளன் தரப்பில் உச்சநீதிமன்றத்தில் ஏற்கனவே ஒரு மனுத் தாக்கல் செய்யப்பட்டது. அதில் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தம் மீதான குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்பதால் தம்மை வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரியிருந்தார். இந்த மனுவை நீதிபதிகள் நாகேஸ்வர ராவ், பி.ஆர்.கவாய், பி.வி.நாகரத்னா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் விசாரித்தது.

### ஆளுநர் தரப்புவாதம் நிராகரிப்பு

இந்த விசாரணையின் போது, 7 தமிழரை விடுதலை செய்ய வேண்டும் என்ற தமிழக அமைச்சரவை தீர்மானம் மீது ஆளுநர் தரப்பில் எந்த முடிவும் எடுக்கப்படாமல் இருப்பதற்கு அதிருப்தி தெரிவித்தனர் உச்சநீதிமன்ற நீதிபதிகள். மேலும் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் சர்வதேச பின்னணி குறித்த பல்நோக்கு கண்காணிப்பு குழுவின் விசாரணைக்காக காத்திருப்பதாக ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. பேரறிவாளன் மனுவுக்கும் ஆளுநர் தரப்பின் கருத்துக்கும் தொடர்பு இல்லை எனவும் உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்திருந்தது

## கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவிட்கு 76 தமிழகத் மக்கள் அனுமதி




மார்ச் 11, 2022

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கச்சத்தீவில் அமைந்துள்ள புனித அந்தோணியார் ஆலய திருவிழா இன்றும் நாளையும் கொண்டாடப்படுகிறது. இதையொட்டி இன்று காலை இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 76 தமிழக மக்கள் மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப்படகில் புறப்பட்டனர்.

கச்சத்தீவு செல்லும் தமிழ் மக்களை இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் வைத்து சுங்கத்துறை, காவல்துறை மற்றும் சுகாதாரத்துறையினர் முழுமையாக சோதனை செய்த பின் படகுகளில் செல்ல அனுமதித்தனர்.

மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் கச்சத்தீவு செல்லும் விசைப்படகுகளை முழுமையாக சோதனை செய்தனர். அதற்குப் பிறகு, இராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் காமாட்சி கணேசன் கொடி அசைத்து பயனத்தைத் தொடங்கி வைத்தார்.

அதேபோல் இன்று இலங்கை யாழ்பாணம் மறைமாவட்டத்தின் கீழுள்ள நெடுந்தீவில் பங்குதந்தை வசந்தம் தலைமையில் இலங்கை பக்தர்கள் 50 பேர் திருவிழாவில் கலந்து கொள்கின்றனர்.

இதற்கான முழு ஏற்பாடுகளை இலங்கை யாழ்பாணம் மாவட்டம் நெடுந்தீவு நிர்வாகம் மற்றும் இலங்கை கடற்படை சார்பில் செய்யப்பட்டுள்ளது.

கச்சத்தீவு திருவிழாவில் கலந்துகொள்ள செல்லும் இலங்கை மற்றும் தமிழக மீனவர்களை ஒன்றிணைத்து மீனவர் பிரச்னை குறித்து ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடத்தப்பட உள்ளதால் இந்திய மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவித் துள்ளனர்?

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழாவையொட்டி பாதுகாப்பு நலன் கருதி இன்றும் நாளையும் நாட்டுப் படகு மற்றும் விசைப் படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லக் கூடாது என இராமேஸ்வரம் மீன் வளத்துறையினர் அறிவித்துள்ளனர். இதனால் இராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் உள்ள சுமார் 800க்கும் மேற்பட்ட விசைப் படகுகளும் 300க்கும் மேற்பட்ட நாட்டுப் படகுகளும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.



# உலக செய்திகள்

# ரஸ்யாவின் போர் நடவடிக்கை ஆரம்பமான பின்னர் 4000 விலங்குகளுடன் தங்கியுள்ள மிருகக்காட்சிசாலையின் பணியாளர்களும் அவர்கள் குடும்பத்தவர்களும்

மார்ச் 06, 2022

ரஷ்யா தனது இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தது முதல் உக்ரேன் தலைநகரில் உள்ள மிருகக்காட்சி சாலையின் பணியாளர்கள் 4000 விலங்குகளுடன் மிருகக்காட்சி சாலையிலேயே வசித்து வருகின்றனர்.

ரஸ்யாவின் இராணுவ நடவடிக்கை தொடர்வதால் உக்ரேன் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ள அதே வேளை தலைநகரில் உள்ள மிருகக்காட்சி சாலையின் பணியாளர்ளும் இயக்குநரும் விலங்குகளை பராமரிப் பதற்காக அங்கேயே தங்கியிருக்க தீர்மானித்துள்ளனர்.

அந்த மிருகக்காட்சி சாலையில் 4000க்கும் மேற்பட்ட விலங்குகளும் உயிரினங்களும் உள்ளன.

போர் மூண்ட பின்னர் மிருகக்காட்சிசாலையின் பராமரிப்பாளர்கள் தங்கள் குடும்பத்துடன் அங்கேயே தங்கியுள்ளனர்.

அவர்கள் தங்களை மிருகக்காட்சி சாலை இராணுவ குழு என அழைக்கின்றது என ரொய்ட்டர் தெரிவித்துள்ளது.

பகல்முழுவதும் நாங்கள் விலங்குகளுடன் இருப்போம், இரவில் இரஷ்யர்களின் தாக்குதல் காரணமாக நாங்கள் பதுங்குழிகளில் தஞ்சமடைகின்றோம் என மிருகக்காட்சி சாலையின் இயக்குநர் கிரில் டிரென்டின் தெரிவித்தார்.

சமீபத்தில் பெரும் மோதல் வெடித்தது படையினர் ஒரு இராணுவ அணியை கைப்பற்ற முயன்றிருக்கலாம் என அவர் குறிப்பிட்டார்.

டிரேசர் குண்டுகள் ரவைகள் எல்லா மிருகக்காட்சி சாலையின் எல்லாஇடத்திலும் பறந்தன,விலங்குகள் மோதல்கள் காரணமாக கடும் அழுத்தத்தில் உள்ளன என அவர் தெரிவித்தார்.

மறுநாள் காலை எந்த விலங்கிற்காவது காயம் ஏற்பட் டுள்ளதா என நாங்கள் சோதனை செய்தோம்,எவருக்கும் காயமில்லை எவரும் இறக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

பறவைகள் சில அச்சமடைந்து தங்கள் கூடுகளிற்குள் இருந்து வெளியேற முற்பட்டதால் சிறிய காயங்கள் ஏற்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார்.




இராணுவ நடவடிக்கைகள் காரணமாக விலங்குகள் சில அழுத்தத்திற்குள்ளாகியுள்ளதால் சிலவற்றை உட்புற மூடப்பட்ட பகுதிகளிற்கும் நிலத்தடி காட்சியகங்களிற்கும் பணியாளர்கள் மாற்றியுள்ளனர் என அவர் தெரிவித் துள்ளார்.







**பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப உருவாக்குவதற்கு மேலும் முழுமையான அவசர சீர்திருத்தங்கள் அவசியம் என ஜேர்மனி தெரிவித்துள்ளது. சிவில் சமூகம் சுதந்திரமாக பாதுகாப்பாக செயற்பட அனுமதிப்பது குறித்தும் ஜேர்மனி தெரிவித்துள்ளது.**

05.03.2022




**காணாமல்போனவர்கள் குறித்த அலுவலகம் காணாமல்போனவர்கள் குறித்து மிகவும் மந்த கதியில் விசாரணைகளை முன்னெடுப்பது குறித்து பிரிட்டன் கவலை வெளியிடடுள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவை நீண்டகால கரிசனைகள் தொடர்ந்தும் நீடிக்கின்றன என பிரிட்டன் தெரிவித்துள்ளது.**

05.03.2022



# பயங்கரவாத தடைச்சட்டத்திற்க்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் நுவரெலியாவில் முன்னெடுக்கப்பட்ட போது








நிலைமாற்றுக்காலை நீதி பொறுப்புக்கூறல் நல்லிணக்கம் போன்ற விடயங்களில் போதியவு முன்னேற்றமில்லை – நோர்வேசிவில்சமூகத்தினர் மீதான கண்காணிப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் தன்னிச்சையான கைது நடவடிக்கைகளை இலங்கை முடிவிற்கு கொண்டு வரவேண்டும் என நோர்வே வேண்டுகோள் விடுத்துள்ளது. நிலைமாற்றுக்காலை நீதி பொறுப்புக்கூறல் நல்லிணக்க போன்ற விடயங்களில் போதியவு முன்னேற்றமில்லாதது குறித்து கவலையடைந்துள்ளோம் என நோர்வே தெரிவித்துள்ளது 05.03.2022







முன்னைய மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புக்கூறல் இன்மை ஜனநாயக ஸ்தாபனங்கள் நீதித்துறையின் சுதந்திரம் இல்லாமல்போதல் குறித்து மனித உரிமை பேரவையில் நெதர்லாந்து கவலை

04.03.2022

பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச தராதரங்களிற்கு ஏற்ப மாற்றவேண்டும் – ஐரோப்பிய ஒன்றியம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டவர்கள் சமீபத்தில் பிணையில் விடுதலை செய்யப்பட் டதை வரவேற்கின்றோம், மேலும் விடுதலைகளை ஊக்குவிக்கின்றோம்.

சிவில் சமூக அமைப்புகளை தொடர்ந்து கண்காணிப்பதையும் அச்சுறுத்துவதையும் கண்டிக்கின்றோம்

4.03.2022







இலங்கை மக்கள் சிறந்த முறையில் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக இலங்கை ஐநாவிற்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டும் – மனித உரிமை பேரவையில் பிரான்ஸ் தூதுவர்

04.03.2022

பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான ஆர்வத்தை இலங்கை அரசாங்கம் வெளிப்படுத்தவில்லை– சர்வதேச வழிமுறைகளை பயன்படுத்தவேண்டும்– மனித உரிமை ஆணையாளர்

பொறுப்புக்கூறலை முன்னெடுப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் தனக்குள்ள விருப்பத்தை வெளிப்படுத்தவில்லை என தெரிவித்துள்ள ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்செலே பச்செலெட் பொறுப்புக்கூறலை முன்னகர்த்துவதற்கு அவசியமான சர்வதேச மூலோபாயங்களை மனித உரிமை பேரவை முன்னெடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். தற்போதைய அரசாங்கம் பொறுப்புக்கூறல் தொடர்பில் தனது விருப்பமின்மையை வெளிப்படுத்தியுள்ளதுடன் யுத்த குற்றங்களில் ஈடுபட்டனர் என குற்றம்சாட்டப்பட்ட சிரேஸ்ட அதிகாரிகளை அரசாங்கத்திற்குள் உள்வாங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். 4.03.2022





சிவில் நிர்வாக பதவிகளிற்கு இராணுவ அதிகாரிகளை நியமிப்பது குறித்து நான் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளேன், இவர்களில் சிலர் மோசமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளிற்கு உள்ளானவர்கள்

04.03.2022

**தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படுதலை முடிவிற்கு கொண்டுவருவதற்கும் கடந்த கால மீறல்கள் மீண்டும் நிகழாமலிருப்பதை உறுதிப்படுத்துவதற்கும் அவசியமான ஆழமான நீதி ஸ்தாபன மற்றும் பாதுகாப்பு துறை சீர்திருத்தங்களை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என மனித உரிமை ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

04.03.2022






**பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரிவுகளை திருத்துவதற்கான யோசனைகள் மற்றும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் வரவேற்கத்தக்க ஆரம்ப கட்ட முயற்சிகள் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பான அடிப்படை பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தை நான் கேட்டுக்கொள்கின்றேன் – மனித உரிமை ஆணையாளர்**

**பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களிற்கும் தொடர்ந்தும் நீதி மறுக்கப்படுகின்றது– ஐநா மனித உரிமை ஆணையாளர்**

இலங்கை குறித்து ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவை கவனத்தை செலுத்துவதற்கான முக்கிய தேவை உள்ளது என தெரிவித்துள்ள மனித உரிமை ஆணையாளர் மிச்செல் பச்செலெட் கடந்த வருடம் பொறுப்புக்கூறலிற்கான மேலும் தடைகளும் பின்னடைவுகளும் காணப்பட்டன எனவும் குறிப்பிட்டுள்ளார். பாதிக்கப்பட்டவர் களுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களிற்கும் தொடர்ந்தும் நீதி மறுக்கப்படுகின்றது

4.03.2022



# உக்ரேன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தில் வாக்களிக்காத இந்தியா

பெப்ரவரி 26, 2022

உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு எதிராக ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் தோல்வி அடைந்தது. இந்த தீர்மானத்தின் மீது இந்தியா வாக்களிக்கவில்லை. இதற்கான காரணங்கள் இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரஷ்ய படைகள் உக்ரைன் மீது 3ஆவது நாளாக தாக் குதல் நடத்தி வருகின்றன. உக்ரைன் நாட்டின் ஏராள மான இராணுவ இலக்குகளை ரஷ்ய படைகள் தாக்கி அழித்துள்ளன. உக்ரைனும் பதிலடி கொடுத்து வருகிறது. இதனால் தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவிவருகிறது. உக்ரைன் தலைநகரான கீவ்-வை நெருங்கியுள்ள ரஷ்ய படைகள் சுற்றி வளைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

ரஷ்யா உக்ரைன் மீது நடத்தி வரும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்க ஐ.நா. சபையில் அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்தது. மொத்தமுள்ள 15 நாடுகளில் 11 நாடுகள் தீர்மானத்தை ஆதரித்தன. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் தீர்மானத்தை புறக்கணித்தன. 11 நாடுகள் ஆதரவு தெரிவித்தபோதிலும் நிரந்தர உறுப்பினருக்கு உள்ள வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானத்தை ரஷ்யா தோல்வியுறச் செய்தது.

வாக்கெடுப்பில் பங்கேற்காதது தொடர்பாக ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி டி.எஸ். திருமூர்த்தி அளித்துள்ள விளக்கத்தில், உக்ரைனில் ஏற்பட்டுள்ள சமீபத்திய மாற்றங்களால் இந்தியா மிகவும் கவலையடைந்துள்ளது. வன்முறை மற்றும் விரோதப் போக்கை




உடனடியாக நிறுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

மனித உயிர்களை விலையாக வைத்து எந்த தீர்வையும் எட்ட முடியாது. பேச்சுவார்த்தை பாதையை கைவிட்டது வருத்தம்கொள்ள செய்கிறது. நாம் அந்த பாதைக்கு மீண்டும் திரும்ப வேண்டும். இந்த அனைத்து காரணங்களுக்காகவே தீர்மானத்தை இந்திய புறக்கணித்ததாக கூறியுள்ளார்.

## 21 CENTURY OF GENOCIDE IN SRI LANKA

# MORTGAGE

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinіccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

**Cell : 416-624-4843**

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

Allstate. You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும் தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும் என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
**(416) 817 5060**
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316




BOROS CANADIAN
PAPER CONVERTING INC.




**Alan Maniam**
Director

**647 299 2450**

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

# “இறந்துபோனோரின் அமைதியைக் கெடுத்தவர்கள் இறவாதோருக்கும் நிம்மதியை அளிக்கமாட்டார்கள்”

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 1997 ஆம் ஆண்டு மாவீரர் நாள் செயதியிலிருந்து–



“இனத்துவேசப் பகை உணர்வினால் தூண்டப்பட்ட பேரின வாதம் தமிழினத்தால் என்றுமே மன்னிக்கமுடியாத ஒரு படு பாதகச் செயலில் இறங்கியது. யாழ் குடாநாடு எதிரிப்படைகளின் கைகளில் வீழ்ந்தபோது இந்த வேதனைக்குரிய சம்பவம் நடைபெற்றது.

தமிழீழத்தாயின் மடியில் நித்திய உறக்கத்தில் ஆழ்ந்திருந்த எம்மினிய மாவீரர்களின் ஆன்ம அமைதி எதிரியால் குலைக்கப்பட்டது. அவர்களது கல்லறைகள் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டன. அவர்களது நினைவுச் சின்னங்கள் சிதைக்கப்பட்டன. புனிதர்களாக சரித்திர நாயகர்களாக தேசிய வீரர்களாய் தமிழீழ மக்களால் பூசிக்கப்படும் மாவீரர்களின் புதைகுழிகளை மாசுபடுத்தி அவர்களது புனிதத் தலங்களான துயிலும் இல்லங்களை சிதைத்தழித்த இச் செயலை மிகவும் அநாகரிகமான கீழ்த்தரமான இழிசெயல் என்றே நான் கூறுவேன்”.

“ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடாவடித்தனமான இச் செயலை சிறுமைப்படுத்திவிட முடியாது. இது மிகவும் பாரதூரமான பயங்கரவாதச்செயல். தமிழீழத்தின் தேசிய ஆன்மாவில் நீங்காத கறை ஏற்படுத்திய இந்த அவச்செயலுக்கு சிங்களப் பேரினவாத அரசு பொறுப்பேற்க வேண்டும்.

இந்தப் பண்பற்ற செயல் ஒரு உண்மையைப் பகர்கின்றது. அதாவது சிங்கள தேசத்தை ஆண்டுவரும் இனவாத ஆட்சியாளர்கள் தமிழர்களின் உணர்வுகளுக்கு என்றுமே மதிப்பளிக்கப்போவதில்லை. அத்துடன் தமிழ்மக்களின் தேசிய அபிலாசைகளைப் புரிந்து அவர்களுக்கு நீதியும் வழங்கப் போவதில்லை. அத்துடன் தமிழ் மக்களின் தேசிய அபிலாசை களைப் புரிந்து அவர்களுக்கு நீதியும் வழங்கப்போவ தில்லை. இறந்துபோனோரின் அமைதி யையே கெடுப்பவர்கள் இறவாதோருக்கு நிம்மதியைக் கொடுப்பார்களென நான் கருதவில்லை.”










TAX ANALYST
ACCOUNTING | BOOKKEEPING | & MORE
Affordable and Reliable Services
Experienced Accountants
Presonal & Corporate Tax
Tax Planning / Audit Appeal
HST/GST/WSIB
Bookkeeping & Payroll
UBER/LYFT Tax Filling
CRB/CERB HELP
OFFICE
416-898-8879
CALL FOR APPOINTMENT
416-838-2826
105Consumers Drive.
Whitby ON L1N 1C4
115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6
www.taxanalyst.ca
taxmatters@kannantax.com


சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com


HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
up to
$5000
REBATE
0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE
ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
geansam@yahoo.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


PEEL TAE KWON-DO
PEEL TAE KWON DO
Family Martial Arts
Trusted Local Taekwon - Do
Training School
* Over 20+ Years Taekwon-Do Training Experience
* For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
2016 READERS' CHOICE AWARDS
* Top Quality Training for Kids, Teens and Adults
Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571
Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268




# ஜொனி மிதிவெடிகள்: பெயரிடலும் வரலாறும்



1987 ஐப்பசி 10.

இந்தியப் படையுடன் போர் தொடங்கிவிட்டது.

அடுத்தநாள் –
கொக்குவில் பிரம்படி வீதியில் இருந்த தலைவரின் பாசறையை இலக்கு வைத்து, இந்தியப் படையின் சிறப்புக் கொமாண்டோக்கள் தாக்குதலைத் தொடுத்தனர். அவர்களின் முயற்சி வெற்றிபெறவில்லை. ஆனாலும் தலைவர் தனது பாசறையை இடம் மாற்றிக்கொண்டார்.

'ஒப்பறேசன் பவான்' என்ற பெயரில் புகழ் பெற்ற யாழ்ப்பாணச் சமரை இந்தியப் படைகள் தொடர்ந்தன.

"ஓரிரு நாட்களுக்குள் எல்லாம் முடிந்து விடும்" என்றார்கள் இந்தியத் தலைவர்கள்.

ஆனால் 'யாழ்ப்பாணச் சமர்' ஒரு மாதம் நீடித்தது. போரைத் தொடர்ந்து வழிநடாத்துவதற்காக தலைவர் தளத்தை மாற்றிக்கொண்டார். சில வாரங்கள் கழித்து இந்திய தளபதிகளும் இதை அறிந்து கொண்டு விட்டனர்.

ஆனால் யாழ்ப்பாணத்தை விட்டு தலைவர் எங்கு சென்றிருப்பார் என்பது, இந்திய தளபதிகளுக்கு புதிராகவே இருந்தது.

அல்லது மன்னார் பெருங்காட்டிற்குச் சென்று விட்டாரா?

அல்லது கொக்கிளாய் ஆற்றைக் கடந்து திருகோணமலைக்குச் சென்று விட்டாரா?

வரைபடத்தை விரித் துவைத்துவிட்டு இந்தியத் தளபதிகள் குழம்பத் தொடங்கினர்.

தலைவரின் இருப்பிடத்தைக் கண்டறிந்து சொல்வதில் சிங்களப் புலனாய்வுத் துறையும் பெருமுயற்சி செய்தது. ஆனாலும், தலைவரின் இருப்பிடம் தொடர்பான ஊகங்களைத் தவிர, சான்றுகளைப் பெறமுடியவில்லை.

தலைவரைத் தேடி இந்தியப் படைகள் வன்னிப் பெருநிலத்திலும், தென் தமிழீழத்திலும் மோப்பம் பிடித்துத் திரிந்தன.

இதேவேளை தமிழ்நாட்டில் தங்கியிருந்த கிட்டண்ணை, இந்தியப் படையுடன் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வந்து பேச்சு வார்த்தை நடாத்த முயன்றபடி இருந்தார்.

இந்திய அரசின் சம்மதத்தைப் பெற்று லெப். கேணல் ஜொனியை தலைவரிடம் அனுப்பி, அவரின் கருத்துக்களையும்-பணிப்புக்களையும் பெற கிட்டண்ணை முடிவெடுத்தார்.

கிட்டண்ணையின் வேண்டுகோளை இந்தியப் படை ஏற்றது. ஆனால் ஜொனி இரகசியமாக தமிழீழத்திற்குச் செல்வதை அது தடுத்தது.

ஜொனி செல்ல விரும்பும் இடத்திற்கு தாங்களே




கூட்டிச் சென்று பாதுகாப்பாக விட்டுவிடுவதாக இந்தியத் தளபதிகள் பாசாங்கு செய்தனர்.

ஜொனியின் பயணத்தைப் பயன்படுத்தி தலைவரின் இருப்பிடத்தை அறிந்துகொள்ள அவர்கள் திட்டமிட்டனர்.

இந்தியத் தளபதிகளின் நோக்கம் தெரியாத ஒன்றல்ல. ஆயினும் அவர்களது கட்டளையை ஏற்க வேண்டிய தேவையும் நிர்ப்பந்தமும் இருந்தன.
இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

இந்தியப் படை வவுனியா வரை ஜொனியைக் கூட்டிச்சென்று விட்டுவிடுவது என்றும், அதன்பின் ஜொனி தானாகவே தலைவரைத் தேடிச் சென்று சந்தித்து மீண்டும் வவுனியா இந்தியப் படை முகாமுக்கே திரும்பி வந்துவிடுவது என்றும், இணக்கம் காணப்பட்டது.

இந்தியத் தளபதிகளும் இதற்கு இணங்கினர்.

ஜொனியை வவுனியா கொண்டு சென்று இறக்கிவிடு முன்னரே, வன்னிப் பெருநிலத்தில் ஜொனியின் பயணத்தைக் கண்காணிக்க இந்தியத் தளபதிகள் ஏற்பாடுகளைச் செய்தனர். ஜொனி வவுனியா கொண்டுவந்து விடப்பட்டார்.

தேசவிரோதக் கும்பல்களினதும், அவர்களது உளவாளிகளினதும் மற்றும் பதுங்கியிருக்கும் இந்தியச்சிப்பாய்களினதும் கண்களில் படாது சுற்றிச் சுழன்று, தலைவரின் இருப்பிடத்திற்கு விரைந்தார்.

தலைவரைச் சந்தித்தார். கிட்டண்ணையிடம் சொல்லவேண்டிய விடயங்களை மனதில் பதித்தார். மீண்டும் வவுனியா நோக்கிப் பயணத்தை தொடங்கினார்.

பயணத்தின் ஒரு கட்டத்தில் புதுக்குடியிருப்புக்கு வந்து, அங்கிருந்து சைக்கிள்மூலம் விஸ்வமடுவரை செல்ல முயன்று கொண்டிருந்தார்.

தேவிபுரத்திற்கு அருகே உள்ள காட்டாறு ஒன்றிற்குள், ஜொனியின் பயணப் பாதையை அறிந்துகொள்ளப் பதுங்கிக்கிடந்த இந்தியச் சிப்பாய்களின் துப்பாக்கி வீச்செல்லைக்குள், ஜொனியின் சைக்கிள் சென்றுவிட்டது.

ஜொனி மீண்டும் வவுனியா திரும்பும் வரை வன்னிப் பெருநிலப்பரப்பில் இராணுவ நடவடிக்கைகள் எதையுமே செய்யமாட்டோம் என்ற இந்தியத் தளபதிகளின் வாய்மொழி வாக்குறுதியையும் மீறி, ஜொனி சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஒரு கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்தும் தந்திரோபாயத்தை இந்தியத் தளபதிகள் கடைப்பிடித்தனர்.

ஜொனியின் பயணத்தைப் பயன்படுத்தி தலைவரின் இருப்பிடத்தை சரியாகக் கண்டறிவது ஒன்று மற்றையது புலிகளின் தளபதியை தந்திரோபாயமாகக் கொன்று விடுவது.

இரண்டையுமே இந்தியத் தளபதிகள் அடைந்து விட்டனர்.

வவுனியாவுக்கு மேற்குப் புறத்தில் இருக்கும் மன்னாரிலோ அல்லது கொக்கிளாய் வாவிக்கு அப்பாலுள்ள தென் தமிழீழத்திலோ தலைவர் இல்லை அவர் மணலாற்றுக் காட்டிற்குள்தான் பாசறை அமைத்து இருக்கின்றார் என்பதை ஜொனியை தடயமாக வைத்து அறிந்து கொள்ள, இந்தியத் தளபதிகளுக்கு வெகுநேரம் பிடிக்கவில்லை.

'இராசா' கண்டுபிடிக்கப்பட்டுவிட்டார். ஆகவே இராசா இனி நகர முடியாது என்று நினைத்துக் கொண்டு, இந்தியப் படைகள் 'செக்மேற்' சொன்னார்கள்.

ஜொனி சுட்டுக்கொல்லப்பட்டதும் அடுத்து என்ன நடக்கவிருக்கின்றது என்பதை தலைவர் ஊகித்தறிந்துகொண்டுவிட்டார்.

இன்னும் சில வாரங்களில் இந்தியப் படைகள் மணலாறு மீது ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுவார்கள் என்று தலைவர் எதிர்பார்த்தார்.

வெள்ளம் போல் காட்டுக்குள் நுழையப் போகும் இந்தியச் சிப்பாய்களுடன் மரபுவழிச் சமரை நடாத்துவது எளிதல்ல என்பதும், தலைவருக்குத் தெரியும். அதற்காக பின்வாங்கிச் செல்லவும் – அவர் விரும்பவில்லை. ஏனெனில் அது புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாக அழித்துவிடும் என்று, அவர் உறுதியாக நம்பினார். தமிழீழ தேசியத்திற்குக் கவசமாக இருக்கும் புலிகளின் இராணுவ பலம் சிதைக்கப்பட்டால், தமிழினம் அரசியல் ரீதியாக ஒடுக்கப்பட்டுவிடும் என்று தலைவர் அஞ்சினார்.

ஆகவே இந்தியப் படையுடனான போரை அடுத்த கட்டத்திற்கு நகர்த்திச் செல்லவேண்டிய வரலாற்றுக் கடமை தன்மீதே இருக்கின்றது என்பதை நன்குணர்ந்த தலைவர் அவர்கள், சாதிக்க அல்லது சாக முடிவெடுத்தார்.

மணலாற்றைத் தளமாக்கிய அடுத்த கணத்திலிருந்தே ஒரு பெரும் காட்டுச் சமருக்காக காட்டையும் – போராளிகளையும் ஏற்கனவே தலைவர் தயார்ப்படுத்தியிருந்தார்.

இப்போது, முல்லைத்தீவு மாவட்டத்திலும்-மணலாற்றுக் காட்டிற்குள்ளும் இருந்த சில நூறு புலிவீரர்களை, ஒரு பெரும் சண்டைக்குத் தயாராக்கினார்.

காட்டிற்குள் நுழையப் போகும் இந்தியப் படைகளின் சுதந்திரமான நகர்வைக் குழப்புவதன் மூலம் சில இராணுவ சாதனைகளைப் படைக்கமுடியும் என்றும், இவ்விதம் பல இராணுவ சாதனைகளை நிகழ்த்துவதன் மூலம் இந்தியப் படையின் இராணுவ நடவடிக்கையை முறியடிக்க முடியும் என்றும், தலைவர் எண்ணினார். இந்த இராணுவ சாதனைகள் ஒரு உளவியல் போருடன் கலந்து செய்யப்படுமானால், அது இரட்டிப்புப் பலனைக் கொடுக்

கும் என்றும் அவர் எதிர்பார்த்தார்.

ஒரு தரைப்படை வீரனை கனவிலும் அச்சுறுத்துவது மிதிவெடிகளும் பொறிவெடிகளும் கண்ணிகளும் தான். இப்படியான சந்தர்ப்பங்களில், தூக்கிய ஒருகாலைக் கீழே வைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒரு படை வீரன் செத்துப் பிழைக்கின்றான். இந்த மிதிவெடிகளை, எறும்புக்கூட்டம் போல வரவிருக்கும் இந்தியச் சிப்பாய்களுக்கு எதிராகப் பயன்படுத்தினால் நல்ல பலனைக் காணலாம்.

ஆனால் உயர் தொழில்நுட்பத்துடன் உற்பத்தி செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்படும் இத்தகைய மிதிவெடிகளுக்கு நாம் எங்கே போவது?

தலைவரது கனவிலும் - நினைவிலும் இந்தக் கேள்வியே உதித்து விடைதேடப் போராடியது.

ஒரு நாள் அதிகாலை நான்கு நான்கரை மணியிருக்கும்-

காட்டுப் பாசறையில் தனது படுக்கையில் இருந்தபடி சிந்தித்துக் கொண்டிருந்த தலைவர் அவர்கள் திடீரென எழுந்து, சில நூறுயார் தள்ளி இருந்த பாசறையில் தங்கியிருந்த இராணுவ தொழில்நுட்பப்பிரிவின் பொறுப்பாளர்களைத் தேடிச்சென்றார்.

தனது மனதில் தோன்றிய மிதிவெடித் தயாரிப்புப் பொறிமுறை பற்றி அவர்களுக்கு அப்போதே விளக்கிக்கூறினார்.

காட்டிலேயே கிடைக்கக்கூடிய மரத்தடி-ரின் பால்ப்பேணி, மற்றும் றபர்பான்ட்' என்பவற்றைக் கொண்டு, சிறுபிள்ளைகள் விளையாடும் 'கெற்றப்போலின்' தொழில்நுட்பத்தையும் பயன்படுத்தி மிதிவெடிகளைத் தயாரிக்க முடியும் என்று தலைவர் விளக்கி நம்பிக்கையூட்டிக்கொண்டிருந்தார்.

பரீட்சார்த்த முயற்சிகள் தொடங்கின.

சிறுதொகையில் வெடிமருந்தும், 'பென்டோச்' பற்றரியும், டெற்றொனேற்றரும்' தவிர மிகுதி அனைத்துப் பொருட்களும் உள்ளூர்ப் பொருட்கள்.

இறுதியில் முயற்சி வெற்றிகண் டது.

இப்போது இந்தியப் படைகள் மணலாற்றுக் காட்டைச் சூழ பல்லாயிரக் கணக்கில் விரைவாகக் குவிக்கப்பட்டனர். அதற்கு **ஒப்பறேசன் செக்மேற்** எனப் பெயரிட்டனர்.

மெதுவான வேகத்தில் மிதிவெடி தயாரிப்புத் தொடங்கியது.

அந்த மிதிவெடிக்குத் தலைவர் பெயரிட்டார் **ஜொனி மிதிவெடி**.

இந்தியப் படைகள் காட்டுச் சமரைத் தொடங்கி விட்டன.

ஜொனிக்கு நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டு காட்டுக்குள் நுழைந்த இந்தியப் படைக்கு, 'ஜொனி மிதிவெடி'கள் நம்பிக்கைத் துரோகம் செய்யத் தொடங்கிவிட்டன.

ஜொனியின் பயணத்தை நயவஞ்சகமாகப் பயன்படுத்தி 'பாதை' கண்டுபிடித்த இந்தியப் படைகளுக்கு இப்போது, ஜொனி மிதிவெடிகள் பாதத்தைக் கழற்றிக்கொண்டிருந்தன.

இந்தியப் படைகள் எண்ணியதைப் போல தலைவரை அழிக்க முடியவில்லை.

செக்மேற் 1...2...3 என இராணுவ நடவடிக்கை தொடர்ந்தது. 100...200...300 என இந்தியப் படைகளின் கால்களும் கழற்றப்பட்டன.

'செக்மேற்' அவமானத்துடன் முடிந்தது.

ஜொனி மிதிவெடிகள் புத்துயிர் பெற்று புது வேகம் கண்டன.

செக்மேற் முறியடிப்பின் முதுகெலும்பு ஜொனி மிதிவெடிகள்.

ஒரு பெரிய வரலாறு இம் மிதிவெடிக்குள்ளும் இப்பெயர் சூட்டலுக்குள்ளும் ஒளிந்து கிடக்கிறது!

நன்றி: விடுதலைப்புலிகள் இதழ் 1994 ம் ஆண்டு ஆவணி, புரட்டாதி



ஜொனி 95 மிதிவெடி இலங்கையில் விடுதலைப் புலிகளால் உருவாக்கபட்டுப் பாவிக்கபட்டது. இது மரப்பலகையில் மின்கலத்தை இணைப்பதன் மூலம் மிதிக்கும் போது மின் இணைப்பு குறுஞ் சுற்றாக்கப்படுவதன் மூலம் வெடித்தல் நிகழ்கிறது. இதில் மின்கலம் செயலிழந்தால் வெடிகத்தல் நிகழாது எனினும் வளவுகளைத் துப்பரவு செய்யும் போது எரித்தால் வெடித்தல் நிகழலாம் இதனாலே சேதனப் பசளையாக்குவது பரிந்துரைக்கப்படுகிறது. இது சுமாராக 50 கிராம் அளவிலான வெடிபொருளைக் கொண்டிருக்கும். இது அண்ணளவாக 11 செண்டிமீட்டர் நீளமும், 7 செண்டிமீட்டர் அகலமும் 5.5 முதல் 6 செண்டிமீட்டர் உயரமும் உடையது. கூடுதலான உலோகத்தை உள்ளடக்கிய படியால் இலகுவாக மிதிவெடிகளைக் கண்டுபிடிக்கும் கருவிகள் மூலம் கண்டுபிடிக்க இயலும். சிலசமயம் சிகப்பு நிறத்தில் ஆங்கிலத்தில் துழலெ 95 Made in Tamil Eeelam என்றவாறு எழுதப்பட்டு இருக்கும்.




ஜொனி 99 அல்லது ரங்கன் 99 விடுதலைப் புலிகளின் மனிதர்களுக்கு எதிரான மிதிவெடியாகும். இது பாக்கிஸ்தானிய பீ4எம்கே1 மிதிவெடியைப் பிரதிபண்ணுவதன் மூலம் உருவாக்கப்பட்டதாகச் சிலராற் கருதப்பட்டாலும் இது அதைவிட அளவிற் பெரியதுடன் பாரிய பாதிப்பை ஏற்படுத்தும். இது 100 கிராம் அளவிலான வெடிபொருளைக் கொண்டிருக்கும். 9 செண்டிமீட்டர் விட்டமும் 5.5 சென்டிமீட்டர் உயரமும் உடையது. பெரும்பாலும் பிளாஸ்டிக் கதிரைகள், ஏனைய பிளாஸ்டிக் பொருட்களை உருக்கியே இதன் வெளிப்பாகம் தயாரிக்கப்பட்டதால் இதற்குக் குறிப்பிட நிறம் ஏதும் இல்லை. பொதுவாக பிளாஸ்டிக் கதிரைகள் எந்த நிறத்தில் இருக்கிறதோ அந்த நிறத்திலே இது காட்சியளிக்கும்.





# தமிழ் மக்கள் ஒற்றை ஆட்சிக்கு எதிராக குரல் எழுப்பவேண்டும்

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

மார்ச் 03, 2022




தமிழ் மக்கள் மிகத் தீவிரமாக ஒற்றை ஆட்சிக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

13 ஆவது அரசியல் அமைப்பு திருத்தத்தினால் ஏற்படவுள்ள பாதிப்பு மற்றும் ஜெனிவா கூட்டத்தொடர் தொடர்பிலும் மக்களுக்கு தெளிவுபடுத்தும் கூட்டம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தலைமையில் வவுனியாவில் இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் அரசாங்கம் புதிய அரசியல் அமைப்பை கொண்டுவருவது தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தோம்.

இத்தகைய நேரத்திலே தமிழ் மக்கள் ஒன்றிணைந்து புதிய அரசியலமைப்பானது ஒற்றையாட்சி முறை ஒழிக்கப்பட்டுஇ ஒரு சமஷ்டி அரசியலமைப்பாக தமிழர்களுடைய வடகிழக்கு இணைந்த தாயகத்தை அங்கீகரிக்கின்ற, தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை, தமிழ் தேசம் இறமையை அங்கீகரிக்கின்ற அடிப்படையிலான ஒரு சமஸ்டி அரசியல் அமைப்பாக கொண்டுவரப்படுவதற்கான அழுத்தத்தை தமிழர்கள் தொடர்ச்சியாக வழங்க வேண்டும்.

இம்முறை மனித உரிமைகள் பேரவையினுடைய ஆணையாளருடைய அறிக்கையில் கூட புதிய அரசியலமைப்பு தயாரிப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதனை பார்க்கின்ற போது அரசாங்கம் புதிய ஒற்றையாட்சி அரசியலமைப்பை கொண்டு வருவதற்கான முனைப்பில் இருப்பதனை தெளிவாக உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆகவே மக்கள் கவனயீனமாக இருக்கக் கூடாது.

தற்போது கோட்டாபய அரசாங்கம் வந்த பின்னர் புதிய அரசியலமைப்பு தயாரிப்பதற்காக ஒரு நிபுணர் குழு நியமிக்கப்பட்டு அந்த நிபுணர் குழு தங்களுடைய தயாரிப்புகளை நிறைவு செய்திருக்கின்ற ஒரு இடத்திலே அது விரைவிலே ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டு நாடாளுமன்றத்திலே விவாதத்துக்காக சமர்ப்பிக்கப்பட இருக்கின்றது.

இத்தகைய சூழலிலே தமிழ் மக்கள் மிகத் தீவிரமாக ஒற்றை ஆட்சிக்கு எதிராக குரல் எழுப்ப வேண்டும். அவ்வாறு செய்ய வேண்டிய நேரத்திலே துரதிஷ்டவசமாக தமிழ் தலைவர்கள் என்று சொல்லுகின்றவர்கள், தமிழ் தேசிய வாதத்தை போர்வையாக போர்த்தி கொண்டிருக்கின்ற தலைவர்கள் இந்தியாவினுடைய பிராந்திய நலன்களை கருத்தில் கொண்டு இந்தியாவினுடைய தேவைக்காக தமிழ் மக்களுடைய நலன்களை ஒற்றை ஆட்சிக்குள் பலியிட்டு பதிமூன்றாம் திருத்த சட்டத்தை ஏற்று கொள்வதற்கு இணக்கம் தெரிவிக்கின்ற ஒரு கடிதம் ஒன்றை மோடிக்கு அனுப்பி இருக்கிறார்கள். அதாவது பதிமூன்றாம் திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும், என்று கோருகின்ற கடிதம். பதிமூன்றாம் திருத்த சட்டத்தை ஏற்று கொண்டு அவர்கள் வழங்கிய ஒரு கடிதமாகத்தான் அந்த கடிதம் அமைந்திருக்கின்றது.

நாங்கள் கடந்த தை மாதம் 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திலே ஒரு மாபெரும் பேரணி ஒன்றை நடாத்தியிருக்கின்றோம். பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு பதிமூன்றாம் திருத்த சட்டம் மாகாணசபை தீர்வு காண தொடக்க புள்ளியும் அல்ல. தீர்வும் அல்ல என்பதனையும் புதிய அரசியலமைப்பானது ஒரு அரசியல் அமைப்பாக வருகிற போது தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்தே வாக்களிக்க வேண்டும் என்பதனையும், மாறாக புதிய அரசியல் அமைப்பானது தமிழ் தேசம், இறைமை, உரிமையை, அங்கீகரிக்கின்ற ஒரு சமஷ்டி அடிப்படையிலான ஒரு அரசியல் அமைப்பாக கொண்டு வரப்பட வேண்டும். அதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதையும் இந்தியாவும் ஏனைய சர்வதேச நாடுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதனையும் நாங்கள் கடந்த பேரணியிலே வலியுறுத்தி இருக்கின்றோம்.

அதே போன்றதொரு பேரணியை நாங்கள் தொடர்ந்து அனைத்து மாவட்டங்களிலும் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு கொண்டிருக்கின்றோம். அந்த வகையிலே வவுனியா மாவட்டத்திலே பரப்புரைகளை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம். மக்கள் மட்டத்திலே பதின்மூன்றாவது திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஆறு கட்சிகளினுடைய தலைவர்களும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற குழு தலைவருமாக ஏழு பேர் கையொப்பமிட்டு இந்திய பிரதமருக்கு இந்த பதின்மூன்றாம் திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்தியதனுடைய அந்த சதி அதனுடைய உள்நோக்கங்களை நாங்கள் தெளிவுபடுத்துகின்ற வேலை திட்டங்களை நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

பதிமூன்றாவது திருத்த சட்டம் இருப்பதைத்தான் நடைமுறைப்படுத்த சொல்லி கேட்டிருக்கிறோம் என்ற ஏமாற்று வார்த்தைகளை மக்கள் நம்பி அமைதியாக இருந்துவிட வேண்டாம். என்பதனையும் பதின்மூன்றை நிராகரிக்க வேண்டும் ஒற்றையாட்சியை நிராகரிக்க வேண்டும் தமிழ் தேச இறைமை அங்கீகரிக்கப்பட்ட சமஸ்ரி வேண்டும் என்பதற்காக மக்கள் தொடர்ந்து குரல் எழுப்ப வேண்டும் என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தி கேட்டு கொள்வதோடு அந்த பயணத்திலே மக்கள் எங்களோடு கரம் கோர்த்து கொள்ள வேண்டும் என்பதையும் மக்களிடம் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன் என மேலும் தெரிவித்தார்.

# இலங்கையில் மனித உரிமை நிலவரம் மோசமடைவதை ஐ.நா. அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

மார்ச் 03, 2022

இலங்கை குறித்த ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை இலங்கையில் மனித உரிமை நிலவரம் அச்சம் தரும் விதத்தில்வீழ்ச்சியடைகின்றது என்பதை வெளிப்படுத்தியுள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவிப்பதற்கு மாறானதாக மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை காணப்படுகின்றது எனவும் மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளதாவது

பெப்ரவரி 25ம் திகதி வெளியான அறிக்கை இன மற்றும் சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிரான பாரபட்சங்களையும் பாதுகாப்பு படையினர் சிவில் சமூகத்தை சேர்ந்தவர்களை இலக்குவைத்தல் மற்றும் கடந்தகால துஸ்பிரயோகங்களிற்கான பொறுப்புக்கூறல் முடக்கப்பட்டுள்ளது என்பதையும் பதிவு செய்கின்றது.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மிச்சலே பச்செலெட் முன்வைத்துள்ள-இலங்கையில் மனித உரிமைமீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படுபவர்களிற்கு எதிரான தடைகள், இலங்கையில் இழைக்கப்பட்ட சர்வதேச குற்றங்களிற்காக சர்வதேசநீதியாணையின் கீழ் நீதியை வழங்குவதற்காக முயற்சித்தல், துன்புறுத்தலிற்கு உள்ளாக கூடிய இலங்கையர்களிற்கு புகலிடம் வழங்குதல், 2021ம் ஆண்டு ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவை தீர்மானத்தின் மூலம் வழங்கப்பட்ட ஐக்கிய




நாடுகள் பொறுப்புக்கூறும் திட்டத்திற்கு ஆதரவளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய பரிந்துரைகளை ஐக்கியநாடுகளின் உறுப்புநாடுகள் நிறைவேற்றவேண்டும்.

ஐநா இலங்கை பாதுகாப்பு படைகளுடனான தனது ஈடுபாட்டின் போது மனித உரிமைகளின் தராதரங்களை பேணவேண்டும்.

இலங்கை அரசாங்கம் அதன் மனித உரிமை செயற்பாடுகள் குறித்த சர்வதேச சமூகத்தின் ஆய்விற்கு தவறான பிழையாக வழிநடத்தும் பிரச்சார நடவடிக்கைகள் மூலம் பதிலளித்துள்ளது என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான பணிப்பாளர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்பட்டவர்களை பாதுகாப்பதுடன் சட்டத்தின் ஆட்சியை மீறும் அதேவேளை இலங்கைஅரசாங்கம் சிறுபான்மையினத்தவர்களையும் சிவில் சமூகத்தினரையும் தீவிரமாக இலக்குவைக்கின்றது என மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார்.

அழுத்தங்களை தொடர்ந்து பேணுவதற்காக மனித உரிமை துஸ்பிரயோகங்களால் பாதிக்கப்பட்டவர்களும் பலவீனமான நிலையில் உள்ள குழுக்களும் ஐக்கிய நாட்டினையும் இலங்கையின் சகாக்களையும் நம்பியுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வட்டுவாகலில் கடற்படையினருக்கு தமிழர் நிலங்களை விடுவிக்கும் எண்ணமில்லை மாறாக நிலங்களை பறிக்கவே தொடர்ந்தும் பிரயத்தனம்

## முன்னாள் வடமாகாணசபை உறுபபினர் துரைராசா ரவிகரன்

மார்ச் 05, 2022




முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பூர்வீக காணிகளை கோத்தாபாய கடற்படைமுகாம் கடற்படையினர் அபகரித்துள்ளனர்.

இந்நிலையில் இக் காணிகளை விடுவிக்குமாறுகோரி, காணிகளுக்குரிய தமிழ் மக்கள் பலதடவைகள் போராட்டங்களிலும் ஈடுபட்டிருந்தனர்.

ஆனாலும் அக்காணிகளை மக்களுக்கு விடுவித்து வழங்கும் நோக்கம் கடற்படைக்கோ, ஏனைய அரச திணைக்களங்களுக்கோ இல்லை எனவும், மாறாக தமிழ் மக்களின் காணிகளை எப்படியாவது அபகரித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடனேயே அவர்கள் செயற்படுவதாகவும் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் மதிப்புறு துரைராசா ரவிகரன் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளார்.

கோத்தாபாய கடற்படைமுகாமிற்காக தமது காணிகளை வழங்க சில காணி உரிமையாளர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக அண்மையில் முல்லைத்தீவு மாவட்டசெயலாளர் க.விமலநாதன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

மாவட்டசெயலரின் இக் கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில், முள்ளிவாய்க்கால் கிழக்கு, வட்டுவாகல் அக்கரை என அழைக்கப்படும் பகுதியிலே 617ஏக்கர் காணிகளை இலங்கை அரசாங்கமானது கடற்படைத்தளத்திற்காக அபகரித்துள்ளது.

குறிப்பாக கடந்த 2009ஆம் ஆண்டு வரையில் இந்தக் காணிகளை எமது தமிழ் மக்கள் பயன்படுத்திவந்திருந்தனர்.

அதனைத்தொடர்ந்து எமது மக்கள் தமது இடங்களிலிருந்து இடம்பெயர்ந்து, பின்னர் மீளக்குடியமர்த்தப்பட்டபோது மக்களுக்குரிய அந்தக் காணிகள் அபகரிக்கப்பட்டு, அங்கு கோத்தாபாய கடற்படைமுகாம் என்ற பெயரிலே பாரிய கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அத்தோடு இதிலே தனியார் காணிகளாக 379 ஏக்கர் 02 ரூட் 04 பேச் காணிகளையும், மக்களுக்கு ஏற்கனவே அரசதிணைக்களத்தால் வழங்கப்பட்டகாணிகளாக 291 ஏக்கர் 01 ரூட் 06 பேச் காணிகளும், மொத்தமாக 670 ஏக்கர் 03ரூட் 10பேச் காணியில் 617ஏக்கர் காணிகளை இந்தக் கடற்படைத்தளத்திற்காக அபகரித்து பாரிய கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்காணிகள் எமது மக்களினுடைய பூர்வீக வாழ்வாதார மற்றும், குடியிருப்புக் காணிகளாகும். இந்தக் காணிகளின் மூலம் எமது மக்கள் நிறைவான வருமானத்தையீட்டி தமது வாழ்க்கையை நடாத்திவந்திருந்தனர்.




இந்தக்காணிகளில் எமது மக்கள்பல்வேறு பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்துடன், இந்த காணிகளுக்கு அருகாமையில் மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தினைக் கொண்டுசெல்லக்கூடியவகையில் பல கரவலைப் பாடுகளும் காணப்படுகின்றன. அதேவேளை எமது மக்கள் நந்திக்கடல், வடக்காற்றில் மீன்பிடித்தொழிலின் ஊடாக நிறைவான வருமானத்தினைப் பெற்றுவந்தனர். ஆனால் தற்போது அங்கு மீன்பிடியில் ஈடுபட்டால், தாம் கடற்படையால் அச்சுறுத்தப்பட்டு விரட்டப்படுவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறாக எமது மக்களின் வருவாய்கள் அனைத்தையும் முடக்குகின்ற வகையிலே ஓர் கடற்படைத்தளம் இங்கே அமைக்கப்பட்டுள்ளது. (20 பக்கம் பார்க்க)









# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# கிளாலிப் படுகொலைகள் 02 ஜனவரி 1993 தொடக்கம் 29 யூலை 1993 வரை

யாழ் குடாநாட்டினையும் அதன் வெளி நிலப் பரப்பையும் ஊடறுத்துச் செல்லும் பிரதான தரைவழி மார்க்கம் ஆனையிறவு ஆகும். 1990 ஆம் ஆண்டு ஏப்பிரலுக்கு முன்னர் யாழ் குடாநாட்டிலிலுள்ள எட்டு இலட்சத்திற்கும் மேற் பட்ட மக்களின் போக்குவரத்து, விநியோகப் பாதையாக ஆனையிறவு ஊடான தரை வழிப் பாதையே அருந்தது. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீண்டும் ஆரம்பமான போரின் விளைவால் தரைவழிப் பாதை மூடப்பட்டது.

இதன் பின்னர் யாழ் மக்களின் போக்குவரத்து நகர்வுகள், உணவு விநியோக மார்க்கங்கள் என்பன ஆனையிறவுக்கு மேற்குப் புறமாக அமைந்துள்ள பூநகரி-கேரதீவு சங்குப்பிட் டியினூடாக அமைந்தது. இப்போக்குவரத்து மார்க்கம் கடல் நீரேரியூடாக இருந்தது. மக்கள் பெருஞ்சிரமங்களிற்கு மத்தியில் கேரதீவு சங்குப்பிட்டியினூடான கடல்நீரேரியைக் கடப்பதற்கு பயணப் படகு (Ferry) ஒன்றைப் பயன்படுத்தினார்கள். இதன்மூலம் விநி யோகப் பொருட்களைக் கொண்ட பாரவூர் திகள் பலமான வாகனங்கள் என்பன நகர்த் தப்பட்டன.

மக்கள் பயணஞ்செய்த இப்பாதையும் 1991 ஆம் ஆண்டில் பூநகரியை இராணுவத்தினர் கைப்பற்றியதனால் தடைப்பட்டது. பின்னர் யாழ் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துப் பாதையாக வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு ஊடான கடற்கரையோரப்பாதை இருந்தது. இதுவும் 1991 ஆம் ஆண்டு “ஒப்பறேசன் பலவேகயா-01” இராணுவ நடவடிக்கையின் மூலம் இராணுவதத்தினரால் கைபப்பற்றப்பட மக்களின் போக்குவரத்தும் தடைப்பட்து.

குடாநாட்டு மக்கள் வெற்றிலைக்கேணி, கட் டைக்காடு ஊடான கடற்கரையோரப் பாதைக் கும் ஆனையிறவுக்குமிடையில் அமைந்த கொம்படிப் பாதையினைப் பயன்படுத்தினர். இப்பாதை பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதை யாகக் காணப்பட்டது. அப்படியிருந்தும் இதனூ டாக மக்கள் பயணித்தார்கள். இயற்கையால் பிரயாணத்திற்கு ஒவ்வாத பாதையாக விளங் கிய கொம்படிப் பாதையினூடு கடுந்துன்பங் களுக்கு மத்தியில் மக்கள் பயணித்தார்கள்.

“பலவேகய 02” இராணுவ நடவடிக்கை மூலம் இராணுவம் ஆனையிறவு, வெற் றிலைக்கேணி, கட்டைக்காடு போன்றவற்றில் இராணுவத் தளங்களை தொடர் இராணுவ வேலிகளாக அமைத்ததனால் மக்கள் பயணஞ்செய்த இக் கொம்படிப் பாதையும் தடைப்பட்டது. இதன் பின்னர் யாழ் குடாநாட் டிற்கும் ஏனைய இடங்களுக்குமான வெளித் தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலை யில் எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற் கான உணவு, மருந்து உட்பட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கான பாதை இல்லாது தவித்த ஆயிரக்கணக்கான மக்கள், 1992ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கிளாலிக்கடல் நீரேரியி னூடான கடற் போக்குவரத்தினை மேற் கொண்டார்கள்.

யாழ் குடாநாட்டையும், அதன் வெளி நிலப்பரப் பையும் ஊடறுத்து ஏறத்தாழ முப்பது மைல் உள்நுழைந்து, பொன்னாலைதொட்டு தலை மன்னார் வரை நீண்டு, பரந்த கடலால் நீரூட்டப்பட்டு இருந்தது யாழ்ப்பாணக் கடல் நீரேரி. கிளாலிக்கரையிலிருந்து மறுகரையில் ஆலங்கேணிவரை ஏறக்குறைய இருபது கடல்மைல் தூரங்கொண்ட இக்கடற்பிரதேசம் பயணங்களிற்கு, விநியோக மார்க்கங்களிற்கு ஒவ்வாததாக, அமைந்தாலும் பெருஞ்சிரமங் களின் மத்தியில் ஏறக்குறைய நான்கு மணித் தியாலம் பயணித்தே மறுகரையை அடைய முடியும். பகல் நேரங்களிற் பயணிக்க முடியாத நிலையிருந்து. இரவு நேரங்களிலேயே




பயணிக்கக்கூடியதாக எட்டு குதிரை வலு கொண்ட இயந்திரப் படகுகள் மூலம் தமது பிரயாணங்களை மக்கள் மேற்கொண்டனர்.

1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்போக் குவரத்து மார்க்கத்தை தடைசெய்யும் நோக் கில் தாக்குதல்கள் கடல் நீரேரியின் இருபக் கமும் அமைத்திருந்த ஆனையிறவு இராணு வத்தளம் மற்றும் பூநகரி இராணுவத்தளம் ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. மேலும் வான்படையும் இத் தடைநோக்கிற்கு உதவியது.



1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டாம் திகதி கிளாலியிலிருந்து ஆலங்கேணிக்குச் சென்று கொண்டிருந்த இயந்திரப் படகுகளில் இயந் திரப் பழுது காரணமாக நடுக்கடலில் நின்ற நான்கு படகுகளிலிருந்த பயணிகள் மீது மிக அண்மித்து வந்த கடற்படையினர் கூரிய ஆயுதங்களாலும், துப்பாகிகளாலும் தாக் கியதால் படகிற் பயணித்த அரச உத்தியோகத் தர்கள், மாணவர்கள் உட்பட முபப்த்தைந்து பேர் வெட்டப்பட்டும், சுடப்பட்டும் உயிரிழந் தாாடகள். ஐம்பது பேர்வரையானவர்கள் காயங்களுடன் மறுநாள் காலை கரையினை அடைந்தார்கள்.

இச்சம்பவத்தில் உயிர் தப்பியவர்களில் ஒரு வரான கந்தையா செல்லத்துரை (வயது 68) என்பவர் கிளாலிக்கடலில் ஏற்பட்ட சம்பவங் கள் பற்றி ஊடகங்களுக்கு மறுநாள் அளித்த பேட்டியில் விரிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

1993 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டு, யூலை இருபத்தொண்பது எனப் பல்வேறுபட்ட காலப் பகுதியிலுமாக 1993ஆம் ஆண்டு டிசம்பர் வரைக்கும் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கிளாலிக் கடற்பரப்பில் பயணித்த போது, கடற்படையினரின் தாக்குதல்களினால் உயிரிழந்துள்ளதுடன், நூறிற்கும் மேற்பட் டவர்கள் அங்கவீனமானார்கள். மேலும் நூற் றிஐம்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந் தார்கள். இச்சம்பவங்களில் கிளிநொச்சி மாவட் டக் கல்வி அதிகாரி உட்பட யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட மாணவர்கள், ஆசிரியர்கள், வெளிநாட்டிலிருந்து தமது உறவுகளைப் பார்வையிட வந்தவர்கள் எனப் பலதரப்பட்ட பொதுமக்களும் பாதிக்கப்பட்டார்கள்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இ.இன்பராசா இ.மி.ச.ஊழியர் 47
02. இ.ஜெராட் கடற்றொழில் 26
03. இளையதம்பி மகேஸ்வரி வீட்டுப்பணி 51
04. இளையதம்பி சிவசீலன் பல்.கலை மாணவன் 25
05. இரத்தினம் சிறீறஞ்சன் - 29
06. இரத்தினசிங்கம் எருமின் ஜசேக் இன் பராசா இ.மி.ச.ஊழியர் 47
07. ந.இராசன் கமம் 28
08. ந.கிளி கமம் 26
09. ந.இராசலிங்கம் வியாபாரம் 32
10. ந.நாகம்மா - 60
11. ந.துரை கமம் 36
12. நா.பரிமளம் - 37
13. க.கமலதாசன் கடற்றொழில் 17
14. க.செல்லத்துரை - 46
15. க.சிவானந்தன் வியாபாரம் 35
16. க.ஏகாம்பரம் கமம் 45
17. குப்புசாமி செல்லமுத்து - 45
18. கா.சின்னத்தம்பி கமம் 60
19. கதிரமலை ஜெயந்தி மாணவி 25
20. த.கமலராசன் மாணவன் 10
21. த.பூபதி வீ.பணி 28
22. த.றாகினி மாணவி 17
23. தா்மராஜா பகீரதன் - -
24. தம்பிஜயா ராகினி இல்லை 18
25. தற்பரநாதன் முகுந்தன் மாணவன் 20
26. ம.இராசையா கடற்றொழில் 23
27. ம.யோசப்யூட் கடற்றொழில் 18
28. முத்தையா சந்திரலீலா - 35
29. மதுரநாயகம் அமிா்தநாயகி - 39
30. மி.ஜேசுதாசன் மாணவன் 19
31. மிக்கேல் ஜேசுதாசன் மாணவன் 19
32. முருகேசு சடராசா கடற்றொழில் 40
33. அ.அடைக்கலம் சாரதி 63
34. அப்புக்குட்டி பரமசிங்கம் சாரதி 38
35. யோசெப் யேசுராஜா யேசுநாயகம்தனிதாஸ் கடற்றொழில் 18
36. தெ.கனகாம்பாள் வீட்டுப்பணி 42
37. செ.ரூபன் ஞானசீலன் கடற்றொழில் 19
38. செ.பாக்கியராசா கடற்றொழில் 30
39. செ.அருள்தாஸ் கடற்றொழில் 21
40. செல்வராசா பாக்கியராசா - 27
41. செல்லத்துரை சாந்தலிங்கம் கடற்றொழில் 50
42. ஞானசூரியா் வின்சன்நிக்கிளஸ் - 22
43. ஞானப்பிரகாசம் ஞானபாலன் படகோட்டி 32
44. ஞானபாலன் படகோட்டி 33
45. ச.பாலசுப்பிரமணியம் சுயதொழில் 54
46. சந்திரன் அருணானந்தி கூலி 29
47. சி.கனகலிங்கம் கடற்றொழில் 45
48. சின்னவன் கதிரவேலு - 44
49. சிவலிங்கம் அன்னபூரணம் - 40
50. சிவலிங்கம் செல்லத்துரை நீதிமன்ற ஊழியர் 45
51. சண்முகம் சபாநாதன் - 65
52. ரவீந்திரன் இந்திரவதனா - 41
53. ஏரம்பமூர்த்தி அசோகன் - 36

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. க.கணேந்திரநாதன் முகாமையாளர் 63
02. கந்தையா செல்லத்துரை - 68
03. கநத் சாமி மதியரசன் வியாபாரம் 20
04. தவராசா தயாளினி மாணவி 05
05. செல்வராசா குணசிங்கம் - 40
06. செல்வரத்தினம் ஜங்கரன் - 27
07. சின்னையா சந்திரகுமாா் - 20
08. வி.,ன்பநாதன் கடற் றொழில் 37
09. விநாயகமூர்த்தி இன்பநாதன் - 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# சுன்னாகச் சந்தைப் படுகொலை – 28 மார்ச் 1984

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் தெற்குப் பகுதியில் யாழ் நகரிலிருந்து பத்து கி.மீ. தூரத்தில் கே.கே.எஸ். வீதியில் சுன்னாகச் சந்திக்கு அருகில் சுன்னாகச் சந்தை அமைந்துள்ளது. யாழ் குடாநாட்டின் மிகப் பெருமளவான விவசாயப் பொருட்களை விற்பனை செய்யும் இடமாக இச்சந்தை அமைந்துள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி உட்பட பல மாவட்டங்களிலிருந்தும் உற்பத்தி செய்யப்படும் விவசாயப் பொருட்கள் இச்சந்தையில் விற்கப்பட்டன.

28.03.1984 அன் று மதியம் சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியிலும், சந்தைப் பகுதிகளிலும் தமது அன்றாட வேலைகளில் பெருமளவான மக்கள் கூடியிருந்தனர். திடீரென பஸ்நிலையப் பகுதிக்கு ட்ரக் வண்டியிலும், ஜீப்பிலும் வந்திறங்கிய விமானப் படையினர் பெரும் பரபரப்புடன் காணப்பட்டதுடன், யாரும் எதிர்பாராத வகையில் திடீரெனச் சுன்னாகப் பஸ் நிலையப் பகுதிகளிலும், சந்தையிலும் குழுமியிருந்த மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

விமானப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி அன்றைய தினம் தமது நாளாந்த அலுவல்களில் ஈடுபட்ட எட்டுப் பொதுமக்கள் உயிரிழந்ததுடன், ஐம்பது பொதுமக்கள் வரை படுகாயமடைந்தனர். சந்தை தீயூட்டப்பட்டதில் பல கடைகள் எரிந்து அழிந்தன. இதன் பின்னர் அவ்விடத்தை விட்டு விலகி மல்லாகப் பகுதியூடாக கே.கே.எஸ் வீதி வழியாக காங்கேசன்துறை நோக்கிச் சென்ற இராணுவத ்தினர் மல்லாகம் பகுதியில் தங்களது கண்களுக்குத் தென்பட்ட எல்லாப் பொதுமக்களையும் தாக்கினார்கள். இதில் ஒருவர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தெல்லிப்பளைப் பகுதிக்குச் சென்ற விமானப் படையினர் யூனியன் கல்லூரியில் பரீட்சை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவர்கள், மற்றும் அங்கு நடமாடிய பொதுமக்கள் மீதும் தாக்குதலை நடத்தினார்கள், இதில் இருபத்தாறு மாணவர்கள் காயமடைந்ததுடன், அவ்வீதி வழியாகப் பயணம் செய்த இருபது பொதுமக்களும் காயமடைந்தார்கள். பின்னஉ விமானப் படையினர் பலாலி முகாமிற்கு திரும்பிச் சென்றார்கள்.

இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. கந்தையா பாலசுபப்பிரமணியம், 52, பாதுகாவலர்
02. நாகலிங்கம் சிவசுப்பிரமணியம், 54, சந்தை மேற்பார்வையாளர்
03. தம்பிமுத்து சுந்தரலிங்கம், 38, தொழிலாளி
04. வல்லிபுரம் சின்னத்துரை, 68 வியாபாரம்
05. வைரவி தியாகராசா, 42. நெசவு
06. பசுபதி தவமணி, 43, வீட்டுப்பணி
07. நடராசா யோகராசா, 27, வியாபாரம்

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# நாச்சிக்குடா படுகொலை — 16 மார்ச் 1996

வரலாற்றுப் புகழ்பெற்ற ஒரு தொன்மையான பிரதேசமாக கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரிப் பிரதேசம் விளங்குகின்றது. பண்டைய தமிழ் மன்னர்களின் தொன்மையான ஆட்சி மையமாகவும், வர்த்தக மையமாகவும் இது இருந்து வந்துள்ளது. அத்தோடு ஆரம்பகாலத்தில் கிளிநொசச்சி மாவட்டத்தில் அதிகூடிய மக்கள் தொகையினைக் கொண்ட பிரதேசசெயலர் பிரிவாகவும் பூநகரி இருந்தது. பூநகரிப் பிரதேசத்தில் பல மீனவர் குடியிருப்புக்களை உள்ளடக்கிய கிராமம் நாச்சிக்குடாக் கிராமம் ஆகும்.

16.03.1996 அன்று அதிகாலை 5:20 மணியளவில் வான்படையின் பைற்றரென அழைக்கப்படும் எம்.ஐ. இருபத்துநான்கு ரக உலங்குவானூர்தி நாச்சிக்குடா அன்னை வேளாங்கன்னிப் பகுதியிலுள்ள மீனவர் குடியிருப்புக்கள் மீது தாக்குதலை நடாத்தியது. அவ்வேளை வீடுகளில் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த பெண்கள், குழந்தைகள் மற்றும் கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்களென மொத்தமாக இருபது பேர் இத்தாக்குதலில் உயிரிழந்ததுடன், அறுபத்திரண்டு பேர் பலத்த காயங்களுக்கும் உள்ளானார்கள்.

நூற்றுக்கணக்கான மீனவக் குடிசைகள் எரிந்து சாம்பலாகின. சம்பவத்திற் காயப்பட்ட அனைவரும் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர், இறந்தவர்களை அவர்களது உறவினர்கள் அடக்கம் செய்தனர். இத்தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதி மீனவர்கள் இடம்பெயர்ந்து வேறிடங்களில் வாழ்கின்றனர். இச்சம்பவம் தொடர்பாக நாச்ச்சிக்குடாவைச் சேர்ந்த்த ஜேசுதாசன் ஆன்மேரி தெரிவிக்கையில்,

“என்னுடைய சொந்த இடம் நவாந்துறை யாழ்ப்பாணம். தற்போது கடற்கரை வீதி நாச்சிக்குடாவில் வசித்து வருகின்றேன். 1996ம் ஆண்டு மூன்றாம் மாதம் பதினாறாம் திகதி விடியற்காலை நாங்கள் நித்திரையாக இருக்கும் போது திடீரெனக் கடற்கரையோரமாக வந்த எம்.ஐ-இருபத்துநான்கு ரக உலங்குவானூர்தி ஒன்று தாக்குதல் நடத்தியது. இதன்போது என்னசெய்வதென்று தெரியாத நிலையில் நாங்களனைவரும் சிதறி ஓடினோம். அதன்போது எங்களுடைய அண்ணையின் மகனுக்கும் மைத்துனரின் மகனுக்கும் காயம்பட்டது. எங்களுடைய உறவினர்கள் கை, காலை இழந்தனர். இச் சம்பவத்தில் ஐம்பதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இருபது பேர் சம்பவ இடத்திலும் உயிரிழந்தனர். காயமடைந்தவர்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப், பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கடல்வழியாக யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். விமானம் திரும்பவும் வருமோ என்ற பதற்றத்தின் மத்தியில் இறந்தவர்களை உறவினர்கள் அடக்கம் செய்தார்கள். அதன் பின்னர் நாங்கள் இடம்பெயர்ந்து போய் காடுகளில் வாழ்ந்தோம். கிட்டத்தட்ட ஒரு கிழமைக்கு மேல் தொழிலுக்கு கடலுக்குப் போகமுடியவில்லை. காட்டுக்குள் இருந்த நாங்கள் பின்னர் படிப்படியாக கடற்கரையில் குடியேறத் தொடங்கினோம்.

திடீரென ஒரு நாள் மாலை 5மணியளவில் இரணைமாதா நகர்ப் பக்கமாக இருந்து வந்த வானூர்தி எங்கள் குடியிருப்புக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் செய்வதறியாத நாங்கள் திரும்ப காடுகளுக்குள் ஓடினோம். நாம் தற்போதும் பயந்த நிலையிற் தான் கரையோரத்தில் இருக்கின்றோம்.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சூசைப்பிள்ளை அல்பேட் கடற்றொழில் 50
02. யூலியஸ் டெவின் குழந்தை 1
03. கனகசிங்கம் தர்சினி மாணவி 10
04. கந்தையா இரமேஸ்வரன் மாணவன் 18
05. கந்தசாமி செந்தில்குமார் மாணவன் 16
06. குவாட்டஸ்கேஸ் சின்ராசன் - -
07. தவரி வேலாஜி - 68
08. மரியநாயகம் திரேசம்மா - -
09. மரியதாஸ் எட்வின் கடற்றொழில் 30
10. மகேந்திரன் யாழினி மாணவி 18
11. அன்ரன் டயஸ்கா - -
12. அன்ரன் ஜெகதீபா மாணவி 12
13. ஆசைப்பிள்ளை அல்போன்ஸ் கடற்றொழில் 50
14. அருளானந்தம் சேவியர் விசிற்றம்மா வீட்டுப்பணி 55
15. அலபே பான்ஸ் அமலோறப் வராணி வீட்டுபப்ணி 22
16. பொன்னம்பலம் செல்வராசா கடற்றொழில் 68
17. மேரி அமலினி மாணவி 18
18. சேவியர் கொன்சலா மாணவி 14
19. விக்ரர் லூசியா - 24

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. சூசைப்பிரபா குழந்தை 02
02. இமிறோன் - -
03. இராசம்மா - 30
04. இருதயசீலன் - 34
05. யூனிற்று மாணவன் 16
06. யூத் - 90
07. நாகராணி - 62
08. நாச்சியம்மா - 40
09. கனகம்மா - 65
10. கந்தசாமி - 52
11. புஸ்பாயினி மாணவி 08
12. பரிமளம் - 44
13. பத்மசிறி - 25
14. பிரியா குழந்தை 04
15. பவானி - 20
16. பற்றிக் - 62
17. தர்மராசா - 22
18. திரேசம்மா - 65
19. மகிந்தன் மாணவன் 07
20. மாசில்தா - 24
21. மதிஜெனி - 20
22. மதியோகராசா - 25
23. மனோகரன் மாணவன் 15
24. மனோதா - 16
25. டன் - 23
26. அன்னைமேரி - 37
27. அன்ரன் - 34
28. அன்ரனிக்குயின்ரஸ் யூனிதா மாணவி 16
29. ஆனந்தி - 23
30. அனிஸ்ரா மாணவி 06
31. அனுசியா மரியனிட்டா - 20
32. அமுதராசு மாணவன் 10
33. அருள்சீலன் தர்மஜோதி - 22
34. அருள்சீலன் அருள்மேரி குழந்தை 04
35. அருளம் மேரி - -
36. அரவிந்தன் மாணவன் 07
37. கொன்ஸ்பேனல் - 32
38. கொன்சியா குழந்தை 4
39. பொன்னம்பலம் - 43
40. தேவராசா - 45
41. மேரி சிங்கராசா - 30
42. மேரிகொன்சலா - 18
43. மேரிறீட் மரியா - 28
44. செபமாலை - 65
45. சேவியர் - 30
46. செல்வநாயகி - 31
47. செல்வநிதி - -
48. செல்வராணி - 25
49. சுப்பையா - 76
50. சுதர்சன் - 21
51. சித்திரா - 34
52. சசிரேகா - -
53. சரண்யா - -
54. விமலதாஸ் - 26
55. வளர்மதி - 30
56. இராஜ்குமார் மாணவன் 14
57. ரசுபாலன் - 18
58. எமில்டா குழந்தை 04
59. எல்டா மாணவன் 14

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# பழைய வட்டக்கச்சி குண்டுவீச்சு — 26 மார்ச் 1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பழைய வட்டக்கச்சி என்னும் கிராமம் கிளிநொச்சி மாவட்டத்தின் புராதன காலக் குடியேற்றக் கிராமங்களில் முதன்மையான ஒரு கிராமமாகக் காணப்படுகிறது. இக்கிராமம் இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் பெற்றுக் கொள்ளும் நெற்செய்கைப் பிரதேசமாகும். இதனால் இங்கு சிறுபோக நெற்செய்கையும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

பழைய வட்டக்கச்சிக் கிராமம் தற்போது பெரியகுளமென அழைக்கப்படுகிறது. இக்கிராமம் தனக்கென சில சிறப்பான இயல்புகளைக் கொண்டுள்ளது. வளமான மண்ணும் சிறந்த நீர் வளமும் இப்பிரதேசத்தில் இருப்பதனால் இப்பிரதேச மக்கள் செல்வச் செழிப்புடனும் கல்வி வளத்துடனும் வாழ்கின்றார்கள்.

இராணுவதத்தினர் 1996ஆம் ஆண்டு காலப்குதியில் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றும் நோக்கில் “சத்ஜெய” இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர். விமானத் தாக்குதல் எறிகணைத் தாக்குதல் என்பவற்றை நடத்தியபடி முன்னேறி, மக்களின் வாழ்விடங்களையும், சொத்துக்களையும் அழித்தனர். இதன்போது பல பொதுமக்களும் உயிரிழந்தார்கள்.

1998.03.26ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.00மணிக்கு கிளிநொச்சி வான் பரப்பினுள் பெரும் இரைச்சலுடன் நுழைந்த விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றி வட்டமிட்டன. முதலில் கண்டாவளை - வெளிக்கண்டற் பகுதியில் ஒரு குண்டினையும் அதனைத் தொடர்ந்து பழைய வட்டக்கச்சிப் பிரதேசத்திலுள்ள உடையார் என்றழைக்கப்படும் அருணாசலம் வேலாயுதம் என்பவரது வீட்டிலும், வீட்டிற்கு அண்மித்த பிரதேசத்திலும் ஐந்து குண்டுகளையும் வீசியது. இதன்போது வீட்டு முற்றத்தில் பனங்கிழங்கைச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்த இருவரும் வீட்டினுள்ளிருந்த டையாரின் மகளும் மற்றும் காணியில் வேலை செய்துகொண்டிருந்த இருவரும் முன் வீட்டில் ஒருவருமாக மொத்தம் ஆறு பேர் உயிரிழந்தார்கள். ஐந்து பேர் காயங்களுக்குள்ளானார்கள். காயமடைந்தவஉகள் தருமபுரம் வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். இச்சம்பவத்தின் போது அருணாசலம் வேலாயுதத்தின் வீடு முற்றாக அழிந்ததுடன், அவருடைய இரண்டு உழவு இயந்திரங்கள், களஞ்சிய அறைகள் உட்பட அனைத்து உடமைகளும் அழிந்தன. அருணாசலம் வேலாயுதம் தெரிவிக்கையில், “எமது பகுதியில் நடந்த வான் தாக்குதலால் எனது மகளான மங்கயற்கரசி படுகொலை செய்யப்பட்டதுடன், எனது வீடு முற்றாக சேதமடைந்தது. இதில் ஐந்து பேர் உடல்சிதறிப் பலியானார்கள். எனது நெல்லு மூட்டைகள் யாவும் எரிந்துவிட்டன.”

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. சண்முகம் தனபாலு தொழிலாளி 55
02. தியாகராசா பாலு தொழிலாளி 50
03. இராமநாதன் செல்லம்மா வீட்டுப்பணி 56
04. வேலாயுதம் மங்கயற்கரசி மாணவி 20
05. முத்தையா வசந்தகுமாரி வீட்டுப்பணி 26
06. கிஸ்ணசாமி வள்ளியம்மை வீட்டுப்பணி 65

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. வீரய்யா செல்வராசா - 40
02. கதிர்காமு பேபி - -
03. இராமநாதன் தேவகி - 23
04. பஞ்சலிங்கம் பாமினி அரசஊழியர் 32
05. வேலாயுதம் சிவகுமார் அரசஊழியர் 26

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# வட்டுவாகல் கடற்படையினருக்கு தமிழர் நிலங்களை விடவிக்கும் எண்ணமில்லை மாறாக நிலங்களை பறிக்கவே தொடர்ந்தும் பிரயத்தனம்

## முன்னாள் வடமாகாணசபை உறுபபினர் துரைராசா ரவிகரன்




(17ஆம் பக்கம் தொடர்ச்சி) இந்தக்காணிகளை விடுவிக்குமாறு கோரி, காணிகளுக் குரிய எமது மக்கள் பலதடவைகள் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக ஒருமுறை அந்த மக்களின் அறிவித்தலுக்கு ஏற்ப, கடந்த 2018.02.22 அன்று நாமும் சென்று போராட்டத்தில் ஈடுபட்டோம். அதற்காக போலீசாரால் கைதுசெய்யப்பட்டுமிருந்தோம். தற்போதும் அதுதொடர்பிலான வழக்குவிசாரணைகள் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு நாம் எமது மக்களின் காணிகளை விடுவிக்குமாறு கோரி, ஜனநாயகவழி போராட்டங்களில் ஈடுபடும்போது, எம்மை அடக்கி ஒடுக்கும்விதமாகவே இவர்களின் செயற்பாடுகள் இருக்கின்றன.

இவ்வாறிருக்க அண்மையில் இக்காணிகளை கடற்படைக்குத் தருமாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்டன. அதற்கமைய அக்காணிகளை கடற்படைக்கு வழங்கினால், தமக்கு காணிகளுக்கு பெறுமதியான பணமாவது கிடைக் கும் என்ற எண்ணத்துடன், அந்தக்காணிகளோடு முழு ஈடுபாட்டுடன் செயற்படாத சிலர், தமது காணிகளை கடற் படைக்கு வழங்கும் நோக்கில் மாவட்டசெயலகம் நோக்கி சென்றதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.





ஆனால் இந்தக் காணிகளால் தொடர்சியாக பல்வேறுவழிகளிலும் பயன்பெற்ற பெரும்பாலான மக் களுக்கு தமது காணிகளை எவருக்கும் விட்டுக்கொடுக்கும் எண்ணம் இல்லை. தமது பூர்வீக காணிகளே தமக்கு வேண்டும் என்ற நோக்குடன் தமது காணிகளின் விடுவிப் பினை அவர்கள் தொடர்ந்தும் எதிர்பார்த்துக் காத்திருக் கின்றனர்.

மேலும் கடற்படைக்கோ, இந்த விடயத்தோடுதொடர்புடைய ஏனைய அரச திணைக்களங்களுக்கோ இக்காணிகளை மக்களுக்கு விடுவித்து வழங்கும் நோக்கம் இல்லை. மாறாக மக்களின் இந்தக்காணிகளை எப்படியாவது அபகரித்துவிடவேண்டும் என்ற நோக்கத்துடனேயே அவர்கள் செயற்பட்டுவருகின்றனர்.

எமது மக்களுடைய பூர்வீகக் காணிகள் அவர்களிடமே கையளிக்கப்படவேண்டும். அதற்கு அனைத்துத் தரப்புக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் - என்றார்.



# என் கண்களே சாட்சி
# காயங்கள்

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)

சிவானந்தன் கிளிநொச்சியில் வர்த்தக வங்கியில் உதவி முகாமையாரளராகப் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவருடைய திருமதி. அன்சனா மத்திய கல்லூாயில் ஆசிரியை. வைகறைப் பொழுதில் இருவரும் நித்திரை விட்டெழுந்து காலைக் கடன்களை முடித்து சமையலறைக்குப் போய் ஒருவருக்கொருவர் உதவி காலை உணவையும் பொதி கட்டி எடுத்துச் செல்ல வேண்டிய பகல் உணவையும் சமைத்து வைத்துக் கொண்டு பணியிடங்களுக்குப் புறப்படுவார்கள்.



திருமணமாகி இரண்டாண்டுகளாகியும் குழந்தைப் பேறு கிட்டாத கவலை மெல்லத் தலைதூக்கிய போதும் பல பேருடன் இணைந்து கடமையில் ஈடுபடும் சிவாவுக்கும் சில நூறு குழந்தைகளுடன் பழகும் வாய்ப்பைப் பெற்ற அஞ்சனாவுக்கும் அதன் தாக்கம் எப்போதாவது தலைகாட்டும் ஒன்றாக குறைந்திருந்தது.

அந்நாளில் வன்னி மண்ணில் ஒரு புரட்சி நிகழ்ந்தது. வடபகுதி மக்களின் இடம்பெயர்வு ஒரு புதிய எழுச்சியைத் தோற்றுவித்தது. வீதிகள் துப்பரவாக்கப்பட்டன. அங்கெல்லாம் கொட்டில்கள் குடிசைகள் எழுந்தன. பாடசாலைகளையும் கோவில் மண்டபங்களையும் புலம்பெயர் மக்கள் அக்கிரமித்தனர். பாதுகாப்பாய் சுதந்திரமாய் வாழ்ந்திருக்க கிடைத மண் என்று மனம் கொண்டனர். இரவு பகலாய் தற்காலிக வதிவிடங்கள் கடும் பணியில் ஈடுபட்டனர். மணல் தரைகளில் படுத்து நித்திரை கொண்டனர். மரநிழலில் படுத்து இழைப்பாறினர். குளங்களில் வாய்க்கால் நீரில் குளித்தனர். காலங்காலமாய் வாழ்ந்திருந்த ஊரைவிட்டு உறவுகளைப் பிரிந்து உடைமைகளை விட்டு அமைதி நாடி வந்தவர்கள். இழப்புக்களைப் பற்றி கவலைப் படாதவர்களாய் புது வாழ்வு பெற்றவர்கள் போல் காணப்பட்டனர். வன்னி நாடெங்கும் எங்கள் மக்கள், எங்கள் சொந்தங்கள், எங்கள் பிள்ளைகள் என்ற பெருமை.

வன்னி நிலம் எங்கள் மண். அங்கே போய் குடியமருங்கள் என்ற அன்புக் குரல் எழுந்த காலம். அந்தக் காட்டுக்குள்ள போய் இருக்கவா? மலேரியா வந்து சாகவா? என்ற பதில் பரவிய காலம் போய் இன்று காடும் மேடும் தமிழ் மணம் கமழும் விந்தை என்ன! என் சிவானந்தன் சக பணியாளர்களுக்குச் சொல்லிப் பெருமிதம் கொண்டார். கூடவே அவர் மனதில் உதித்தது ஒரு தேடல், அவருடைய சொந்த ஊரான சந்திரபுத்திலிருந்தும் தெரிந்தவர் உறவினர் யாரும் வந்திருப்பார்களோ இடம்பெயர்ந்து?

வேலை நேரம் முடிய வீடு திரும்புகையிலும் காலையில் வங்கிக்கு வரும் போதும் தெருவில் நடமாடும் மக்களிடையே தன் ஊரவர் யாரும் உள்ளனரா என உற்றுப்பார்ப்பார். நின்று சிலருடன் கதைத்து தன் ஊரவர் யாரும் வந்திருக்கிறார்களா? தெரியுமா? எனக் கேட்டு தன் பெயரையும் சொல்லிவிட்டுப் போவார்.

நாலைந்து நாட்கள் கடந்தன. அன்று அவர் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த நேரம் ஒரு குரல் அழைத்தது. சிவானந்தன் திரும்பிப் பார்த்தார்.

“ஐயா உங்கள் ஊரவர் ஒருத்தர் இருக்கிறார் திருவையாற்றில் பெயர் சிதம்பரப்பிள்ளை, அவற்ற மனைவிக்கு பெயர் மங்களம் தெரியுமா? சற்றே சிந்தித்த சிவானந்தன் கேட்டார். “அவர் சிவலையா? வயது 60 இருக்குமா?

“சிவலைதான். அம்பதுக்கு மேல் இருக்கும்”

“சரி இடத்தை விபரமாய் சொல்லுங்கோ.”

“திருவையாறு முருகன் கோயில் அருகே ஒரு வாசிகசாலை இருக்கு. அங்கேயும் சிலர் இருக்கினம். அவையைக் கேட்டால் காட்டுவார்கள்.”

“உங்கட பெயர்?”

“கந்தசாமி. நான் கல்வயல்”

“நன்றி, நன்றி. . .”

பிரியந்தி, பிரமிளா, தமயந்தி, கயல்வழி, கபிலன், கம்பன், கரிகாலன், மங்களம் சொல்லச் சொல்ல சிவானந்தன் கேட்டுக் கொண்டிருந்தார். அதே நேரம் வேப்பமரத்தின் கீழ் வாடிய வதனங்களுடன் கதைத்துக் கொண்டிருந்த நான்கு செல்விகளின் மேலும் மண்ணில் விழுந்து விளையாடிக் கொண்டிருந்த மூன்று சிறுவர்கள் மீதும் அவர் கண்கள் படிந்திருந்தன. அந் நேரம் சிதம்பரப்பிள்ளை வந்து கொண்டிருந்தார். அவர் கையில் இருந்த அரிசி, மரக்கறி நிறைந்த துணிப்பையை பிரியந்தி ஓடிப்போய் பெற்றுக் கொண்டாள்.

ஆர் முற்றத்தில் இருக்கிறது?

“தெரியா, அம்மா தான் கதைத்தவ”

“வாரும் சிதம்பரம், என்ன யோசிக்கிறீர். நான் வேலுப்பிள்ளை மாஸடரற்ர மகன் சிவானந்தன்”

“அட அதிபர் வேலுப்பிள்ளை. . .”

“சரி வாரும் இரும். . .”

“அவர் எங்கட மூத்தவள் பிரியந்தியை படிப்பிச்சவர். என்ன வந்தது இந்தப்பக்கம்? நாங்கள் இருக்கிறது எப்படித் தெரிஞ்சது?”

“மங்களம் தேத்தண்ணி கொண்டு வா”.

அவள் முகத்தில் சிறு தயக்கம்.

“இஞ்சவாங்கொ, பால் மா வாங்கி வாங்கோ” என்றாள் மென்குரலில்.

அது சிவானந்தனின் காதிலும் விழுந்ததோ, பிளேன் ரீ போதும் அம்மா என்றார்.

“சிதம்பரம் வாரும் இரும் ஒரு முக்கியமான விசயம், மங்களத்தையும் கூப்பிடும்.”

இருவரையும் பார்த்து சிவானந்தன் சொல்கிறார்.

நான் வந்தது எங்கள் ஊரவர் என்ற வகையில் உங்களைப் பாத்திட்டுப் போகத்தான். ஆனால் உங்கட செல்வங்களப் பார்த்த பிறகு. உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேணும் என்ற மனம் வந்தது. அந்த உதவி எனக்கும் பயன் படும் உதவிதான். எங்கட வீட்டில் நானும் அவவும் தான். இரண்டு பேரும் வேலைக்குப் போறதால வீட்டைப் பூட்டிக்கொண்டு போறதும் பின்னேரம் வந்து இராச்சாப்பாட்டை செய்து சாப்பிடுறதும் தான் எங்கட வாழ்க்கை. . .



அதனால் நீங்கள் ஒரு பிள்ளையை எங்களுக்கு உதவியாய் இருக்க விட்டீர்களெண்டால் சம்பளம் தருவம். உங்கள் பிள்ளையை எங்கள் பிள்ளைபோல் கவனிப்போம். மாதம் ஒரு முறை வந்த போகலாம். கொஞ்சதூரம் நடந்து போக மெயின் றோட்டில் பஸ் ஓடுது.

சிதம்பரப்பிள்ளையும் மனைவியும் போய் மர நிழலில் இருந்து பிள்ளைகளுடன் கதைத்தனர். மூத்தவள் பிரியந்தி போக விரும்பவில்லை. அவளை அனுப்ப மங்களத்துக்குப் விருப்பமில்லை. இரண்டாவது மகள் பிரமிளா பச்சைக் கொடி காட்டினாள்.

சிதம்பரம் பிள்ளையுடன் நீரும் வந்தால் நல்லது. எங்கள் வீட்டையும் இடத்தையும் பாத்திட்டு வரலாமே.

♦ ♦ ♦

அஞ்சனாவின் கண்கள் அகலத் திறந்தன. யார் இவர்கள்? என்று கேட்டது போல்.

“மனைவியைப் புரிந்து கொண்டவராய், இந்தப் பிள்ளை உமக்கு உதவியாய் இருக்கும் என்றார் சிவானந்தன்”

“பிள்ளைக்கு என்ன பெயர்?”

“பிரமிளா” சிதம்பரப்பிள்ளை சொன்னார்.

“வாருங்கோ, இருங்கோ”

பிஸ்கட்டும் தேனீரும் தரப்பட்டது.

அம்மாவையும் கூட்டிக்கொண்டு வரும் ஞாயிற்றுக்கிழமை வந்து போங்கோ சொன்னாள் அஞ்சனா.

♦ ♦ ♦

அதே தெருவில் மூன்றாவது வீட்டில் குடியிருப்பவர், அமைதி நிலவிய அந்தக் காலத்தில் வந்து காணி எடுத்து விவசாயத்தில் ஈடுபட்ட அச்சுவேலி சுப்பிரமணியம் அவருடைய இளைய மகன் காண்டீபன், ஞாயிறு நாள்களில் வந்திருந்து சிவானந்தனுடன் கதைத்துக் கொண்டிருப்பான்.

அஞ்சனாவின் சொற்படி, சில நேரம் காணடீபனுக்கு தேனீர் தருவாள் பிரமிளா. தேனீர்க் கோப்பை கைமாயும் போது இருவரின் கண்களும் நேர்படும். அதன் மேலும் இருவரும் பேசிப்பழக வாய்ப்பிருக்கவில்லை.

சமையலறைக்கு நேரே, நடு அறையில் இருக்கும் ரி.வி. பார்க்க வசதியாக, ஒரு யன்னால் இருந்தது. வழமை போல் தொடர்நாடகம் பார்த்துக் கொண்டு காய், பிஞ்சு வெட்டிய பிரமியாவின் கைவிரலை கத்தி வெட்டி இரத்தம் வழிந்தது. உதவிக்கு யாருமில்லை. ஒரு பழைய துணி தேடி எடுத்து விரலைச் சுற்றிக்கொண்டு மறுகையால் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே வந்தாள். காண்டீப்ன் இருப்பது மூன்றாவது வீடு என்று அவன் கேட்டிருக்கிறாள்.

“அண்ணே காண்டீபன் அண்ணே”

“என்ன அதிசயம்? பிரமிளாவா?” “என்ன கையில் இரத்தம்?”

“கத்தி வெட்டிட்டுது அண்ணை ஆசுபத்திரிக்கு. . .”

“சரி, போகலாம், சைக்கிள்ள பார்ல இருப்பீர

# என் கண்களே சாட்சி
# காயங்கள்

எஸ். பி. கிருஷ்ணன் (வேரற்கேணியன்)



தானே?" மௌனம்.

சைக்கிளை எடுத்து வந்து முற்றத்தில் நிறுத்தி விட்டுப்போய் உடை மாற்றிக் கொண்டு வந்தான். தெருவில் ஏறிய பின் படலையை சாத்தி விட்டு பாரில் பிரமிளாவை ஏற்றிக்கொண்டான். ஆஸ்பத்திரிக்கு விரைந்தது சைக்கிள்.

ஒலிபெருக்கியில் ஒரு சோக கீதம் கேட்டது. பின்னால், திரும்பி பார்த்தான். மாவீரனின் இறுதி ஊர்வலம் ஒன்று வந்து கொண்டிருந்தது. துயிலும் இல்லம் நோக்கி. சைக்கிளை விட்டிறங்கி இருவரும் கால் செருப்பை கழற்றிவிட்டு ஒதுங்கி நின்றனர். வணக்கம் செலுத்தி மாவீரர் பேழை கடந்து போன பின் கைக்கிளில் ஏறினர்.

மருந்து கட்டும் அறைக்கு வெளியே அமர்ந்திருந்த நோயாளர் வரிசையில் கடைசியாக அமர்ந்து கொண்டாள் மிரமிளா.

போராளிகளின் வாகனம் ஒன்று வாசலில் நின்றது. அதிலிருந்து இறங்கிய பெண் போராளிகள் காயப்பட்ட போராளிகள் நால்வரை டொக்டரின் அறைக்கு கூட்டிப் போனார்கள். டொக்ரர் விரைந்து செயல்பட்டு அவர்களை வார்ட்டில் இனுமதிக்க அனுப்பின பிறகு பிற நோயாளிகளைப் பார்வையிட்டார்.

பிரமிளாவின் முறை வந்தது. காயத்தையும் உடல் நிலையையும் சோதித்த டொக்ரர், காய்ச்சலும் இருக்கு, வாட்ல இருக்கவேணும் எனச் சொல்லி அனுமதிப்பத்திரத்தை எழுதிக் கொடுத்தார். வெளியே வந்த பிரமிளா காண்டீபனைத் தேடினாள். கண்டுகொண்டாள். வாட்டுக்கு அவளை அழைத்துப் போன தாதியுடன் கூடவே சென்ற காண்டீபன் பிரமிளாவின் கட்டில் எண் பார்த்துக்கொண்டு வெளியே ஓடினான். இடியப்பமும் தேனீரும், உள்ளக் உணவகத்தில் வாங்கி கொண்டு வந்து பிரமி சாப்பிடும் என்று சொன்னான்.

ஐயாவுக்கு சொல்லிவிட்டு வருகின்றேன் என்றான். வெளியே சென்றான். வங்கியை நோக்கி விரைந்தான். தகவல் அறிந்த சிவானந்தன் அதிர்ச்சியுற்றவராய் "தம்பி, தம்பி உம்முடைய உதவிக்கு நன்றி, நன்றி. நான் மதிய உணவு வேளை வந்து பார்க்கிறேன்" என்றார் அமைதியாக.

பிரமிளா படுத்திருந்த கட்டிலுக்கு அப்பால் காயப்பட்ட பெண் போராளிகள் படுத்திருந்தார்கள். அவர்களைச் சூழ டொக்ரரும் தாதிகளும் நின்றனர். காயங்களுக்கு மருந்து கட்டுவதும் ஊசி மருந்து ஏற்றுவதுமாக துரிதமாக அவர்கள் செயற்படுவதைப் பார்த்தபடி படுத்திருந்தாள்.

தன்னுடைய சிறுகாயம் பெரிதாகப்படவில்லை அவளுக்கு. அவசர சிகிச்சைகள் முடித்து டொக்ரரும் தாதிகளும்அகன்று சென்ற பின் பிரமிளா எழுந்து போய் உதவிக்கு நின்ற போராளியுடன் கதைத்தாள்.

எங்கே சண்டை நடந்தது? எனக் கேட்டாள் அந்தப் போராளி இவளின் கேள்விக்கு பதில் சொல்லாமல், நீர் எங்கே இருக்கிறது? அகதியா? கையில் என்ன காயம்? எனக் கேள்விகளை அடுக்கினாள். இடம்பெயர்ந்து வந்ததையும் ஒரு வீட்டில் சமையல் வேலைக்கு நிற்பதையும் சொன்னாள்.

என்ன பெயர்?

பிரமிளா, ஓ நல்ல பெயர் எங்களோட வரவிருப்பமா?

மௌனம்! விருப்பத்தை வெளிப்படுத்தியது.

திரும்பிப் போய் தனது கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

தாதி ஒருத்தி வந்து காய்ச்சல் பார்க்கும் கருவியை அவளது வாயில் வைத்து எடுத்தாள்.

இரண்டு குளிசைகளை அவளது வாயில் இட்டு கூடவே டிடுத்துவந்த நீரைப் பருக்கினாள்.

பகல் 12:30.

சிவானந்தனும் அஞ்சனாவும் வந்து பிரமிளாவைப் பார்த்து பரிவுடன் பேசி, அங்கே நின்ற தாதியிடம் பிரமிளாவின் சுக நிலைமை கேட்டறிந்து நல்ல வேளை கவலைப்படும்படியாக இல்லை. எனக் கண்டு கையில் இருந்த சாப்பாட்டுப் பொதியை அவிழ்த்து பிரமிளாவை உண்ணச் செய்து நிற்க பின்னால் வந்து நின்றான் காண்டீபன். அவனைப் பார்த்து தம்பி... தம்பி... நீர் செய்த உதவிக்கு நன்றி.

சொன்ன அஞ்சனா ரீச்சர் "தினைத்துணை நன்று செய்யினும் பனைத்துனையாகக் கொள்வார் பயன் தெரிவார்" என்ற வள்ளுவர் குறளைக் கூற அதன் அர்த்தம் புரியாதவனாய் நின்றவனுக்கு வள்ளுவரின் மற்றொரு குறளான...

"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது". அதாவது நீர் செய்த உதவிக்கு கைமாறாக அந்த வானத்தையும் இந்தப் பூமியையும் கொடுத்தாலும் ஈடாகாது என்றார் வள்ளுவர். என்று விளக்கிய ஆஞ்சனாவுக்கு நன்றி சொன்னான் காண்டீபன்.

பிற்பகல் ஐந்து மணியளவில் சாப்பாடு கொண்டு வந்த காண்டீபன் கட்டிலில் பிரமிளாவைக் காணாது அடுத்த கட்டில் நோயாளியைக் கேட்டான். இதில் இருந்த பிரமிளா எங்கே? மருந்து கட்டப் பொயிருப்பாளா?

தெரியாது. கானேல்லை எண்டு நேஸ்மார் தேடினவை. எல்லா வாட்டிலும் பாத்தவை. எங்கையும் இல்லையாம்.

மற்றொரு பெண் போராளி சொன்னாள்.

அவள் எழும்பிப் போய் அங்காலை படுத்திருக்கிற போராளிப்பிள்ளையளோட கதைத்துக் கொண்டிருந்தாள். பிறகு நான் கவனிக்கேல்லை.

தாயால் வளர்ந்தேன்
தமிழால் அறிவு பெற்றேன்
நாயே நேற்றுன்னை
நடுத்தெருவில் சந்தித்தேன்

# தமிழீழம் பற்றிய மாவீரர் அன்புமணி தனது கனவை எம் தலைவர் அவர்களுக்கு பகிர்ந்து கொள்கின்றான்



அன்பின் அண்ணா,
எங்கள் உயிர்மீது வெடிகுண்டு ஏந்தி வெடிக்கும் போது, நாங்கள் உங்களை நம்பியே வெடிக்கிறோம். நீங்கள் தமிழீழ தேசம் ஒன்றைக் கட்டியெழுப்பி அதில் எங்கள் மக்கள் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழ்வார்கள் என்று நம்பியே வெடிக் கின்றோம்.

அன்பின் அண்ணா, எங்கள் மக்கள் மிகவும் பாவப்பட்டவர்கள். அவர்கள் துண்பங்களை சுமந்து களைத்துப் போனவர்கள். அவர்களுக்கான சுதந்திரம் என்ன விலை கொடுத்தேனும் பெறப்பட வேண்டும். அதை நீங்கள் பெற்றுக் கொடுப்பீர்கள் என்று முற்றும்முழுதான நம்பிக்கையுடன் வெடிக்கிறேன். அமையப் போகும் தமிழீழம் முற்றும்முழுதாக தன்னிறைவான பொருளாதாரத்தைக் கொண்டதாக இருக்க வேண்டுமெனில் அதற்குரிய அடிக்கற்கள் இப்போதே நாட்டப்பட வேண்டும்.

**மேலும் அவன் சொல்கிறான்.**

"எமது நாட்டில் ஒரு பிச்சைக்காரரும் இருக்கக்கூடாது. அது வயது வந்தவர்களானாலும் சரி, சிறுவர்களானாலும் சரி. அப்படியானவர்களை எமது அரசாங்கம் தனது பொறுப்பில் எடுத்து வளர்க்க வேண்டும். அதேபோல் தமிழீழத்தில் அனைத்துப் பிரஜைகளும் கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டும். அதையும் எமது அரசே கவனம் எடுக்க வேண்டும். அதேபோல் உலகத்தில் உள்ள அனைத்து விளையாட் டுக்களும் எம் தேசத்தில் பயிற்றப்பட்டு, அனைத்து விளையாட்டுக்களிலும் எமது வீரர்கள் முன்னிலையானவர்களாக இருக்க வேண்டும்.

ஏழைப் பணக்காரர்கள் என்ற வேறுபாடு, சாதி சமய ஏற்றத் தாழ்வுகள் அற்ற ஒரு சமூகம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். பெண்களுக்கு எதிரான சீதனக் கொடுமைகள் முற்றும்முழுதாக இல்லாது ஒழிக்க வேண்டும். அதில் எமது அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.



என அவனது கடிதம் தொடர்ந்து செல்கிறது. இது அன்புமணி என்ற ஒரு மாவீரனின் கடிதம்தான்."


JATHU RENOVATION
Free!
ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


21
ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE
C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai
Century 21
INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4


WEXFORD
WELLNESS CARE INC.
We treat all car accident injuries!
* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic
We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)
Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location
Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)


NAM THAYAKAM
நம் தாயகம்
"உணவினில் தாய்மண்வாசமும் உணர்வோடு தாய்மண் நேசமுமாய்"
நம் தாயகம் பிராண்ட் தயாரிப்புக்கள் 416-558-2111
நம் தாயகம்
வாங்குவீர்... வாழ்வு தருவீர்!
பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும் போரில் அவயங்களை இழந்தோருக்கான தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்
முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும் தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள், உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைப் கொள்வனவு செய்து தாயக மக்களின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி
முள்ளிவாய்க்காலில் இருந்து...
"உணர்வினில் தாய் மண் வாசமும் உணர்வோடு தாய் மண் நேசமுமாய்"
Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு இலங்கை உடனடியாக தடைவிதிக்கவேண்டும்

## ஐக்கியநாடுகளின் நிபுணர்கள் வேண்டுகோள்

மார்ச் 03, 2022



பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு இலங்கை உடனடியாக தடைவிதிக்கவேண்டும் என ஐக்கியநாடுகளின் நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

சர்வதேச சட்டங்களிற்கு ஏற்ற விதத்தில் இலங்கைஅரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை கணிசமான அளவிற்கு மறு ஆய்வுக்கு உட்படுத்தவேண்டும், திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.





தன்னிச்சையாக தடுத்துவைக்கப்படக்கூடியவர்களின் உரிமைகளிற்கும் சுதந்திரத்திற்கும் பெரும் ஆபத்துள்ளதுஎன தெரிவித்துள்ள ஐநாநிபுணர்கள், குறிப்பாக இன மத சிறுபான்மையினத்தவர்கள் இந்த ஆபத்தினை எதிர்கொள்கின்றனர் என தெரிவித்துள்ளனர்.

மேலும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவது அரசியல் ரீதியாக கருத்துவேறுபாட்டை வெளியிடுவதற்கு பாதிப்பை ஏற்படுத்தி அதனைகுறைக்கலாம் என தெரிவித்துள்ள ஐநா நிபுணர்கள் உரியமுறையில் இந்த சட்டம் பயன்படுத்தப்படும் என்பதற்கான எந்த உத்தரவாதமும் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான பொருளாதார உதவி தொடர்பான பேச்சுவார்த்தைகளின் ஒரு பகுதியாக இலங்கை அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தத்திற்கு உட்படுத்துவதற்கு இணங்கியுள்ளது.



பயங்கரவாத தடைச்சட்டத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்கான சட்டமூலம் பத்தாம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

நிபுணர்கள் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் தங்களினதும், ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் மற்றும் ஏனைய பொறிமுறைகள் முன்வைத்துள்ள பரிந்துரைகளிற்கு குறைவானதாக காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

தன்னிச்சையாக தடுத்துவைத்தலை நீடிப்பது, சித்திரவதை மூலம் பொய்யான வாக்குமூலங்களை பெற்றுக்கொள்வது, இலங்கையில் சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் மாற்றுக் கருத்துடையோரை இலக்கு வைப்பது போன்றவற்றிற்கு பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களில் விசாரணைக்கு முன்னர் தடுத்துவைத்திருக்கும் காலத்தை குறைப்பது, தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை பார்வையிடுவதற்கான நீதிபதிகளின் அதிகாரத்தை அதிகரிப்பது, விசாரணைகளை துரிதப்படுத்துவது போன்ற விடயங்களை வரவேற்றுள்ள நிபுணர்கள், எனினும் அரசாங்கம் முன்வைத்துள்ள திருத்தங்கள் இலங்கையின் மனித உரிமை கடப்பாடுகளிற்கு ஏற்ப அமையவில்லை என அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

தற்போதைய முன்மொழிவுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மிகமோசமான ஏற்பாடுகளை நீக்காமல் அப்படியே விட்டுவைத்திருக்கின்றன என தெரிவித்துள்ள ஐநா நிபுணர்கள், அவை மனித உரிமை மீறல்களிற்கு வழிவகுத்துள்ளன குறிப்பாக தன்னிச்சையான தடுப்புக்காவல், பலவந்தமாக காணாமல் போகச்செய்தல், சித்திரவதை போன்றவற்றிற்கு வழிவகுத்துள்ளன என ஐநா நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை அதன் சீர்திருத்தத்திற்கான அர்ப்பணிப்பு குறித்து கேள்வியை எழுப்பியுள்ளது- பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெறுகின்ற மனித உரிமை மீறல்களிற்கு தீர்வைகாண்பதற்கான உடனடி கடப்பாடு இலங்கைக்கு உள்ளது எனவும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்திற்கான சமீபத்தைய கடிதத்திலும், சுதந்திரமாக ஒன்று கூடுதல் குறித்த விசேட அறிக்கையாளரின் இலங்கை விஜயத்தின் பின்னரான அறிக்கையிலும் முக்கியமான திருத்தங்களை அடையாளம் கண்டனர்.

சர்வதேச விதிமுறைகளிற்கு ஏற்ப பயங்கரவாத தடைச்சட்டத்திற்கான வரைவிலக்கணத்தினை உருவாக்கவேண்டும்.

துல்லியமான மற்றும் சட்ட உறுதியை உறுதிப்படுத்தவும். குறிப்பாக சட்டமூலம் மத சுதந்திரம் நம்பிக்கை சுதந்திரம், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம், ஒன்று கூடுவதற்கான சுதந்திரம் ஆகியவற்றை இந்த சுதந்திரம் பாதிக்கும் போது.

சுதந்திரத்தை தன்னிச்சையாக பறிப்பதை தடுப்பதற்கான ஏற்பாடுகளை - நடவடிக்கைகளை உருவாக்குதல்.

சித்திரவதைகள் மற்றும் பலவந்தமாக காணாமல் போகச் செய்தல் ஆகியவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகளை அமுல்படுத்துதல், ஐரோப்பிய ஒன்றியத்துடன் வர்த்தக உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசாங்கம் சர்வதேச மனித உரிமை தராதரங்களை பின்பற்றும் பயங்கரவாததடைச்சட்டத்தை உருவாக்குமாறும் நிபுணர்கள் இலங்கையை கேட்டுக்கொண்டுள்ளனர்.

அரசாங்கம் நல்ல நடவடிக்கைகக்கான ஒரு சமிக்ஞையாக பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு உடனடி தடைவிதிக்கவேண்டும், இந்த முறை கேடான சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டவர்களை விடுதலை செய்யவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தவேண்டும் எனவும் ஐநா நிபுணர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.







# மாவீரர் திசைகாட்டும் விசைகள்

வீதி எங்கும் வீரச்சாவுகள்
அடையாளமாய் துயிலும் இல்லங்கள்
மண் சிவந்து கிடக்கிறது
மனிதர்கள் விழித்து
விடி தழல் சுமக்கின்றார்
சத்தியமாய் இது
எங்கள் பூமியின் சரிதம்
விதியே எனக்கிடந்தோர்
விதி செய்யப் புறப்பட்ட
வீரம் மிகு சரிதம்
சாவை அழைத்து
சாகாவரம் பெற்று
உடலை அழித்தும்
சுதந்திர சுடர் ஏந்தும்
பிரபாகரத் தலைமுறையின் கதை

நூற்றாண்டின் ஆரம்பம்
சிங்களத் தீ
தீவெங்கும் வேர் விட
தமிழர் தீவாகி
சேவகம் செய்தனர்

மௌனம்
உரிமையின் மரணத்திற்கு
விறகுகளாயின
பாத்திருக்க அனைத்தும்
பிகராங்கமாய் நடந்தது
வெள்ளையன் சென்றதும்

சிங்களம் அமர்ந்ததும்
தமிழர்கள் கதறிட
சிங்ளம் வென்றுதம்
பகிரங்கமாய் நடந்தது

மௌனம்
உரிமை மரணத்திற்கு
எண்ணெய் வார்த்தது

கலவரம் தலைப்புச் செய்தி
படுகொலைகள் பதிவாயின
குடி அழிப்பின் குண்டு வீச்சாய்
குடியேற்றங்கள்
கிபீரும் புக்காராவும்
இன்றுதான் வந்தவை
டட்லியும் பண்டாவும்
அன்றே செய்தனர்
போராடப் புறப்பட்ட
படித்தவர்

ஜெயவாத்தனா
பாதைகாட்டினார்
புறப்பட்டவர் எல்லாம்
புறமுதுகு காட்டினர்

-நாதன்-
சூரியப் புதல்வர்கள் 1997

சட்டத்தரணிகள்
சிங்களச் சட்டத்தில்
சரத்து தேடினர்

போர் என்றால் என்ன?
மௌனமாய் வாழ்ந்து
மௌனமாய் மரித்து
அடுத்த பிறப்பையும்
மௌனமாய்க் கழித்திட
முடிவெடுத்த நமக்கு
போர் எதற்கு?

ஏற்றுக் கொள்வோம்
சிங்களம்
அரச மொழி
பௌத்தம்
அரியணை மதம்

நமக்கேன் வீண்வம்பு

சிங்ளத்தில் நாம்
ஏடு தெடக்கி
சேலையின் மடிப்பை
மாற்றிக் கட்டி
புத்தரைத் தொழுது
யானைக்கும் கைக்கும்
புள்ளடி இட்டு
ஈரப்பலாக்கையுடன்
வாழ்ந்திடலாம்

நமக்கேன் வீண்வம்பு

ஆயினும்
இயற்கையின் நியதி
பிரளயம் செய்தது
பிரபாகரன் பண்பாடு
வேர் விட்டது

உரிமைக்கு உயிர் கொடுத்து
மௌனமான சாவுக்கு
விடை கொடுத்திட
தலைமுறை முடிவெடுத்தது

விடுதலைப் போரே
முற்றத்துச் செடிக்கு
நீர் பாய்ச்சும்
காற்றை எமக்குத் தரும்

தலைமுறை முடிவெடுத்தது
தர்ம யுத்தம் முளைவிட்டது

தலைவர் வழி பற்றி
தலைமுறை நடந்தது
அண்ணர் கரம்பற்றி
தலைமுறை எழுந்தது

1982 நவம்பர் 27
சங்கர் என்னும்
வித்தை விதைத்தோம்
விருட்சமாய் அது
விண்ணைத் தொட்டது

பாதை எங்கினும்
ஓரடி வைப்பினும்
சாவுகள் அங்கு
சாட்சியமழிக்கின்றன

ஒன்றாய் நூறாய்
ஆயிரமாய் வீழ்ந்தாலும்
வித்துடல் எமக்கு
உயிர்ப்பைத் தந்தது
வீர மிகு தேசம் என்ற
இறுமாப்பைத் தந்தது

காவோலை விழுந்தாலும்
ஒப்பாரி வைக்கும்
அம்மா
குருந்தோலை வழிக்கண்டு
நெஞ்சு நிமிர்ந்தாள்.
தாத்தாவின் சாவிற்கு
ரகசியமாய் அழுத
அப்பா
பேரனின் சாவிற்கு
காரணம் சொல்கிறார்

சாவு இங்கே
சரித்திரம் படைக்குது

மாவீரர் எமக்கு
திசை தருகின்றனர்
அறிந்து கொள்ளுங்கள்
நாம் மாவீரர் பரம்பரை

அருணாச்சலமும் பொன்னம்பலமும்
நேற்றுவரை வாழ்ந்த கனவானும்
எமக்கு அன்னியர்கள்
சங்கரும் மாலதியும்
இன்று வீழ்ந்த எனது தோழனும்
எமது அடையாளங்கள்

விடுதலையே
வாழ்வின் உயிர்ப்பு
விடுதலையே
மூச்சின் வியாபக எல்லை
விடுதலையே
இருப்பின் ஆத்மார்த்தம்

மாவீரர் கருவறைகள்
காட்டும் திசை இது
யார் வந்து தடுத்தாலம்
எது வந்து வீழ்ந்தாலும்
எம் தேசம்
எம் உரிமை
எமக்கே சொந்தம்.

# மயில்வாகனம் நிமலராஜன்
# இருபத்திரண்டு ஆண்டுகள் கழித்தாவது நியாயம் கிடைக்குமா? இலங்கைத் தமிழ் பத்திரிகையாளர் கொலை வழக்கில் எழும் கேள்வி

மார்ச் 06, 2022



பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்தார் நிமலராஜன்

**"எங்கள் வீடு உயர் பாதுகாப்பு வளையத்தில் இருந்தது. அப்போது ஊரடங்கு சட்டமும் அமலில் இருந்தது. அங்கு நிறைய இராணுவ முகாம்களும் இருந்தன. எனவே அரசாங்கத்தின் துணை இல்லாமல் யாராலும் அதை செய்திருக்க முடியாது." என்கிறார் 22 வருடங்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் சகோதரி.**

### யாழ்ப்பாணத்திலிருந்து வந்த செய்தி குரல்

இலங்கை உள்நாட்டு போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் 22 வருடங்களுக்கு முன்பு அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

உள்நாட்டு போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளை அது. பல ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

யாழ்ப்பாணத்தில் கிட்டதட்ட எல்லாரையும் அவருக்கு தெரியும், அவருக்கும் அனைவரையும் தெரியும் என்கிறது அவர் இறப்பு குறித்து வெளியான பிபிசி செய்தி (http://news.bbc.co.uk/2/hi/south_asia/981672.stm)

கடந்த 2000 ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி நடந்த நிமலராஜனின் கொலை தொடர்பாக லண்டன் மெட்ரோ பாலிடன் காவல்துறையின் போர்க் குற்றப்பிரிவு கடந்த பிப்ரவரி 24ஆம் தேதி, சந்தேக நபர் ஒருவரை கைது செய்தது. எனவே இந்த கொலை தொடர்பாக தற்போது ஊடகங்களில் மீண்டும் செய்திகள் வெளியாகின. ஆனால் இந்த கைது, கொலை வழக்கை முடிவுக்கு கொண்டு வருமா? குற்றவாளிகளை அடையாளம் காட்டுமா? என்பதுதான் நிமலராஜின் குடும்பத்தினர் மற்றும் சக பத்திரிகையாளர்களின் கேள்வி.

### அச்சுறுத்தல் மிகுந்த பணி

நிமலராஜனுக்கு அச்சுறுத்தல்கள் வருவது ஒரு தொடர் கதையாக இருந்தது. ஆனால் அதையும் தாண்டி ஊடகவியலில் அவருக்கு இருந்த ஆர்வத்தால் அவர் தனது பணியை தொடர்ந்து செய்து வந்தார் என்கிறார் நிமலராஜனின் சகோதரி நிமலராணி.

"நிமலராஜனின் பணி என்பது கடுமையான பணியாக தான் இருந்தது. அந்த சமயத்தில் மின்சார இணைப்பும் இல்லை. அவர் சைக்கிளில் சென்றுதான் செய்திகளை சேகரித்து வந்தார். அந்த சமயத்தில் அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன," என்கிறார் அவர்.

### இருளில் நடந்த கொலை

நிமலராஜன் அன்று பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட்டனர். அங்கிருந்த அவரின் தந்தையையும் கத்தியால் தாக்கினர். பின் அவர்கள் கிரனேட் குண்டுகளை வீசினர் அதில் நிமலராஜனின் தாயார் மற்றும் அவரின் சகோதரியின் மகனும் பலத்த காயமடைந்தனர்.

அப்போது இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். அதில் தற்போது இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்று வரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

செயற்பாட்டாளர்கள், ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியை சேர்ந்தவர்கள்தான் இந்த கொலையில் ஈடுபட்டதாக தெரிவிக்கின்றனர். ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் தற்போது இலங்கையின் மீன்வளத்துறை அமைச்சராக இருக்கும் டக்ளஸ் தேவானந்தா.

இதுகுறித்து இலங்கையிலிருந்து பிபிசி தமிழுக்காக ரஞ்சன் அருண்பிரசாத்திடம் பேசிய அவர் ஊடகவியலாளர் நிமலராஜனின் கொலையில் தனக்கும், தனது கட்சிக்கும் தொடர்பு இல்லை என தெரிவித்தார்.

ஒரு பொய்யை தொடர்ச்சியாக தெரிவிக்கும் போது, அது உண்மையாகும் என்ற அடிப்படையிலேயே தன்மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது கட்சியின் மீதான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து



மறுத்து வருகிறார் டக்ளஸ் தேவானந்தா

### 'போதுமான நடவடிக்கைகள் இல்லை'

இந்த கொலை வழக்கில் இலங்கை அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று செயற்பாட்டாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றனர்.

"உண்மையில் இந்த கொலையுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது சாதரணமாக தமிழ் மக்கள் அனைவருக்குமே தெரியும். இன்று வரை குற்றவாளிகள் தண்டிக்கப்படாமல், சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் இயல்பாக நடமாடுகின்றனர். அவர்கள் பதவிகளிலும் இருக்கிறார்கள். உண்மையாக காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாக இலங்கை அரசின் நீதித்துறை மூலமாக குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் யாருமே நம்பவில்லை." என்கிறார் ஊடக செயற்பாட்டாளரும் நிமலராஜனின் நண்பருமான இரத்தினம் தயாபரன்.

இலங்கை அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதே நிமலராஜனின் குடும்பத்தினரின் கூற்றாகவும் உள்ளது.

"இத்தனை வருடங்களில் இலங்கை அரசாங்கம் நினைத்திருந்தால் நிச்சயம் நடவடிக்கை எடுத்திருக்க முடியும். ஒரு அரசாங்கம் நினைத்தால் நிச்சயம் அதை செய்திருக்க முடியும். ஆனால் அரசாங்கத்தின் உதவியுடன் நடந்தமையால் அதற்கான முன்னெடுப்புகளை அவர்கள் எடுக்கவில்லை. யார் கொலை செய்தார்கள் என்று அரசாங்கத்திற்கு தெரியும்." என்கிறார் நிமலராஜனின் மற்றொரு சகோதரி செல்வராணி.

அதுமட்டுமல்லாமல் "எங்களின் வீடு உயர் பாதுகாப்பு வளையம். அப்போது ஊரடங்கு சட்டமும் அமலில் இருந்தது. அங்கு நிறைய இராணுவ முகாம்களும் இருந்தன. எனவே அரசாங்கத்தின் துணை இல்லாமல் யாராலும் அதை செய்திருக்க முடியாது. அந்த நேரத்தில் நடந்தவற்றை பார்க்கும்போது சிறுபிள்ளையை கேட்டால் கூட சொல்லும் அரசாங்கத்தின் துணை இல்லாமல் இவ்வாறு செய்திருக்க முடியாது என்று" என்கின்றார் அவர்.

நிமலராஜன்



### காணாமல் ஆக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்

நிமலராஜன் மட்டுமல்ல இலங்கையில் போர் சமயத்தில் கொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்கிறார் தயாபரன்.

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் "கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்" என்ற அமைப்பு இலங்கையில் 1992ஆம் ஆண்டு காலத்திலிருந்து 2022 ஆம் ஆண்டு காலம் வரை 25 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது. ஆனால் இரத்தினம் தயாபரன் இந்த எண்ணிக்கை 39க்கும் அதிகம் என்கிறார்.

"நிமலராஜனின் மரணத்திற்கு பிறகு வட கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 39க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை." என்கிறார் இரத்தினம் தயாபரன்.

### 'நம்பிக்கை தரும் கைது'

# மயில்வாகனம் நிமலராஜன்
# இருபத்திரண்டு ஆண்டுகள் கழித்தாவது நியாயம் கிடைக்குமா? இலங்கைத் தமிழ் பத்திரிகையாளர் கொலை வழக்கில் எழும் கேள்வி



இந்நிலையில் பிரிட்டன் காவல்துறையின் போர் குற்றங்கள் பிரிவு, பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலை வழக்கில் 48 வயது மிக்க சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக கடந்த வியாழனன்று தெரிவித்திருந்தது.
https://news.met.police.uk/news/man-arrested-by-mets-war-crimes-team-as-part-of-sri-lankan-murder-investgation-442965

மத்திய இங்கிலாந்தில் உள்ள நார்தாம்ப்டன்ஷயரில் கைது செய்யப்பட்ட அந்த நபர் விசாரணைக்கு பிறகு விடுவிக்கப் பட்டார் என்றும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அதேபோல நிமலராஜன் கொலை தொடர்பான விசாரணையில் யாருக்கேனும் தகவல் ஏதும் தெரிந்தால் குறிப்பாக இலங்கையிலிருந்து வந்தவர்களுக்கு ஏதேனும் தகவல் தெரிந்தால் தங்களிடம் தெரிவிக்குமாறும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச விசாரணையில் மட்டுமே இனி நீதி கிடைக்கும்



என நம்புகின்றனர் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள்

இந்த கைது ஒரு நம்பிக்கையை கொடுப்பதாக தெரிவிக்கிறார் நிமலராஜனின் மூத்த மகள். நிமலராஜன் கொலை செய்யப் பட்டபோது அவரின் மூத்த மக ளுக்கு ஐந்து வயது.

"சிறுவயது என்பதால் எனக்கு சரியாக நினைவு இல்லை. அப்போது ஏன் அப்பா விட்டு போனார்கள் என்ற கோபம் இருந்தது. எனக்கு எதுவும் புரியவில்லை. குடும்பத்தினர் சொன்ன கதைகள் மூலமாகதான் அப்பா குறித்து நான் கேட்டிருக்கிறேன். குறிப்பிட்ட வயது வந்தவுடன் அப்பாவின் பணி குறித்து புரிந்தவுடன் எனக்கு மிகப்பெரிய மரியாதை வந்தது," என்கிறார் அவர்

அது மட்டுமல்லாமல் இதுமாதிரியாக கொல்லப்பட்ட பிற பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கும் நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் இந்த கைது கொடுப்பதாக கூறுகிறார் அவர்.

"எனது வாழ்க்கையின் முக்கிய தருணங்களை எனது தந்தையுடன் கொண்டாடும் அந்த மகிழ்ச்சி களவாடப்பட்டது. வன்முறை, அநியாயம் மற்றும் கொடூரம் ஒரு பெற்றோருக்கு தங்களது மகனை, சகோதரிகளுக்கு தங்களது அண்ணனை, பிள்ளைகளுக்கு தங்களது அப்பாவை இல்லாமல் ஆக்கிவிட்டது. இருப்பினும் நீதி நிச்சயம் கிடைக்கும் என நாங்கள் நம்புகிறோம்" என்கிறார் அவர்.

இத்தனை காலங்களாக இலங்கையில் எந்த ஒரு தீர்க்கமான விசாரணையும் முன்னெடுப்படாத நிலையில் இனி உலக நாடுகளில் நடைபெறும் விசாரணையே இந்த கொலையில் நீதி பெற்று தரும் என கருதுகின்றனர் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள்.

"சர்வதேச மன்றத்தில் இனி விசாரணைகள் நடந்தால் மட்டுமே ஒரு நீதி கிடைக்கும். அதிலும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஊடக அமைப்புகளின் கண்காணிப்பின் கீழ் விசாரணை நடைபெற்றால் மட்டுமே கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கிடைக்கும் என்று யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் நம்புகின்றனர்," என்கிறார் தயாபரன்.

இதுகுறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டபோது, காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர்கள், கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குறித்து, இலங்கை அரசாங்கம் தொடர்ந்து விசாரணை நடத்துவதாக குறிப்பிட்டார்.

நன்றி: விஷ்ணுப்ரியா ராஜசேகர் - பிபிசி தமிழ்



# சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipuilanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa — 94 76 789 7573

**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa — 94 77 481 6576

**Vipulanantha Children Home**

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302

**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483

**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427

**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095

**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721

**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851

**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049

**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685

**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494

**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# ஐநாவிக்கு கடிதம் எழுதும் கட்சிகள்!

மார்ச் 07, 2022



A. Adaikalanathan, C.V. Wigneswaran, Dharmalingam Siththadthan, K. Premchandran, Mavai Senathraja, N. Srikantha



கடந்த ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி கூட்டாகக் கடிதம் அனுப்பிய கட்சிகள் இம்முறை ஐநாவுக்கு தனித் தனியாகவும் கூட்டாகவும் கடிதங்களை அனுப்பியுள்ளன. கடந்த ஆண்டு அனுப்பிய கடிதத்தின் விளைவாக என்ன நடந்தது? அக்கூட்டுக் கடிதத்தில் பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகவேண்டும் என்று மூன்று கட்சிகளும் கேட்டிருந்தன. கடந்த ஓராண்டு காலப் பகுதிக்குள் அவ்வாறு பொறுப்புக்கூறலை ஜெனிவாவுக்கு வெளியே கொண்டு போகும் விடயத்தில் உண்மையாக உழைத்த கட்சி எது? இதுவிடயத்தில் தமிழ்க் கட்சிகள் முதலில் தமது மக்களுக்கு பொறுப்புக்கூறுமா?

உக்ரைன் விவகாரம் மீண்டும் ஒரு தடவை ஐநாவின் கையாலாகாத்தனத்தை நிரூபித்துக் கொண்டிருக்கும் ஒரு காலகட்டத்தில், ஏற்கனவே ஐநாவின் கையாலாகாத்தனத்தால் கைவிடப்பட்ட ஈழத்தமிழர்கள், ஐநாவை நோக்கி சலிப்பின்றி கடிதங்களை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். இம்முறை கூட்டமைப்பு தனியாக ஒரு கடிதம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு கடிதம், ஐந்து கட்சிகளின் கூட்டு தனியாக ஒரு கடிதம், என்று மூன்று முக்கிய கடிதங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன.

இதில் சம்பந்தர் கையெழுத்திட்ட கடிதம் எனைய கட்சிகள் எல்லாவற்றுக்கும் முதலில் அனுப்பப்பட்டுவிட்டது. அக்கடிதம் ஊடகங்களிலும் வெளிவந்திருந்தது. ஆனால் கடந்த திங்கட்கிழமை 5 கட்சிகள் இணைந்து ஐநாவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கின்றன. அக்கடிதத்தில் ஒரு பொது வாக்கெடுப்புக்கான கோரிக்கையும் காணப்படுகிறது. கூட்டமைப்பு அனுப்பிய கடிதத்தில் அவ்வாறான கோரிக்கைகள் எவையும் கிடையாது.

ஆனால் மேற்கண்ட கடிதத்தை அனுப்பிய ஐந்து கட்சிகளில் இரண்டு இப்பொழுதும் கூட்டமைப்புக்குள் அங்கம் வகிக்கின்றன. கடந்த செப்டம்பர் மாத ஐநா கூட்டத்தொடரை முன்னிட்டும் அவை இவ்வாறு ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்பின. அக்கடிதத்தை வரையும் முயற்சிகளை தொடக்கத்தில் ஆதரித்த மாவை சேனாதிராஜா கடைசி வேளையில் அதில் கையெழுத்து வைப்பதை தவிர்த்து விட்டார். அதேசமயம் ஏனைய கட்சிகள் தமிழரசுக் கட்சிக்காக காத்துக் கொண்டிராமல் ஒரு கடிதத்தை கூட்டாக அனுப்பி வைத்தன. அது அப்பொழுது ஒரு சர்ச்சையாக எழுந்தது. கூட்டமைப்பு இரண்டாக உடையப் போகிறதா என்ற கேள்விகளையும் எழுப்பியது. எனினும் சம்பந்தர் நிலைமைகளை ஒருவாறு சமாளித்து கூட்டமைப்பை பாதுகாத்தார்.

இப்பொழுது மறுபடியும் அதே பிரச்சினை. முன்பு நடந்தது போலவே இந்த முறையும் மாவை சேனாதிராஜா ஐந்து கட்சிகளின் முயற்சிகளில் ஒத்துழைத்ததாகத் தெரிய வருகிறது. ஆனால். அவர் கடிதத்தில் கையெழுத்திடவில்லை. அதேசமயம் சம்பந்தர் கூட்டமைப்பின் சார்பாக ஒரு கடிதத்தை தயாரித்தபோது அதில் பங்காளி கட்சிகளின் பங்களிப்பை கேட்டதாக ஒரு செய்தி வெளிவந்தது. முதல் வரைபை வரைந்த பின் அதை பங்காளிக் கட்சித் தலைவர்களிடம் அனுப்பி அவர்களுடைய கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு இறுதிவரைபை தயாரித்து ஐநாவுக்கும் அனுப்புவது என்று சம்பந்தர் சிந்தித்ததாக கூறப்படுகிறது. ஆனால் பங்காளிக் கட்சிகளைக் கேட்டால் அவர்கள் வேறுவிதமாக கூறுகிறார்கள். சம்பந்தர் கூட்டமைப்பின் தலைவர் எழுதுவதாக ஒரு கடிதத்தை எழுதி விட்டு அதைத் தமது பார்வைக்கு அனுப்பியதாகவும், அது பங்காளிக் கட்சித் தலைவர்கள் கையொப்பம் வைப்பதற்கான ஒரு கடிதம் அல்லவென்றும் கூறுகிறார்கள்.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஒரே கூட்டுக்குள் இருந்து இருவேறு கடிதங்கள் அனுப்பப்படுவது என்பது கூட்டமைப்பு ஒரு இறுக்கமான கூட்டாக இல்லை என்பதைத்தான் காட்டுகிறது. இந்தியாவுக்கு கடிதம் எழுதும் விடயத்திலும் முதலில் ஒத்துழைக்காத தமிழரசுக் கட்சி கடைசிக் கட்டத்தில் ஒத்துழைத்தது. ஆனால் ஒன்றாகக் கடிதம் எழுதிவிட்டு தனியாக சம்பந்தரும் சுமந்திரனும் இந்தியத் தூதுவரை கொழும்பில் சந்தித்திருக்கிறார்கள். மேலும், ஒரு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்போடு இணைந்து தமிழரசுக் கட்சி தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியிருக்கிறது. இது தவிர பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து போராட்டத்தை தமிழரசுக் கட்சி தனியாக முன்னெடுக்கின்றது.

அதாவது ஒரே கூட்டமைப்புக்குள் தமிழரசுக் கட்சி தனியாக ஓடுகிறது. ஏனைய கட்சிகள் கூட்டமைப்பில் இருந்து பிரிந்த கட்சிகளோடு இணைந்து வேறு ஒரு தனியோட்டம் ஓடுகின்றன. அதேசமயம் கூட்டமைப்பு என்ற பெயரிலும் கடிதம் அனுப்பப்படுகிறது. இது எதனைக் காட்டுகிறது? கூட்டமைப்பின் தலைமை இறுக்கமாக இல்லை என்பதைத்தானே? பங்காளிக் கட்சிகள் தனியோட்டம் ஓடும் போது அதனைத் தடுத்து கூட்டமைப்பின் கட்டுக்கோப்பைப் பேண ஏன் சம்பந்தரால் முடியவில்லை?

அவர் உடல் ரீதியாக மற்றவர்களில் தங்கியிருக்கும் ஒருவராக மாறிவிட்டார். கூட்டமைப்பு அவருடைய முழுமையான கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பதைத்தான் கடந்த ஓராண்டுக்கு மேலான நிலைமை நமக்கு உணர்த்துகிறது. தலைமை இருக்கத்தக்கதாக ஏனைய முக்கியஸ்தர்கள் கருத்துக் கூறுவதும், தலைமைக்கு எதிராக பகிரங்கமாக கருத்துக் கூறுவதும், பங்காளிக் கட்சிகள் வெளியில் உள்ள கட்சிகளோடு இணைந்து ஒரு கூட்டுக்குப் போவதும், கடிதங்களை அனுப்புவதும் அதைத்தான் நமக்கு உணர்த்துகின்றன.

ஆம். தமிழ் மக்களுடைய அரசியலில் அண்மைக்காலமாக ஏற்படும் குழப்பங்கள் எல்லாவற்றுக்கும் பிரதான காரணம் ஸ்திரமற்ற தலைமைத்துவம்தான். கூட்டமைப்பின் தலைவராக சம்பந்தர் கூட்டமைப்பை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாதவராக காணப்படுகிறார். அதேபோல மூத்த கட்சியும் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவை சேனாதிராஜாவும் தனது தலைமைத்துவத்தை நிரூபிக்க முடியாதவராகத் தெரிகிறார். கடந்த பொதுத் தேர்தலில் பெற்ற தோல்விக்குப் பின் தன்னை மீளக் கட்டியெழுப்ப முடியாத ஒருவராகவே தொடர்ந்தும் காணப்படுகிறார். குறிப்பாக கடந்த மார்ச் மாதத்திலிருந்து நிகழும் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை சேனாதிராஜாவின் இயலாமையும் வழுவழுத்த தன்மையும் வெளிப்படக் காணலாம். கூட்டமைப்புக்கு வெளியே நிகழும் ஐந்து கட்சிகளின் ஒருங்கிணைப்பு முயற்சிகளில் மாவை உறுதியான முடிவுகளை எடுக்கவில்லை. ஒன்றில் தமிழரசுக் கட்சியை தனியாகப் பலப்படுத்துவது என்று முடிவெடுக்க வேண்டும். அல்லது ஐந்து கட்சிகளோடு இணைந்து அக்கூட்டைப் பலப்படுத்த வேண்டும். அவர் இரண்டையுமே செய்யவில்லை.

ஆனால் அதற்காக ஐந்து கட்சிகளின் கூட்டோ அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ கூட்டமைப்புக்கு மாற்றாக பலமடைந்து வருவதாக இக்கட்டுரை கருதவில்லை. ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள் இணைத் தலைவர்கள்தான் உண்டு. எனினும், அது உருகிப் பிணைந்த ஒரு பலமான கூட்டாகத் தெரியவில்லை. அது கூட்டமைப்புக்கு எதிரான ஓர் ஐக்கியம். எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சி கூட்டமைப்புக்குள் இருந்து பங்காளிக் கட்சிகளை நீக்கக்கூடிய வாய்ப்புக்களை ஊகித்து முன்னெச்சரிக்கையோடு உருவாக்கப்பட்ட ஒரு கூட்டு அது.

அதுபோலவே தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தன்னை ஒரு பிரதான கட்சியாக வளர்த்தெடுக்கும்

# ஜநாவிக்கு கடிதம் எழுதும் கட்சிகள்!

வழிவரைபடத்தை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. மணிவண்ணனின் வெளியேற்றம் அக்கட்சியை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறது என்பது இனிவரும் தேர்தல்களில்தான் தெரியவரும். அக்கட்சி எப்பொழுதும் பிரதான நீரோட்டத்திற்கு எதிராக எதிர்ப்பு அரசியலை செய்யும் ஒரு கட்சியாகத்தான் தொடர்ந்தும் காணப்படுகிறது. தமிழ் மக்களின் அரசியலை நிர்ணயிக்கும் ஒரு மிகப் பலமான கட்சியாக வளர வேண்டும் என்ற வழி வரைபடம் அக்கட்சியிடம் இருக்கிறதா? ஏனைய கட்சிகள் காலப்போக்கில் சிதையும்போது தான் படிப்படியாக பலமடையலாம் என்று அக்கட்சி நம்புகின்றதா?

கடந்த நாடாளுமன்ற தேர்தலையொட்டி கூட்டமைப்புக்கு மாற்றாக ஒரு அணியை பலப்படுத்த முயற்சித்த செயற்பாட்டாளர்களுக்கு அது நன்கு தெரியும். ஒரு மாற்று அணியை அப்பொழுது மிகப் பலமாகக் கட்டியெழுப்பக்கூடிய வாய்ப்புக்கள் கிடைத்தன. அவ்வாறு ஒரு மாற்று அணி



மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கும் விதத்தில் ஒரு பலமான அணியாக கட்டியெழுப்பப்பட்டு இருந்திருந்தால் கடந்த பொதுத் தேர்தலில் கூட்டமைப்பு பெருமளவுக்கு தோற்கடிக்கப்பட்டிருக்கும். ஆனால் அவ்வாறு நடக்கவில்லை. கூட்டமைப்பு இழந்த ஆறு ஆசனங்களில் மூன்றைத்தான் மாற்று அணி பெற்றது. ஏனைய மூன்றும் தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்டிராத கட்சிகளிடம் சென்றன. இவ்வாறு வாக்குகள் சிதறியதற்கு பிரதான காரணம் மாற்று அணி ஒரு பலமான கூட்டாகத் திரட்சியுறாமைதான்.

எனவே இப்பொழுது படம் மிகத் தெளிவாகத் தெரிகிறது. கூட்டமைப்பின் தலைமையும் பலமாக இல்லை, தமிழரசுக் கட்சியின் தலைமையும் பலமாக இல்லை, ஐந்து கட்சிகளின் கூட்டும் உருகிப்பிணைந்த ஐக்கியமாகத் தெரியவில்லை. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்படி நிலைமைகளை வெற்றிகரமாக கையாண்டு தன்னை ஒரு பெரும் கட்சியாக வளர்த்துக்கொள்ளும் என்று நம்பத்தக்கதாக கடந்த 10 ஆண்டுகளும் அமையவில்லை. தொகுத்துப் பார்த்தால் கடந்த 12 ஆண்டுகளில் தமிழ் கட்சிகள் உடைந்து கொண்டே போகின்றன. இப்பொழுது ஏற்பட்டிருக்கும் ஐந்து கட்சிகளின் கூட்டு இனிமேல்தான் அதன் பலத்தை நிரூபித்துக்காட்ட வேண்டும்.

இது மிகப் பலவீனமான ஒரு நிலைமை. கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பம் தொடர்ந்து நீடித்தால், மிகக்குறிப்பாக சம்பந்தர் முழுமையாகத் தலைமை தாங்க முடியாத ஒரு நிலைமை தோன்றினால், கூட்டமைப்பு சிதையக்கூடிய வாய்ப்புகளே அதிகமாக தெரிகின்றன. தமிழரசுக் கட்சி தனியாகவும் பங்காளிக் கட்சிகள், ஐந்து கட்சிகளின் கூட்டுக்குள்ளும் இணைந்து செயற்படக்கூடிய வாய்ப்புக்களே அதிகரித்து வருகின்றன. அதாவது அரங்கில் உள்ள தமிழ் தேசிய கட்சிகள் எவையும் தமிழ் மக்களை இப்போதைக்கு ஒரு தேசமாக திரட்டப்போவதில்லை என்று பொருள்.

நன்றி: நிலாந்தன்










# “இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே? விரைந்து நீதி வழங்குங்கள்”

## ஐ.நா. மனித உரிமை ஆணையர் மிச்சல் பேச்சலெட்

மார்ச் 05, 2022

முக்கிய அரசு நிறுவனங்களில் இன-மத தேசியவாதம் மேலும் வெளிப்படையாக தெரிகிறது் இதனால், சிறு பான்மை இனத்தவர் விளிம்பு நிலைக்குத் தள்ளப் படுவதும், அஞ்சுவதும் அதிகரித்து, நல்லிணக்கம் பாதிக் கப்படுகிறது என்று ஐ.நா. மனித உரிமை கவுன்சில் கூட்டத் தில் தெரிவித்துள்ளார் ஐ.நா. மனித உரிமை உயர் ஆணையர் மிச்சல் பேச்சலெட்.



ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் 49 வது கூட்டத்தின் ஒரு பகுதியாக நேற்று வெள்ளிக்கிழமை (2022 மார்ச் 4) நடைபெற்ற “இலங்கை குறித்த பங்கேற்பு உரையாடல்“ என்ற நிகழ்வில் பேசிய அவர் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களின் உரி மைகளை அரசாங்கம் விரைவாக அங்கீகரிக்கவேண் டும். காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே என்பதை விரை வாக முடிவு செய்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும், குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனையும் விரைவாக வழங்கவேண்டும் என்று வலியுறுத்தியுள ளார்.

சர்வதேச குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்பேற்பதற்கான நீதிமுறையை உருவாக்காத இலங்கை அரசு அதோடு, போர்க்குற்றங்கள் தொடர் புடைய இராணுவ அதிகாரிகளை அரசாங்க உயர் பொறுப் புகளிலும் அமர்த்தியுள்ளதால், சர்வதேச அளவில் பொறுப் பேற்பை மேம்படுத்த மாற்று உத்திகளை மனித உரிமை கவுன்சில் கையாளவேண்டும் என்றும் அவர் குறிப் பிட்டுள்ளார்.

**அவரது உரை,**

இலங்கை தொடர்பாக பெப்ரவரி 25ம் தேதி அனுப்பிய எழுத் துப்பூர்வமான அறிக்கையை கவுன்சில் உறுப் பினர்கள் பெற்றிருப்பார்கள். 2021 பெப்ரவரியில் வெளி யிடப்பட்ட முந்தைய அறிக்கைக்குப் பிறகான செயல் பாடுகளைப் பற்றியே இந்த அறிக்கை கவனம் செலுத் துகிறது. இந்த விஷயத்தை மனித உரிமை கவுன்சில் தொடர்ந்து கண்காணிப்பதற்கான இன்றியமையாத தேவையை இந்த அறிக்கை காட்டுகிறது.

ஐ.நா. மனித உரிமை உயர் ஆணையர் அலுவலகத் துடன் இலங்கை அரசாங்கம் இணைந்து பணியாற்றுவது சமீப காலத்தில் அதிகரித்திருப்பதற்கும், சீர்திருத்தங்களை தொடங்குவதற்குமான அறிகுறிகள் தெரிகின்றன.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் சில பிரிவுகளை திருத்து வதற்கும், இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் களை விடுவிப்பதற்குமான முன்மொழிவுகள் வரவேற்கத் தகுந்த ஆரம்பகட்ட நடவடிக்கைகள்.

பயங்கரவாத தடுப்புச் சட்டம் தொடர்பான அடிப்படையான பிரச்னைகளை பரிசீலனை செய்ய மேற்கொண்டு நட வடிக்கை எடுக்கவேண்டும் என்று அரசாங்கத்தை ஊக் குவிக்கிறேன்.

தவறிழைத்தவர்கள் தப்பித்துக்கொள்ளலாம் என்ற நிலை யை முடிவுக்குக் கொண்டுவர, கடந்த கால அத்துமீறல்கள் மீண்டும் நிகழ்வதைத் தடுக்க ஆழமான சட்ட, நிறுவன, பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், பொறுப்பேற்கும் விஷயத்தில் கடந்த ஆண்டும் மிகப்பரிய தடைகளும், பின்னடைவுகளும் ஏற்பட்டுள்ளன என்பது வருந்தத்தக்கது. பாதிக்கப்பட்டவர்களுக்கும், குடும் பத்தினருக்கும் தொடர்ந்து உண்மையும் நீதியும் மறுக் கப்படுகிறது.

விமர்சனங்கள் மீதான அரசாங்கத்தின் பதில் நடவடிக்கை ஜனநாயக, குடிமை செயல்பாடுகளுக்கான வெளியை சுருக்குவதாக உள்ளது. குறிப்பாக மனித உரிமை நடவடிக் கைகளுக்கான வெளி சுருங்குகிறது

குறிப்பிட்ட சில போக்குகள் மனித உரிமைகளுக்கு அச் சுறுத்தலாக இருப்பது 2021 பெப்ரவரி அறிக்கையில் அடை யாளம் காணப்பட்டது. இந்த போக்குகள் தொடர்ந்து அதி கரிக்கின்றன.

அரசாங்கத்தின் குடிமை செயல்பாடுகள் இராணுவமய மாவது தொடர்ந்து ஆழமடைந்துவருகிறது என்று தெரி வித்துள்ளார் மிச்சல் பேச்சலெட்.

குடிமை பதவிகள் இராணுவ அதிகாரிகள் கையில் குவிவது குறித்து நான் ஆழமாக கவலை கொண்டிருக் கிறேன். அந்தப் பதவிகள் தரப்படுகிற சிலர் சில மோசமான மனித உரிமை மீறல்களில் குற்றம்சாட்டப்பட்டவர்கள்.

2020 இறுதியில் இருந்து புத்தமத மரபு பாதுகாப்பு, வனப் பாதுகாப்பு தொடர்பில் நிலம் தொடர்பான தகராறுகள் அதிகரித்துள்ளன. இதனால், சிறுபான்மை சமூகங்களின் குறைகள் தீவிரமைடந்துள்ளன. புதிய பதற்றங்களை இது தோற்றுவிக்கிறது.

அரசமைப்புச் சட்டத்தின் (யாப்பு) 20வது திருத்தத்துக்குப் பிறகு இலங்கை மனித உரிமை ஆணையம் உள்ளிட்ட நாட்டின் சில ஆணையங்கள், நிறுவனங்களின் சுதந்திரத் தன்மை செல்லரித்துப் போவது கண்டு வருத்தம் கொள் கிறேன்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல பத்தாயிரம் பேர் தொடர்பில் விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் மீது பாதிக் கப்பட்டோருக்கு போதிய நம்பிக்கை இல்லை.



வரவிருக்கிற அரசமைப்புச் சட்ட மறு வரைவு நடவடிக்கை முக்கிய நிறுவனங்களின் சுதந்திரம் காக்கப்படுமா என்பதற்கான முக்கியச் சோதனையாக இருக்கும். இந்த மறுவரைவு நடவடிக்கை, அதிகாரப் பகிர்வுக்கும், மனித உரிமைக்கும் முக்கியத்துவம் தரவேண்டும்.

உள்நாட்டிலேயே வடிவமைத்து செயல்படுத்தப்படும், எல் லோரையும் உள்ளடக்கும் நல்லிணக்க மற்றும் பொறுப்பு ஏற்பு செயல்முறை தொடர்பாக இந்த கவுன்சிலில் வாக் குறுதி அளித்து இரண்டாண்டுகள் ஆகிறது. ஆனால், இன் னும் பொறுப்பேற்பதற்கும், நல்லிணக்கத்துக்கும் இட்டுச் செல்வதற்கான நீதிமுறை ஒன்றுக்கான நம்பத்தகுந்த செயல்திட்டம் எதையும் அரசாங்கம் வழங்கவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோர் விஷயத்தில் பாதிக்கப்பட் டவர்கள், குடும்பங்கள் ஆகியோரின் தொடர் வேதனை களையும், மன உளைச்சலையும் கண்டு கவலை கொண் டுள்ளேன்.

அவர்களது உரிமைகளை அரசு அங்கீகரிக்கவேண்டும். அவர்களுக்கு என்ன நேர்ந்தது அல்லது எங்கே இருக் கிறார்கள் என்பதை அவசரமாக உறுதி செய்யவேண்டும். தவறிழைத்தவர்களை நீதியின் முன் நிறுத்தவேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் செய்யவேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

ஈஸ்டர் வெடிகுண்டு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களும், மத தலைவர்களும் தொடர்ந்து நீதிக்காக, நிவாரணத் துக்காக, எப்படி அந்த தாக்குதல் நடந்தது என்ற உண்மை யைக் கேட்டு குரல் கொடுக்கிறார்கள். குறிப்பாக பாதுகாப்பு அமைப்பின் பங்கு அதில் என்ன என்பதை அவர்கள் கேட்கிறார்கள்.

குடிமை அமைப்புகள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் கண்காணிப்புக்கும், தொந்தரவுக்கும், அச்சுறுத்தலுக்கும் உள்ளாவதாக தொடர்ந்து வரும் செய்திகளால் ஆழமான கவலை கொள் கிறேன். தொடரும் காவல் மரணங்கள், போலீஸ் என் கவுன்டர்கள் திரும்பத் திரும்ப நிகழ்வது எச்சரிப்பதாக உள்ளது. போலீஸ், இராணுவம் மோசமாக நடத்துவதாக தொடர்ந்து குற்றச்சாட்டுகள் வருகின்றன. பாதுகாப்புத் துறை சீர்திருத்தம் வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

இலங்கையில் நடந்த சர்வதேசக் குற்றங்கள், மோசமான மனித உரிமை மீறல்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதில், நீதிமுறையை கடைபிடிப்பதில் அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்கள் தவறிவிட்டன என்பதை

கவுன்சிலில் சமர்ப்பித்த முந்தைய அறிக்கைகள் விவரிக்கின்றன.

தற்போதைய அரசாங்கம், பொறுப்பேற்கும் நிலையை உருவாக்க விரும்பாதது மட்டுமல்ல போர்க்குற்றங்கள் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளை அரசாங்கத்தின் உயர் பதவிகளிலும் அமர்த்தியுள்ளது. இது தண்டனை குறித்து கவலை தேவையில்லை என்ற நிலையை இது மேலும் மோசமாக்குகிறது.

இந்த காரணங்களாலும், பாதிக்கப்பட்டவர்கள் குறையை ஏதோ ஒரு வகையில் தீர்ப்பதற்கும், சர்வதேச அளவில் பொறுப்பேற்கும் நிலையை மேம்படுத்துவதற்காக மாற்று உத்திகளை கையாள வேண்டும் என்று கவுன்சிலை கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

46/1வது தீர்மானத்தின் பொறுப்பேற்பு குறித்த அம்சங்களை செயல்படுத்துவது தொடர்பாக தயாரிப்பு வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

குற்றங்களுக்கு நீதி வழங்கல் என்ற பார்வையில், மேற்

# தமிழீழ தமிழர்களுக்கு சிறீலங்கா பாராளுமன்றம் ஒருபோதும் தீர்வு தராது!

**பாராளுமன்ற உறுப்பினர், முன்னால் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்**

கொண்டு தகவல் திரட்டுவதில் உள்ள ஓட்டைகளை, முன்னுரிமைகளை கண்டறிவது என்ற நோக்கத்தில், பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்திய அணுகுமுறையில் ஆதாரக் களஞ்சியத்தில் உள்ள தகவல்களை எங்கள் குழு ஆராயும்.

இதற்கு என் அலுவலகம் குறிப்பிடத்தக்க அளவு வேலை செய்யவேண்டும். இதற்கு நேரம், போதிய மனித, நிதி வளம், அரசுகளின் ஒத்துழைப்பு ஆகியவை தேவை. இலங்கையில் சர்வதேசக் குற்றங்களுக்கு உதவியாக இருந்த அனைத்துத் தரப்பையும் விசாரணைக்கு உடபடுத்தி, நீதி முறையில், உரிய எல்லையில், சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஒத்துழைப்பு இதில் அடங்கும்.

ஏற்றுக்கொள்ளப்பட்ட, பிராந்தியம் கடந்த, உலகளாவிய நீதியெல்லை என்ற கோட்பாட்டின் கீழ் இந்த நடவடிக்கை அமைய வேண்டும்.

மோசமான சர்வதேசக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்பேற்பை உறுதி செய்ய தீர்மான எண் 46ஃ1-ன் கீழ் வழங்கப்பட்ட உரிமை ஒரு வாய்ப்பை அளிக்கிறது. இது இன்றியமையாத பணி. தண்டனை பற்றிய கவலை இல்லாத நிலை நீடிக்கும் வரையில் இலங்கை உண்மையான நல்லிணக்கத்தையோ, நீடித்த அமைதியையோ அடையாது.

நன்றி : தமிழ் பிபிசி

# போராடி போராடி உறவுகளை காணாது முடங்கிய செல்வராணி

5 மார்ச் 2022



செல்வராணி

இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்து 13 ஆண்டுகள் ஆன போதிலும், அதனால் ஏற்பட்ட காயங்களும், அதனால் ஏற்பட்ட வலிகளும் இன்றும் அவ்வாறே இருந்து வருகின்றன.

போர் இடம்பெற்ற மற்றும் அதன் பின்னரான காலப் பகுதிகளில் பல்வேறு காரணங்களால் தமது உறவுகளை தொலைத்தவர்கள் இன்றும் வீதியில் போராடி வருகின்றனர்.

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள்“ என்று அழைக்கப்படும் இவர்களின் உறவினர்கள், இன்றும் தமது உறவுகளை தேடி போராடி வருகின்ற நிலையில், போராட்டங்களில் ஈடுபட்ட பலர், போராட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

வயது முதிர்வு காரணமாக ஏற்படும் நோய்கள், உடலில் வலுவின்மை போன்ற காரணங்களில் பெற்றோர் போராட முடியாத நிலைமைக்கு உள்ளாகின்றனர். அதேவேளை, தமது உறவுகளை தேடி போராட்டங்களை ஆரம்பித்து, வீதிகளில் போராடி போராடி, இறுதி வரை காணாமல் போன உறவுகளை கண்டறிய முடியாது, இன்று வரை 108 பேர் உயிரிழந்துள்ளதாக காணாமல் போனோரின் உறவுகள் சங்கம் தெரிவிக்கிறது.

இவ்வாறு போராடி வரும் ஒரு வயது முதிர்ந்த பெண்ணொருவரின் சோக கதையே இது. இவர் தங்கராசா செல்வராணி வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் வாழும் இவருக்கு வயது 70. 2008ம் ஆண்டு யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் தமது வீட்டிலிருந்து அனைத்து ஆண்களையும் தொலைத்த இந்த பெண், அவர்களை தேடி இன்றும் போராடி வருகின்றார்.

தங்கராசா செல்வராணி, தனது மகன், பேரன் மற்றும் மருமகன் ஆகியோரையே இவ்வாறு தொலைத்து, தேடி வருகின்றார். தனது மருமகனை இராணுவத்தினர் நேரடியாகவே வீட்டிற்கு வந்து அழைத்து சென்ற நிலையில், அவர் காணாமல் போயுள்ளதாக செல்வராணி தெரிவிக்கிறார்.

அதேபோன்று, தனது மகன் மற்றும் பேரன் ஆகியோர் வீட்டிற்கு அருகிலுள்ள ஆற்றிற்கு சென்ற வேளையில், திடீரென காணாமல் போனதாகவும் அவர் கூறுகிறார்.

தனது மகன் மற்றும் பேரன் ஆகியோர் காணாமல் போன இடத்தில், இலங்கை பாதுகாப்பு பிரிவினர் நடமாடியமைக்கான அடையாளங்கள் காணப்பட்டதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். 2008 முதல் தொடங்கிய தேடல், இன்றும் தொடர்ந்து வருவதாக கூறுகிறார் செல்வராணி.

எனினும், கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக, செல்வராணி ஒரு இடத்திலேயே முடங்கி விட்டார். வயது முதிர்வு மற்றும் நோய் தாக்கம் காரணமாக வீட்டிற்குள்ளேயே முடங்க வேண்டிய கட்டாயத்திற்கு அவர் தள்ளப்பட்டுள்ளார்.
தனது உறவுகள் காணாமல் போன தருணம் முதல் போராட ஆரம்பித்த இவர், கடந்த சில வாரம் வரை போராடி வந்தார். எனினும், கடந்த சில வாரங்களாக ஒரு இடத்திலேயே முடங்கி விட்டார் செல்வராணி.







“சாகுறதுக்கு இடையில என்ட பிள்ளைகள கண்ணால காணனும். ஒரு பிள்ளையும் இல்லாம இன்றைக்கு இருக்குறேன். போகாத இடமும் இல்ல. கூப்பிடாத யாரும் இல்ல. ஒருக்கா எங்கட பிள்ளைகள என்ன ஏதுனு பாத்துரு வோனு நாங்களும் படாத கஷ்டம் முழுக்க பட்டு, இன்னும் தான் ஒரு முடிவும் இல்லையே. சர்வதேச சமூகத்தை கூப்பிட்டு, கூப்பிட்டு மண்டாடிக் கொண்டிருக்கோம். ஒரு முடிவும் எங்களுக்கு கிடைக்குது இல்லையே...” என கண் ணீர் மல்க செல்வராணி கூறுகின்றார்.

காணாமல் போனோரின் உறவுகளுக்கு நட்டஈடு வழங்குவதாகவும், மரண சான்றிதழ் வழங்குவதாகவும் இலங்கை அரசாங்கம் வெளியிட்ட அறிவிப்பு குறித்தும் செல்வராணி கருத்து வெளியிட்டார்.

‘கடைசி வரைக்கும் நான் சாகும் மட்டும் மரண சான்றிதழை நான் வாங்க மாட்டேன். நான் வேண்ட மாட்டேன். எனக்கு பிள்ளைகள் தான் தேவை. என்னன்டு அவங்க மரண சான்றிதழ் தருவாங்க. எங்கட பிள்ளைகள யார் கொண்டு போன, எவர் கொண்டு போன, என்ன நடந்தது என்டு யாராச்சு பார்த்தா எங்களுக்கு மரண சான்றிதழ் தர போறாங்க. பிள்ளைகள வச்சுக் கொண்டு தான் தாறாங்களோ? வைக்காம தாறாங்களோ? யார் கண்டது. மரண சான்றிதழுக்கு நான் கையொப்பம் வைக்க மாட்டேன்” என அவர் குறிப்பிடுகின்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவை அமர்வுகள் தற்போது ஜெனீவாவில் நடைபெற்று வருகின்றன. இந்த நிலையில், இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் யுத்தக் குற்றங்கள் மற்றும் காணாமல் போனோர் விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து ஜெனீவாவில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பலர் தற்போது ஜெனீவாவிற்கு சென்றுள்ளனர்.

இவ்வாறான தருணத்திலேயே, தமது உறவுகளை தேடி போராடிய செல்வராணி, சுகவீனமுற்றுள்ள இந்த தருணத்தில் இவ்வாறு தனது கவலையை பகிர்ந்துக்கொண்டிருந்தார். இலங்கையினால் வழங்கப்படுவதாக கூறப்படும் நட்டஈடு மற்றும் மரண சான்றிதழ்களை நிராகரித்த அவர், தனது பிள்ளைகளை இறுதி நொடியிலேனும் பார்க்க வேண்டும் என கோரிக்கை விடுகிறார்.

நன்றி: ரஞ்சன் அருண்பிரசாத் - பிபிசி தமிழ்

விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு
437.345.4203

முக்கிய அறிவித்தல்
தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# சர்வதேச பொறியிலிருந்து விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எங்களை பயன்படுத்த அனுமதிக்க முடியாது

## தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிற்கு செல்வம் அடைக்கலநாதன் கடிதம்

மார்ச் 12, 2022

சர்வதேச பொறியிலிருந்து விடுவிப்பதற்கு இலங்கை அரசாங்கம் எங்களை பயன்படுத்த அனுமதிக்க முடியாது எனதமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிற்கு எழுதிய கடிதத்தில் ரெலோ தெரிவித்துள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பினரை பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நேற்று அழைப்பு விடுத்திருந்தார். எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (15) மாலை 3.30 மணிக்கு சந்திப்பிற்கான நேரமும் ஒதுக



கியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று இரவு ரெலோவின் அரசியல்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களின் பின்னர், இது தொடர்பில், ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனால், இரா.சம்பந்தனிற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது
ஜனாதிபதி அவர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை அவரமாக பேச்சுவார்த்தைக்கு குறுகிய கால அவகாசத்தில் அழைத்திருக்கிறார். இது சம்பந்தமாக எமது கட்சியின் அரசியல் உயர்பீடம் நடாத்திய ஆய்வின் அடிப்படையில் பின்வரும் கருதுக்களை முன்வைக்கிறோம்.

இலங்கை அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த வேண்டியது அவசியம் என்பதை ஏற்றுக் கொண்ட பொழுதிலும் இந்த நேரத்திலே அரசாங்கம் எம்மை அழைத்து இருப்பதென்பது எங்களை ஒரு பகடைக் காயாகப் பாவித்து சர்வதேச மற்றும் உள்ளக அரசியல் அழுத்தங்களில் இருந்து தப்பித்துக் கொள்ளும் நடவடிக்கையாக அமைந்து விடும் என்று நாங்கள் கருதுகிறோம்.

ஜனாதிபதி அவர்கள் பதவியேற்ற காலத்திலிருந்து தான் சிங்கள-பௌத்த மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர் எனவும் அவர்களுடைய கருத்துக்களுக்கும் அபிலாசைகளுக்குமே முன்னுரிமை வழங்குவேன் என்றும் தெரிவித்து வருவதோடு மட்டுமல்லாமல் அந்த வகையிலே தான் அவருடைய நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன. குறிப்பாக தமிழர்களுடைய காணிகளை பல்வேறு திணைக்களங்களின் ஊடாக கையகப்படுத்தி வருவதோடு நவீன முறையிலே குடிப்பரம்பல் சிதைப்பையும் திட்டமிட்ட வகையில் ஒரு காலமும் இல்லாத வகையில் நிறைவேற்றி வருகிறார். எமது கோரிக்கைகள் போராட்டங்கள் எல்லாம் பயனற்றவையாகவே போயிருக்கின்றன.

ஓரினத்தின் தலைவரே தாமும் இந்த அரசும் என்ற அவரின் நிலைப்பாடு நல்லிணக்கதிற்கோ பொறுப்புக் கூறலுக்கோ வழியமைக்காது. அத்துடன் மற்றைய இனங்களின் அங்கீகாரத்தையும் மறுதலிப்பதோடு இனப்பிரச்சினை தீர்வுக்கான கதவுகளையும் மூடி நிற்கிறது.

இலங்கையில் தமிழ் மக்களுக்கு இனபிரச்சனை இல்லை பொருளாதாரப் பிரச்சனையே இருக்கின்றது என்று ஐநா வரையில் ஜனாதிபதியும் மற்றும் பல இடங்களில் அவர் சார்ந்தோரும் தெரிவித்து வருகிறார்கள். இலங்கையில் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சனை உண்டு என்பதையும் அதற்கான தீர்வு அவசியம் என்பதையும் ஜனாதிபதி தனது நிலைப்பாடாக வெளிப்படுத்துவது அவசியம் என நாம் கருதுகிறோம்.

அத்தோடு பொறுப்புக்கூறல், நல்லிணக்கம், மனித உரிமை ஆகிய விடயங்களில் அரசாங்கம் எந்தவித அக்கறையும் செலுத்தாமல் செயல்பட்டு வருகிறது. கடந்த ஐநா மனித உரிமை பேரவை அமர்வில் மனித உரிமைக்கான உயர்ஸ்தானிகர், இலங்கை அரசாங்கம் மனித உரிமை, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் ஆகிய விடயங்களில் பாரிய பின்னடைவை சந்தித்து வருகிறது என்று தெரிவித்து இருப்பதோடு சர்வதேச நீதிப் பொறிமுறையின் முன் இலங்கையை பாரப்படுத்துமாறு மனித உரிமை பேரவை அங்கத்துவ நாடுகளுக்கு வலியுறுத்தியிருக்கிறார். எமக்கு ஆதரவாக செயற்பட்டு வரும் நாடுகளும் அந்த நிலைப்பாட்டிலே கவனம் செலுத்துகிறார்கள். குறிப்பாக இந்தியா, ஐநா மனித உரிமைப் பேரவையின் நடந்து முடிந்த கூட்டத்தொடரில் காத்திரமான அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

தங்கள் தலைமையிலே தமிழ்தேசிய பரப்பில் செயலாற்றும் தமிழ் மக்களின் நலனில் அக்கறை கொண்ட அனைத்து கட்சிகளும் ஒருமித்து அண்மையில் இந்தியாவிற்கு முன்வைத்த கோரிக்கைக்கு பின்னர் இந்திய தரப்பில் ஏற்பட்டிருக்கும் பாரிய மாற்றத்தினை இது எடுத்துக்காட்டியுள்ளது. தமிழ் மக்களுடைய நியாயமான அபிலாசைகளை தீர்க்கக்கூடிய அரசியல் தீர்வு, பொறுப்புக் கூறல், நல்லிணக்கம், மனித உரிமை விடயங்களிலும் இலங்கையை தாங்கள் வலியுறுத்துவதாக இந்தியா தெரிவித்திருப்பது எம்மக்களுக்கு நம்பிக்கை தரும் விடயமாக இருக்கிறது.

இந்தச் சூழல் ஒருபுறமிருக்க, சர்வதேச அரசியலிலும் உள்ளக பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளுக்கும் அரசாங்கம் முகம் கொடுத்து இருக்கின்றது.

எமது மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாகவும் எமது இனப்பிரச்சினை சம்பந்தமாகவும் முடிவுகளை எடுப்பதற்கு பல தடவைகள் நாங்கள் கோரிக்கைகளை விடுத்தும் எங்களை உதாசீனம் செய்த ஜனாதிபதி இன்று எங்களை அழைத்திருப்பதானது அவர்கள் முகம் கொடுத்து இருக்கக் கூடிய சிக்கல்களில் இருந்து தங்களை விடுவிப்பதற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்த நாங்கள் இடமளிக்க முடியாது. அது எங்களுடைய மக்களும் எமது மக்களுக்காக இந்தியாவும், சர்வதேசமும், நாங்களும் எடுத்து வரும் முயற்சிகளுக்கு பின்னடைவாக அமைந்து விட ஒருபோதும் இடமளித்து விடக்கூடாது என்பதில் நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம்.

மேலே குறிப்பிட்ட நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் விடயங்களை அரசாங்கம் நிராகரித்தும் அதை செயல்படுத்த முடியாது என்றும் உறுதிபட தெரிவித்து வருகிறார்கள். எனவே இந்த சந்திப்பு எந்த அளவிற்கு தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கும் என்பதில் நாங்கள் கரிசனை கொண்டுள்ளோம்.

இந்தப் பின்னணியில் நல்லிணக்க நடவடிக்கையாக அரசாங்கம் தமது தரப்பில் செயற்படுத்தக் கூடிய விடயங்களான காணி அபகரிப்பை முற்றாக நிறுத்துதல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குதல், அரசியல் கைதிகள் உடனடி விடுதலை, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான பதில் உட்பட, குறிப்பாக ஐநா மனித உரிமைப் பேரவையின் பிரேரணையில் கூறப்பட்ட பல விடயங்களில் ஏதாவது ஒரு சில விடயங்களை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு காத்திரமான எமது மக்களுக்கு நம்பகத் தன்மையான சூழலை ஏற்படுத்துவதே பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்ல வழிவகுக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். அப்படிப்பட்ட நல்லிணக்க நடவடிக்கையை அரசாங்கம் நிறைவேற்றிய பின்னர் இந்த சந்திப்பில் கலந்து கொள்வது எமது இனத்துக்கு ஆதரவாக செயற்பட்டு கொண்டிருக்க கூடிய இந்தியா உட்பட சர்வதேச நாடுகளுடைய முயற்சிக்கு வலுசேர்த்து எமது மக்களுக்கு காத்திரமான அரசியல் தீர்வையும் நீதியையும் பெற்றுத் தருவதற்கு வழிவகுக்கும் என்று நம்புகிறோம்.

கடந்தகாலங்களில் ராஜபக்க்ஷ தலைமையிலான அரசோடு பேச்சுவார்த்தை நடாத்திய அனுபவங்களையும் இங்கு நினைவு கூருவது பொருத்தமானது.

ஆகவே தாங்கள் இவற்றை கருத்தில் கொண்டு அரச தரப்பில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க சமிக்ஞையின் செயற்பாட்டின் அடிப்படையில் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதே ஆக்கபூர்வமானதாக அமையும் என்பதை அரச தரப்பிற்கு தற்போதைய சூழலில் எமது நிலைப்பாடாக தெரிவிப்பதே எமது மக்கள் நலன் சார்ந்ததாக அமையும்.

தாங்கள், மேற்கூறிய விடயங்களை கவனத்தில் எடுத்து இவ்விடயத்தில் செயலாற்ற வேண்டுமென மிக அக்கறையுடன் கோருகிறோம்.





எம் தாயக மண்ணின் வேரிலிருந்து எழுந்து நடக்கும் இலட்சிய மின் தாள்

# சங்கத்தமிழ்

Sangathamil

சர்வதேச மின் செய்தித்தாள்

## sangathamil.com

**தமிழீழம், கனடா, தமிழ்நாடு மற்றும் உலக செய்திகள்**
**அரசியல், மாவீரர் களம், வரலாறு, அறிவியல்,**
**இலக்கியம், சிறுகதைகள், கவிதைகள், துணுக்குகள், மருத்துவம்,**
**இன்னும் பல உள்ளடக்கியதாக மின் இணையத் தாள்**




**"...புலிகளும் இந்நாள் இல்லையேல் – மண்ணில்**
**எலிகளும் தின்னும் இத்தமிழர் இனத்தையோ!"**

**விசேட அறிவித்தல்: துயர்பகிர்வு**

*தொடர்புகளுக்கு:*

sangathamilcanada@gmail.com

**437.345.4203**

# GTA CHIROPRACTIC CENTRE

*We are specialized in*

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



**Health is Wealth**

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486

GTA Square Mall 5215 Finch Ave, E#206

Scarborough, ON, M1S 0C2

www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171

S.மூர்த்தி

Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

# சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்ச்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# Nickon நிக்கொன்

Photo & Video — போட்டோ & வீடியோ

Digital Album — டிஜிட்டல் அல்பம்



**உங்கள் குடும்ப மற்றும்**
**சமூக நிகழ்வுகளை நினைவில்**
**நிறுத்தி, நிழற்படமாக்கிட...**



Call: Vijay

416.554.8899

Facebook ID:
Nickon Studio




பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழகம்

# ஈழத்தமிழர் வரலாறு -04

**திராவிடரும் இலங்கை நாகரிகத்தின் உருவாக்கமும்**

இடைக்கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக கி.மு. 800 இல் இருந்து திராவிட மக்கள் வாழ்ந்ததற்கான செறிவான சான்றுகள் இலங்கையின் பல பாகங்களிலும் கண்டுடிபிக்கப்பட்டுள்ளன. இதன் முக்கிய சான்றாக பெருங்கற்காலப்பண்பாடுவிளங்குகிறது. பெருங்கற்காலப் பண்பாடு என்பது ஆதிகாலத் திராவிட மக்கள் இறந்தோரை அடக்கம் செய்வதில் பின்பற்றிய ஒரு பண்பாட்டு அம்சத்தைக் குறிப்பதாகும். இதன் ஈமச்சின்னங்கள் நாட்டின் பௌதீகத் தன்மைக்கு ஏற்ப பல வடிவங்களில் அமைக்கப்பட்டுள்ளன.



ஈமத்தாழி
பொம்பரிப்பு, புத்தளம்



ஆனைக்கோட்டை முத்திரை

இதன் வடிவ அமைப்பைக் கொண்டு இவை கல்லறை, கல்மேசை, நடுகல், கல்வட்டம் கற்கிடை, ஈமைத்தாழி, புதைகுழி எனப்பலவாறு அழைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் (மாமடுவ) கல்வட்டங்கள், கல்லறைகள் என்பனவும், புத்தளம் (பொம்பரிப்பு) பூநகரி (மண்ணித்தலை, வெட்டுகாடு) யாழ்ப்பாணம் (கந்தரோடை, ஆனைக்கோட்டை, களபூமி) ஆகிய இடங்களில் புதைகுழியும், தாழியடக்க முறையும் பெரும்பாலும் பின்பற்றப்பட்டிருப்பதற்குச் சான்றுகள் கடைத்துள்ளன. இத்தகைய ஒரு தன்மையே தென் தமிழ்நாட்டிலும் காணப்படுகிறது. இலங்கைக்கு இப்பண்பாடு தென்னிந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்த திராவிடமக்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தென்பது தொல்லியலாளரின் பொதுவான கருத்தாகும். ஆனால் இலங்கையில் இது வரை கிடைத்த பெரும்பாலன சான்றுகள் தென்னிந்தியாவின் தென்பகுதியுடன் சிறப்பாக தமிழ்நாட்டில் கிடைத்த பெருங்கற்காலப்பண்பாட்டுச் சான்றுகளுடனேயே அதிக ஒற்றுமை கொண்டுள்ளது. மாதோட்டத்திற்கு நேரெதிரே அமைந்த அரிக்கமேடும் பொம்பரிப்புக்கு நேரெதிரே அமைந்த ஆதிச்சநல்லூரும் இப்பண்பாட்டில் ஒரே பிராந்தியம் என மயங்கும் அளவிற்கு ஒற்றுமைத் தன்மை உடையன இதனால் இடைக்கற்காலப் பண்பாட்டுக்குரிய ஆதி ஒஸ்ரலோயிட் மக்களைப் போல் பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய திராவிட மக்களும் பெருமளவுக்கு தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்குப் புலம் பெயர்ந்தனர் எனக் கூறலாம்.

இலங்கையில் இம்மக்களுக்குரிய பெருங்கற்காலப் பண்பாடு கி.மு. 800 முதல் கி.மு. 300 வரை நிலவியதற்குச் சான்றுகள் உண்டு. சில பிராந்தியங்களில் இடைக்கற்காலப்பண்பாட்டின் தொடர்ச்சியாகவும் சில பிராந்தியங்களில் இப்பண்பாட்டுடனும் இலங்கை வரலாறு தொடங்குகிறது. புராதன இராசதானி அமைந்த அநுராதபுரத்திலும், பூநகரி மாதோட்டம் ஆகிய இடங்களிலும் இடைக்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாக இப்பண்பாடு விளங்குகிறது. இதனால் முற்பட்ட கலாச்சார மக்களும் காலப்போக்கில் பெருங்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றியிருக்காலம் எனக் கருத இடமுண்டு.

ஆரம்ப காலத்தில் இப்பண்பாட்டிற்கு குரிய மக்கள் நாட்டின் கரையோரப்பகுதிகளில் குடியேறி காலப்போக்கில் நாட்என் உட்பகுதிகளுக்கு புலம் பெயர்ந்திருக்கவேண்டும். இதை புத்தளம் தொட்டு மட்டக்களப்பு வரையான கரையோரப்பகுதியில் உள்ள பொம்பரிப்பு, மாதோட்டம், பூநகரி, கந்தரோடை, இலங்காத்துறை, கிளிவெட்டி ஆகிய இடங்களில் கிடைத்த சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இதற்கு இப்பிராந்திய பௌதீக அமைப்பு, வரண்ட காலநிலை, மழைகாலத்தில் பெருகி வரும் வெள்ள வாய்க்கால், இலகுவாக அழிக்கக்கூடிய சிறிய பற்றைக் காடுகள், சிறு குளங்களை இலகுவாக அமைக்கக்கூடிய நிலங்கள், மந்தை மேய்ப்பதற்குரிய தரவைகள் ஆகியவை காரணமாக அமைந்தன.

இப்பண்பாடு நிலவிய காலப்பகுதியில் ஏற்பட்ட அபிவிருத்தகளே பிற்காலத்திலே தமிழ், சிங்களப்பண்பாடு தோன்றி வளரக் காரணமாகும். இன்றைய தமிழ், சிங்களப் பண்பாட்டின் வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றின் தொடக்க வேர்கள் சில பெருங்கற்காலப் பண்பாட்டுடன் தொடங்குவதைக் காணலாம். இப்பண்பாட்டுடன் தான் இலங்கையில் நிலையான குடியிருப்பு, நீர்பாசன விவசாயம், இரும்பின் உபயோகம், கறுப்பு, சிவப்பு, மட்பாண்ட உபயோகம், அரச தோற்றம் என்பன ஏற்பட்டன என்பதை தொல்பொருட்சான்றுகள் அறுதியிட்டுக் கூறுகின்றன. இச்சான்றுகள் இலங்கயின் நாகரிக வரலாறு விஜயன் வருகையோடு ஏற்பட்டதென்ற பாரம்பரிய கருத்தினை முற்றாக நிராகரித்துள்ளது. அண்மைக்காலங்களில் பெருங்கற்கால பண்பாடுபற்றி விரிவாக ஆய்வினை மேற்கொண்ட கலாநிதி சுசந்தகுணதிலகா இந்த நாட்டு நாகரிக வரலாற்றுக்கு வித்திட்டவர்கள் வெறும் கற்பனையில் உள்ள விஜயனும் அவன் கூட்டத்தாருமல்ல; மாறாக தென்னிந்தியாவிலிருந்து குடியேறிய திராவிடப் பெருங்கற்கால மக்கள் எனச் சுட்டிக்காட்டுகிறார். அத்துடன் இச்சான்றுகள் தமிழருக்கு சாதகமாகவும் சிங்களவருக்குப் பாதகமாகவும் உள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் பெருங்கற்காலப் பண்பாட்டின முதிர்ச்சி நிலையில் சங்ககால நாகரீகம் தோன்றியதை சங்க இலங்கியமும் தொல்பொருட் சான்றுகளும் உறுதிப்படுத்துகின்றன. பெருங்கால மக்கள் பின்பற்றிய தாழியடக்கம், புதைகுழி போன்ற ஈமைச்சின்ன முறைகளையே பழந்தமிழர் இலக்கியத்தில் வரும் "தொடுகுழிப்படுவோர், தாழ் வயிளடைப்போர் தாழியிற் கவிப்போர்" போன்ற குறிப்புக்கள் உறுதிப்படுத்துகின்றன. தமிழகத்தில் ஆட்சிபுரிந்த மூவேந்தர்களும், சிற்றரசர்களும் பெருங்கற்காலப்பண்பாட்டின் வழிவந்தவர்கள் என்பது தொல்லியலாளரின் கருத்தாகும். இதைப் பெருங்கற்கால மையங்களில் கிடைத்த தமிழ் பிராமிச் சாசனங்களும் உறுதிப்படுத்துகின்றன. இச்சாசனங்கள் பெருங்கற்கால மக்கள் பேசிய திராவிட மொழியில் இருந்து சங்க இலக்கியம்படைக்கும் அளவிற்கு தமிழ் மொழி வளர்ச்சியடைந்ததை அடையாளம் காண உதவுகின்றன.



இலங்கையைப் பொறுத்தவரை இங்கு நிலவிய பெருங்கற் காலப்பண்பாட்டை அறிவதற்கு பௌத்தமத வரலாற்றைக் கூறும் பாளி இலங்கியங்கள் உதவவில்லை. ஆனால் பௌத்தம் பரவ முன்னர் தமிழ் நாட்டில் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் ஏற்பட்ட பண்பாட்டு வளர்ச்சிப் போக்கு இங்கு ஏற்பட்டதை தொல்லியற் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையின் பல்வேறு தொல்லியல் மையங்களில் தென்னிந்தியாவை ஒத்த பெருங்கற்கால ஈமைச்சின்ன முறைகண்டு பிடிக்கப்பட்டாலும் பொம்பரிப்பு தொட்டு கிளிவெட்டி வரையிலான கரையோரப்பகுதியில் தென் தமிழ்நாட்டை ஒத்த ஈமைச்சின்ன முறையே காணப்படுகின் றது. இது சங்க இலக்கியம் கூறும் தாழியடக்கம், புதைகுழி என்பவற்றை உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான பெருங்கற் காலத் தொல்லியல் மையங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் சங்க இலக்கியத்தில் வரும் ஆய், வேள், பெருமகள் போன்ற பட்டப்பெயர்கள், குலப்பெயர்களை உடைய சிற்றரசர்கள், நிலக்குழுத்தலைவர்கள் ஆட்சி தோன்றியதை உறுதிப்படுத்துகின்றன. இந்தியாவில் தமிழ் நாடு தவிர பெரும் பாலான பிராந்தியங்களில் கி.மு. 3ம் நூற்றாண்டில் பிராகிருதம் மக்கள் மொழியாக விளங்கியதை அசோகன் காலப்பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஆனால் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்கே சிறப்பான எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்ட தோடு தமிழ் ஆட்சி மொழியாகவும் இருந்தது. கி.மு. 3ம் நூற்றாண்டில் பௌத்த மதம் இலங்கைக்குப் பரவியபோது அசோக பிராமியும், பிராகிருத மொழியும் அறிமுகமாகியது. இம் மொழி இங்கு வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் பேசிய எலு என்ற திராவிட மொழியுடன் கலந்தே பிற்காலத்தில் சிங்கள மொழி தோற்றம் பெறுகிறது. ஆனால் இவை அறிமுகமாவதற்கு முன்னரே தமிழ் மொழிக்கே சிறப்பான தமிழ் பிராமிச்சாசனங் கள் பயன்பாட்டில் இருந்தன என்பது சுத்தமங்கலம் கருணாரத்தின, பெர்ணாண்டோ, ஆரிய ஆபயசிங்க போன் றோரின் கருத்தாகும். இதற்குச் சார்பாக மிருந்தலை, வெசகிரி போன்ற இடங்ககளில் கிடைத்த காலத்தால் முந்திய பிராமிச் சாசனங்களைச் சான்றாக எடுத்துக்காட்டினர். அண்மையில் அநுராதபுரத்தில் ஆய்வு மேற்கொண்ட சிரான் தெரணியகல பெருங்காற்கால பண்பாட்டுச் சான்றுகளுடன் இணைந்திருந்த மட்பாண்டங்களில் பல பிராமிச்சாசனங்களைக் கண்டுபிடித் தார். இதன் காலம் கி,மு. 600 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பௌத்தம் பரவுதற்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் நாட்டில் இருந்து பரவிய வரிவடிவம் இலங்கை யில் பயன்படுத்தப்பட்டமை தெரியவருகின்றது. இதன் மூலம் தமிழகத்தைப் போல இங்கும் பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் தமிழகத்தில் கொண்ட தொடர்பால் தமிழ் மொழிப்பயன்பாடு ஏற்பட்டதெனக் கூறலாம். இதற்கு பூநகரியில் கிடைத்த தமிழ்ப் பிராமிச்சாசனங்கள் சிறந்த எடுத்துக்காட் டாகும். இவை அனைத்தும் பௌத்தத்திற்கு முந்திய மக்களும், அதற்குரிய பண்பாடும் தென்னிந்தியா சிறப்பாக தமிழ் நாட்டிலிருந்து புலம்பெயர்ந்ததை தெளிவாகப் புலப்படுத் துகின்றன. இத்தகைய மக்களுக்குரிய பண்பாட்டோடு கி.மு. 3ம் நூற்றாண்டில் பௌத்த மதமும், அதற்குரிய பாளி, பிராகிருத மொழியும் கலந்ததன் விளைவே பிற்காலத்தில் மொழி யடிப்படை சிங்கள இனம் தோன்றக் காரணமாகும். இதனால் இலங்கையின் வரலாற்றுக்கால ஆரம்பத்தோடு (பௌத்தத்தின் வருகையைத் தொடர்ந்து) இரு இனங்களின் வரலாறு தொடங் குகின்றது. அதில் தமிழரின் வரலாறு பிற்காலத்தில் பௌத்தமதம் தொடர்பாக தோன்றி பாளி இலக்கியங்களிற் பௌத்த பண்பாட்டோடு ஒன்றிணைந்தும், உள்வாங்கப்பட்டும் திரிவு படுத்தப்பட்டும், கூறப்பட்டுள்ளன. அவற்றை வேறுபடுத்தி இனங்காண்பதில் தான் தமிழ் மக்களின் வரலாறு தெளிவு பெறும்.

பயணத் தொடரும்...

நன்றி: வெளிச்சம் – சித்திரை 1995




## கந்தரோடையில் பெருங்கற்கால மட்பாண்டங்களில் காணப்படும் குறியீடுகள் சில






## திஸ்ஸமாகாரமவில் காணப்பட்ட மட்பாண்ட பிராமி சாசனம்



## ஈமத்தாழி பொம்பரிப்பு புத்தளம்

# சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே “மகாவம்சம்”

# மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது

# இலங்கை தொடர்பான மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மனித உரிமைகள் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் தொடர்பில் முக்கியமான கரிசனைகளை எழுப்பியுள்ளது – இந்தியா –

மார்ச் 05, 2022



இலங்கை தொடர்பான மனித உரிமை ஆணையாளரின் அறிக்கை மனித உரிமைகள் நல்லிணக்கம் பொறுப்புக் கூறல் தொடர்பில் முக்கிய கரிசனைகளை எழுப்பியுள்ளது என இந்தியா தெரிவித்துள்ளது.

நிகழ்ச்சி நிரல் 2 இன் கீழ் இந்தியாவின் அறிக்கை: மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வின் போது (28 பெப்ரவரி - 1 ஏப்ரல் 2022) இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவிப் பதற்கான OHCHR இன் எழுத்துப்பூர்வ அறிக்கையின் கலந்துரையாடலில், தூதுவர் இந்திராமணி பாண்டே இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளின் இலங்கை தொடர்பான அறிக்கை இலங்கையில் நல் லிணக்கம் பொறுப்புக்கூறல் மனித உரிமைகள் தொடர்பில் முக்கியமான கரிசனைகளை எழுப்பியுள்ளது என இந்தியா மனித உரிமை பேரவையில் தெரிவித்துள்ளது.

மனித உரிமை ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கையையும் அவரது வாய்மூல அறிக்கையையும் நாங்கள் கருத்தில்கொண்டுள்ளோம் நண்பன் மற்றும் அயல்நாடு என்ற அடிப்படையில் இலங்கையில் தமிழர் களின் நலன்களை பாதுகாப்பது தொடர்பான அர்ப்பணிப் புகளை இலங்கை நிறைவேற்றவேண்டும் என தொடர்ச் சியாக வேண்டுகோள் விடுத்து வந்துள்ளோம் என இந்தியா தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் நியாயபூர்வமான அபிலாசைகளிற்கு தீர்வை காண்பதற்கான அவசியமான நடவடிக்கைகளை இலங்கை எடுக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள இந்தியா தமிழ் மக்களின் நீதி சமத்துவம் கௌரவம் ஆகியவற்றிற்கான அபிலாசைகளிற்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை காண்பது இலங்கையின் சொந்த நலனுடன் தொடர்புபட்ட விடயம் எனவும் இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் அரசமைப்பின் 13 வது திருத்தத்தின் ஊடாக உட்பட அர்த்தபுஸ்டிமிக்க அதிகாரபகிர்வினை முன் னெடுப்பதாக இலங்கை அளித்துள்ள வாக்குறுதிகளும் இந்த விடயத்திற்கு பொருந்தக்கூடியவை என இந்தியா தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை மற்றும் நல்லிணக்கப் பிரச்சினைகளின் பல்வேறு அம்சங்களில் சர்வதேச சமூகம் மற்றும் பிற தொடர்புடைய அமைப் புகளுடன் இலங்கை அரசாங்கம் ஈடுபட்டுள்ளதை இந்திய தூதுக்குழு கவனத்தில் எடுத்துள்ளது. சம்பந்தப்பட்ட தரப்புகளோடு இதுபோன்ற ஈடுபாட்டுடனான ஆக்கபூர்வ மான மற்றும் பிரயோசனமளிக்கும் உரையாடல்கள் தொடர வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.என இந்தியா தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப் புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் விடயங்களில் முன் னேற்றம் பற்றிய முக்கியமான கவலைகளை எழுப்புகிறது. அனைத்து குடிமக்களின் உரிமைகளும் முழுமையாக பாதுகாப்பதற்கும்.

அடிப்படை சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும், நல்லிணக்க செயல்முறையை முன்னெடுத்துச் செல்வது மற்றும் இலங்கையின் அரசி யலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல் படுத்துவது உட்பட, தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை நிவர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இலங்கையை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். என இந்தியா தெரிவித்துள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கான அதன் அர்ப்பணிப்பிற்கு அமை வாக மாகாண சபைகளுக்கான தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு இலங்கை அரசாங்கத்தை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்துவோம். என இந்தியா தெரிவித் துள்ளது






# அரசியல் தீர்வு, நீதி, பொறுப்புக் கூறல்: சிறீலங்கா தொடர்பில் பன்முனைப்பட்ட அனுகுமுறையினை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும்

**நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன்**

மார்ச் 12.2022

தமிழர்கள் மீதான சிங்கள பௌத்த அரசின் கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு வழிவகை செய்ய, பல்முனைப்பட்ட அணுகுமுறையொன்றினை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சிறீலங்கா தொடர்பிலான ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் பாஷேலே அம்மையாரின் அறிக்கை தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

"இராணுவ மயமாக்கல் மற்றும் இன-மதவாதத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகள் சனநாயக அமைப்புக்களை சிதைக்கின்றன" என்ற ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையளரின் கூற்றினை சுட்டிக்காட்டியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், சிறீலங்கா அரசு, அதன் அரச கட்டமைப்புகள், அரச குழுமம் ஆகியன மியான்மர், ஈரான் நாடுகளில் இருப்பது போலவே மதவாத அடிப்படைவாதிகளின் பிடியில் சிக்கியிருப்பதாக தெரிவித்துள்ளதோடு, இந்த கட்டமைப்புக்கள் தமிழருக்கான நீதிக்கும், பொறுபபுக்கூறலுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்துள்ளன என தெரிவித்துள்ளது.

"தண்டனைப் பயமின்மையானது சிறீலங்காவின் கலாச்சாரத்தில் ஊறிப்போன ஒன்று என்பதோடு அதனது அரசியலில் சிங்கள பௌத்தமத இனவாதம் ஆழமாக வேரூன்றியுள்ளது" என்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், சிறீலங்கா நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் அவர்களது அவதானிப்பினையும் இவ்விடயத்தில் சுட்டிக்காட்டியுள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், "கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலுக்கு தடையென்பது அரசியல் திடமின்மை அல்லது செயல் திறனின்மையோ காரணமல்ல என்பதற்கு அப்பால், சிங்கள பௌத்த மத அடிப்படைவாதமே காரணமென்பது தெளிவாகின்றது என இடித்துரைத்துள்ளது.

இவ்வகையிலேயே சிறீலங்கா தொடர்பிலான ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரின் அறிக்கையின் முன்வைத்ததுபோல், பன்னாட்டு சமூகம் சர்வதேச நீதிக்கான நோக்கினை கொள்ளவேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.

மேலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,
ஆணையாளர் தனது அறிக்கையில் பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பாக அதனை உபயோகிப்பதற்கு ஒரு தற்காலிக தடையும் அதன் மீதான அடிப்படை மாற்றங்கள் செய்யப்படவேண்டும் எனவும் கேட்டுள்ளார். (மார்ச் 7ம்-2022) மனித உரிமைகள் கண்காணிப்பகம், (மார்ச் 4-2022) சர்வதேச மன்னிப்புச் சபை ஆகியனவற்றின் வாய்மொழி அறிக்கையிலும், பயங்கரவாத தடைச் சட்டமானது சித்திரவதைகளை ஏதுவாக்கும் வகையில் திரும்ப திரும்ப உபயோகிக்கப்பட்டு வருவதாகவும், அது காணாமல் ஆக்கப்படுவோரை அதிகப்படுத்தும் அபாயத்திற்கு இட்டுச் செல்வதாக கூறியுள்ளது. "பயங்கரவாத தடைச் சட்டம் தமிழரையே அதிகமாக பாதிப்பதாக" மனித உரிமைகள், மற்றும் பயங்கரவாதம் தொடர்பான ஐ.நா. வின் விசேட அறிக்கையாளர் பென் எமர்சன் கூறியுள்ளார்.

1979இல் பயங்கரவாத தடைச்சட்டம் ஒரு சட்டமாக நிலைக்கொண்தில் இருந்து பல மனித உரிமைகள் அமைப்புக்களினாலும் அதனை இரத்துச் செய்யவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியான அதனுடைய இருப்பு, சிறீலங்கா அரசால் உத்தேசிக்கப்பட்டவாறான திருத்தங்களோடு கூட, சிறீலங்காவின் அரசியல்-இராணுவ கட்டமைப்புக்கள் மீதான சிங்கள பௌத்தமத அடிப்படைவாதத்தின் கிடுக்கிப் பிடியினை நிலைப்படுத்தவே செய்யும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் உருவாகியதற்கு காரணமே தமிழர்கள் மீதான இனவழிப்பும், சிங்கள- தமிழ் அரசியல் தலைமைகள் இன முரண்பாடுகளுக்கான தீர்வினை எட்டுமுகமாக எடுக்கப்பட்ட ஒப்பந்தங்களை சிங்கள தலைவர்கள் தொடர்ச்சியாக மீறியதும் தான் என இரா.சம்பந்தன தனது அறிக்கையில்கூறியுள்ளார். சிங்கள பௌத்த இனவாதமே அதன் வேராக இருப்பதே காரணமாகும்.

வழமைபோலவே, ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளரது அறிக்கைக்கு சிறீலங்கா பௌத்த இனவாத அரசு பதிலளிக்கையில், சர்வதேச அமைப்புகளை, குறிப்பாக மனித உரிமைச்சபை, தமது "நாட்டு இறையாண்மை" என்ற கோட்பாட்டின் பின்னின்று தாக்கியும் பயமுறுத்தியும் உள்ளது என தெரிவித்துள்ளது. இது சிறீலங்காவின் சந்தர்ப்பவாதப் போக்கையே காட்டுகிறது, அதாவது, பொருளாதார மேம்பாட்டிற்கு நிதியுதவி, பேரிடர் காலத்தில் தனது மக்களுக்கு தடுப்பூசி போடுதல் என தனக்கு தேவை என வரும்போது, சர்வதேச அமைப்புக்களிடம் செல்வதும், ஆனால் தான் இழைத்த கொடுங்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் என வரும்போது நாட்டின் இறையாண்மை என்ற கேடயத்தினை பாவிப்பதுமாக இருக்கின்றது.

சர்வதேச குற்றங்கள், மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபடும் போது, சிறீலங்கா அரசு இறையாண்மை என்ற அடிப்படையிலான தற்காப்பை இழக்கிறது.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவெனில், சிறீலங்காவின் 1972 இல் உருவாக்கப்பட்ட அதன முதலாவது குடியரசுக்கான அரசியலமைப்பு, அல்லது 1978இல் உருவாக்கப்பட்ட அதன் இரண்டாவது அரசியல் அமைப்பிலோ தமிழர்கள் எவ்வகையிலும் பங்குபற்றவோ அல்லது அதனை ஆதரிக்கவோ இல்லை. அவை தமிழர்களின் பெரும் ஆட்சேபணைகளுக்கிடையே தமிழர்கள் மீது சுமத்தப்பட்டவையாகும். ஆகவே, சிறீலங்கா அரசின் இந்த "நாட்டின் இறையாண்மை"என்ற கோட்பாட்டின் பின்னே தமது கொடூர குற்றங்களை மறைக்கப்பார்ப்பது என்பது ஒரு தார்மீக கபடநாடகம் ஆகும்.

தற்போது சிறீலங்கா அரசானது, இலங்கைத்தீவின் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பகுதிகளான வடக்கு கிழக்கில், தமிழ் பேசும் மக்களை "சிறுபான்மையினராக" ஆக்கும் விதத்தில் குடிப்பரம்பலை மாற்றி அமைக்கும் காரியங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

அமெரிக்காவின் சான்பிரான்ஸிஸ்கோவை தளமாக கொண்டுள்ள ஓக்லண்ட் அமைப்பு 2021 மார்சில் வெளியிட்ட "முடிவற்ற யுத்தம்" என்ற தமது ஆய்வுக் கட்டுரையில் "தமிழர் பெரும்பான்மையாக செறிந்து வாழும் பிரதேசங்களில் வலிந்து மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்கள், இராணுவ வெற்றிச்சின்னங்கள், அகழ்வாராய்வு ஒதுக்கிடங்கள், வன விலங்கு காப்பகங்கள், வன ஒதுக்கிடங்கள் மற்றும் சிறப்பு பொருளாதார பிரதேசங்கள் அமைக்கப் படுகின்றன. இவை யாவுமே, தமிழர்களது பிரதிநிதிகளிடம் சம்மதமோ அல்லது எந்த விதமான ஆலோசனைகளும் தமிழர் தரப்பிடம் பெறப்படாமலே, தமிழர்களது நிலங்களை அபகரிக்கும விதமாகவும், அவர்களது அரசியல் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் விதமாகவும், மற்றும் அவர்களது அடையாளத்தினையே துடைத்து அழிக்கும் வகையிலும் தெளிவான ஒரு நோக்கில் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் சிறீலங்கா அரசாங்கம் சிங்கள மக்களது விகிதாசாரத்தினை அதிகரிக்கும் விதமாக சிங்கள கிராமங்களை தமிழ் மாவட்டங்களோடு இணைக்கும் வகையில் எல்லைகளை மறுசீரமைக்கிறார்கள். இது சிறீலங்காவின் அதிகமாக சிங்களவரைக் கொண்ட இராணுவம் தமிழர் பிரதேசங்களில் நிலைகொண்டுள்ளமையால் சாத்தியப்படுகிறது. இந்த தமிழர் தாயகத்தின் நிலம் அபகரித்தலால் தமிழ் மக்களது தனித்துவமான அடையாளம் அற்றுப் போய்விடும்.



தமிழரின் அரசியல் எதிர்காலத்தினை தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்புக்கான கோரிக்கை தொடர்பில் ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளருக்கு ஐந்து தமிழ் அரசியல் கட்சிகளால் அனுப்பப்பட்ட கடிதத்தை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கவனத்தில் கொள்கின்றது. ஆயினும், நாட்டில் நிலவும் சரித்திர பூர்வமான சிங்கள பௌத்தமத அடிப்படைவாதம், அத்துடன் சிங்கள தலைவர்கள் அவர்கள் இழைக்கும் கொடூர குற்றங்களுக்கு தண்டனைப் பயமின்மை மற்றும் தமிழர்களை பரவலாக துன்புறுத்துதல், தமிழரது அடையாளங்களை அழித்தல் என்பவற்றை மனதில் கொண்டு, தமிழர்தாம் இங்கே பாதிக்கப்பட்டவர்கள் என்ற நிலையில் அவர்களது அரசியல் எதிகாலத்தை தீர்மானிப்பதற்கு அனுமதிக்க வேண்டும்.

ஆகையினால், ஐ.நா மனித உரிமைச்சபை ஆணையாளர் பாஷேலே அம்மையாரின் அறிக்கைக்கு சர்வதேச சமூகம் கவனம் கொடுத்து சிறிலங்கா அரசு பொறுப்புக்கூறும் வண்ணம் ஒரு மாறுபாடான ஏற்பாட்டை எடுப்பதன் பேரில் இலங்கைத்தீவில் தமிழருக்கான அரசியல் தீர்வு, நீதி, மற்றும் பொறுப்புக் கூறல் என்பவற்றை சாத்தியமாக்க பல்முனைப்பட்ட அணுகுமுறையொன்றினை சர்வதேச சமூகம் முன்னெடுக்க வேண்டும்என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கோரியுள்ளது.



# உலக வணிகம்
# ULAGA VANIKAM
# 2022

## வெளிவந்துவிட்டது

இப்பொழுது அனைத்து தமிழர்
வியாபர நிலையங்கள், உணவகங்கள், கோவில்கள்
அலுவலகங்களிலும் **‘உலக வணிகம் 2022’**
கையேட்டினை
பெற்றுக்கொள்ளலாம்.




மேலதிக தொடர்புகளுக்கு: **437.345.4203**